REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 17 நவம்பர் - டிசம்பர் 2010 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 133

**வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு** | **சம்பள உயர்வு மறுப்பு** | **வசதியானோருக்கு வாய்ப்பு வசதி** | **அந்நிய முதலீட்டிற்கு செங்கம்பளம்**

# மக்களை வாட்டி வதைக்கும் வரவு செலவுத் திட்டம்!

2011ம் ஆண்டிற்கான மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டது. விவாதம் சில வாரங்களாக நடந்தப்பட்டு பெருபான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. நிறைவுரையையும் ஜனாதிபதியானவரே பாராளுமன்றத்தில் ஆற்றினார். இவ்வரவு செலவுத் திட்டத்தை மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் போற்றிப் புகழ்ந்து வாக்களித்து நிறைவேற்றினர். ஐக்கிய தேசியக் கட்சி தனக்கு அளவான அளவில் பேசிக் கொண்டது. ஜே.வி.பி. தனது இருப்பிற்கு ஏற்றவாறு வரவு செலவுத் திட்டத்தை விமர்சனம் செய்து மக்களுக்கு உள்ள நெருக்கடிகளை எடுத்துக் கூறியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது நல்லெண்ணத்தைக் காட்ட வரவு செலவுத் திட்டத்தை எதிர்ப்பதில்லை எனக் கூறி விலகி நின்றது.

அரசாங்கத் தரப்பில் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்தவர்கள் மத்தியில் வடக்கு கிழக்கின் தமிழ் முஸ்லீம் பிரதிநிதிகள்- அமைச்சர்கள் அடங்குவர். மலையக மக்களின் பிரதிநிதிகள் எனப்பட்டவர்கள் வாழ்த்தி உற்சாகமாக வாக்களித்தனர். இடதுசாரிககள் எனத் தம்மை இன்னும் கூறிக் கொள்வோர் சிறு முறையீடுதானும் செய்யாது வாக்களித்து தமது வக்கரித்த விசுவாச நிலைப்பாட்டைத் தொடர்ந்தனர். இவ்வாறு இன்றைய பாராளுமன்றத்தின் ஒரு சில உறுப்பினர்கள் தவிர்ந்த அனைவரும் இந்நாட்டின் ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களுக்கு கடும் சுமைகளையும் துன்ப துயரங்களையும் வாழ்க்கை நெருக்கடிகளையும் ஏற்படுத்தி நிற்கும் வரவு செலவுத் திட்டத்திற்கு எத்தகைய சலனமும் இன்றி வாக்களித்தனர். இவர்களுக்கு பொருட்களின் நாளாந்த விலை அதிகரிப்புகளோ வாழ்க்கைச் செலவின் உயர்வுகளோ பற்றி அக்கறை கிடையாது. ஒரு காலத்தில் வரவு செலவுத் திட்ட விவாதம் என்பது இடதுசாரிகளினால் ஜனநாயகவாதிகளால் மக்கள் சார்பாக நின்று கர்ண கடூர அம்பலப்படுத்தல்கள், தோலுரிப்புக்கள், கண்டனங்கள் எனக் கணைகள் தொடுக்கப்படும். இதனால் ஆளும் தரப்பில் அல்லாடி நிற்கும் நிலையே முன்பு இருந்து வந்தது. ஆனால் நடந்து முடிந்த விவாதங்களில் அவ்வாறான எதுவுமே இடம்பெறவில்லை. ஜனாதிபதியின் லண்டன் பயணத்தைத் பற்றி ஆக்கிரோசத்துடன் அரச தரப்பிலும் எதிர்த்தரப்பிலும் பேசப்பட்ட அளவுக்கு வாழ்க்கைச் செலவு உயர்வு, பொருட்களின் விலை உயர்வு, சம்பய உயர்வு மறுக்கப்பட்டமை பற்றி எவரும் அவ்வாறு ஆக்கிரோசப்பட்டுப் பேசவில்லை. தொழிலாளர் சார்பானவர்கள் மக்கள் சார்பானவர்கள் என்ற பழைய போர்வை போத்தியோர் கூட 'நக்குண்டார் நாவிழந்தார்' என்பது போன்றே நடந்து கொண் டனர்.



இன்று அன்றாட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் விலை அதிகரித்த வண்ணமே உள்ளன. சீனி, அரிசி. மா, மிளகாய், புளி, தேங்காய், தானியவகைகள், வெங்காயம், மரக்கறி வகைகள் யாவும் கிலோ நூறு ரூபாயில் இருந்து அதற்கு மேற்படவே விற்பனையா கின்றன. அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலை எழுபது என ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டது. தரமற்ற அரிசி கூட அவ்வாறு சந்தையில் விற்கப்பட வில்லை. பாணின் விலை ஆகக் குறைந்தது நாற்பதி நான்காகவே உள்ளது. விறகு முதல் எரிவாயு வரை யானை விலையாகவே உள்ளன. குழந்தைகளுக்கான பால்மாவும் வளர்ந்தோரு க்கான பால்மா வகைகளும் குதிரை விலையாகவே விற்கப்படுகின்றன. இத்தகைய விலை உயர்வுகளை தொழிலாளர்களும் விவசாயிகளும் அரசாங்கத் தனியார்த்துறை

2ம் பக்கம் பார்க்க



# தேசிய கீதத்தைத் தமிழில் பாடத் தடையா?

## புதிய -ஜனநாயக மாக்சிச - லெனினிசக் கட்சி கண்டனம்

தேசிய கீதத்தை சிங்கள மொழியில் மட்டும் பாடுதல் வேண்டும். தமிழில் பாடக் கூடாது என அண்மையில் அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளமை ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் பேரினவாத நிலைப்பாட்டை வெளிப்படுத்க்ம் ஒரு முடிவேயாகும். இதன் மூலம் இனங்களுக்கிடையில் கசப்புணர்வு மேலோங்கவும் இன மோதல் தோற்றுவிக்கப்படவும் கூடிய சூழலே உருவாகும். எனவே மேற்படி தீர்மானத்தை எமது புதிய-ஜனநாயக மாக்சிச - லெனினிசக் கட்சி வன்மையாகக் கண்டித்து நிராகரிக்கின்றது. அத்துடன் மேற்படி தீர்மானத்தை அரசாங்கம் கைவிடவேண்டும் என வற்புறுத்துகின்றது.

இவ்வாறு புதிய - ஜனநாயக மாக்சிச - லெனினிசக் கட்சியின் அரசியல் குழு சார்பாகப் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளர்.

மேலும் அவ் அறிக்கையில், கடந்த அறுபத்திரண்டு வருடகால பாராளுமன்ற - நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையின் கீழ் பெரும்பான்மையின் பெயரால் எடுக்கப்பட்டு வந்த பேரினவாத முடிவுகளும் செயற்பாடுகளும் தான் நாட்டின் இன்றைய அவல நிலைக்கு அடிப்படையாகும். அதன் விளைவே தேசிய இனப் பிரச்சினை இன்றும் பிரதான பிரச்சினையாக இருந்து வருகிறது. இத்தகைய சூழலில் அதற்கு நியாயமான அரசியல் தீர்வை முன்வைத்து இனங்களுக்கிடையே புரிந்துணர்வு ஐக்கியம் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டிய ஜனாதிப தியும் அரசாங்கமும் அவற்றுக்கு வேட்டு வைப்பது போன்று முற்றிலும் இனவாத அடிப்படையைக் கொண்ட சிங்களத்தில் மட்டும் தேசிய கீதத்தைப் பாடும் தீர்மானத்தை எடுத்திருப்பது கண்டனத்திற்குரியதாகும். இத்தகைய மலிவான இனவாதத் தீர்மானங்கள் மூலம் சிங்கள மக்கள் முன் எழுந்து நிற்கும் பாரிய பொருளாதாரப் பிரச்சினைகளைத் திசைதிருப்பி வைத்திருக்க மட்டுமே உதவக் கூடியதாகும். அத்துடன் ஐக்கியப்பட வேண்டிய தமிழ், சிங்கள, முஸ்லீம், மலையகத் தமிழ் உழைக்கும் மக்களிடையே குறுகிய இனக் குரோத உணர்வுகள் தூண்டப்படுவதற்கும் களம் அமைக்கப்படுகிறது. அதன் மூலம் உழைக்கும் வர்க்க மக்களைப் பிளவு படுத்தி பேரினவாத முதலாளித்துவ ஆட்சி அதிகாரத்தை நீடித்துக் கொள்ளும் ஒரு வழிமுறையாகவும் தேசிய கீதம் பற்றிய முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றே கொள்ள முடியும்.

### பாதுகாப்புக்கு

● வரவு செலவுத் திட்டத்தில் முப்படைகள் பொலீஸ் மற்றும் பாதுகாப்புத் துறையினருக்கு இருபதினாயிரத்து ஒன்பது கோடி ரூபாய்கள் (209 பில்லியன்) ஒதுக்கப்பட்டுள்ளது. வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய தொகை இதுவாகும். நாடு எதை நோக்கி இழுத்துச் செல்லப்படுகிறது.

### பெண்கள்

● வடக்கு கிழக்கில் மட்டும் 89 ஆயிரம் கணவன்மாரை இழந்த பெண்கள் உள்ளனர். இதில் வடக்கில் 40 ஆயிரம் பேரும் கிழக்கில் 49 ஆயிரம் பேரும் உள்ளனர். யுத்தம், சுனாமி, இனமோதல், வறுமை, இயக்க மோதல் போன்ற காரணங்களால் தமது கணவன்மாரை இழந்த பெண்கள் வெறுமையும் வறுமையும் கொண்ட நிலையில் வாழ்ந்து வருகின்றனர். ஒன்று முதல் நான்கு வரையான குழந்தைகளையுடைய இப் பெண்களில் பெரும்பான்மையோர் 35 வயதிற்கு உட்பட்டோராவர்.

### ஊடகக் கொலைகள்

● 1990ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ம் திகதி றிச்சாட் டி சொய்சா என்ற ஊடகவியலாளர் கொலை செய்யப்பட்டார். அன்று முதல் 2009ம் ஆண்டு மார்ச் மாதம் 06 திகதி சசிமதன் வரை மொத்தம் 41 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 34 பேர் தமிழர்கள், முஸ்லீம்கள் இருவர். 5 பேர் சிங்களவர். அனாதரவான நிலைக்குத் தள்ளப்பட்ட இவ் ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கு யார் உதவுவது.

### அபிவிருத்தி

● இம் மாதம் முடிவிற்குள் 2500 தொன் கோழி இறைச்சியும், 50 மில்லியன் கோழி முட்கைளும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதற்கு மேன்மை தாங்கிய அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அத்துடன் தேங்காய்களும் பெரும் எண்ணிக்கையில் இறக்குமதியாக்கப்பட்டுள்ளது. நாடு அபிவிருத்திப் பாதையில் வீறு நடை போடுவதாக அமைச்சர் பெருமக்கள் அடிக்கடி திருவாய் மலர்ந்தருளி வருகின்றனர்.

### அமைச்சர் கூறுகிறார்

● அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் என்ன செய்கிறது என்பது எமக்குத் தெரியும் ஆனால் அதுபற்றி நாம் அவர்களிடம் எதுவும் கேட்கமாட்டோம். ஏனெனில் அது அவர்களது உள்நாட்டுப் பிரச்சினையாகும். அதே போன்று எங்களிடமும் அமெரிக்கா எதையும் கேட்கக் கூடாது. இவ்வாறு முன்னாள் பிரதமரும் இந் நாள் அமைச்சருமான ரத்தினசிறி விக்கிரமநாயக்கா பொதுவைபவம் ஒன்றில் பேசியுள்ளார். அதாவது அமெரிக்கா ஆப்கானிஸ்தானிலும் இலங்கை அரசாங்கம் இலங்கையிலும் செய்வது ஒன்றே தான் என்பதை அமைச்சர் ஒப்புக் கொள்கிறாரா?

### தமிழ் அரங்கம்

● தமிழ் அரங்கத்தில் நடிக்கும் கட்சிகளின் தலைவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்ப பாராளுமன்ற நடிகர்களும் (பச்சை மண்ணும் சட்டமண்ணாக இருந்தவர்கள்) கொழும்பில் ஒன்று கூடி வாய்விட்டுச் சிரித்து மகிழ்ந்து பேசினர். எதற்காகக் கூடினார்கள் என்பது தான் தமிழ் மக்களிடையேயான கேள்வி முன்பு சுவிச்சிலாந்திலும் கூடிக் குலாவி கலைந்தனர். இப்போதும் அதே எசமானரின் விருப்பத்திலா? அல்லது நியாயமான அரசியல் தீர்வுத் திட்டத்தை முன் வைப்பதற்காகவா? சிறிது பொறுத்திருந்து பார்ப்போம்.

### காதல் கடிதங்கள்

● தமிழ் நாடு முதலமைச்சர் மு.கருணாநிதிக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் அன்புறவு அதிகம். அடிக்கடி அவர்களிடையே கடிதப் பரிமாற்றம் இடம் பெறும். முக்கியமாக இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றியதாகவே அவை அமையும். அண்மையில் இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் யாழ்ப்பாணம் சென்று தமது பணிமனையைத் திறந்து சென்றார். அவர் ஊடகங்களுக்க கூறும் போது "அரசியல் தீர்வுக்கு இலங்கை அரசிற்கு அதிகம் அழுத்தம் தரமுடியாது" என்றார். இதன் பின் பிரதமர் மன்மோகன் சிங் கருணாநிதிக்கு எழுதிய கடிதத்தில் விரைவில் இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கிட்டும். அதற்கு தாம் ஆவன செய்தவதாகவும் எழுதியிருந்தார். இவர்களுக்கிடையிலான காதல் கடிதத் தொடர்புக்கு கிடைத்த கருப்பொருள் இலங்கைத் தமிழர் அவலம் தான் என்பதை விட வேறெதுவும் இருக்க முடியாது.





## புதிய நீதியமைச்சரும்

# தடுத்துவைக்கப்பட்டோரின் விடுதலையும்

புதிய நீதி அமைச்சராக சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் நியமனம் பெற்றுள்ளார் அவரது அண்மைய உரை யொன்றில் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை அல்லது பிணையில் விடுவிப்பது பற்றிப் குறிப்பிட்டார் இதனால் சிறைக்குள் இருப்போரும் வெளியே உள்ள உறவினர்களும் எதிர்பார்ப்பு ஆறுதல் அடைந்தனர். ஆனால் அமைச்சரின் கூற்று கடந்தகால அமைச்சர்களின் கூற்றுப்போல வெறும் கதையுடன் நின்று விடுமா அல்லது ஏதாவது செயற்பாட்டிற்கு வருமா என்றே

எதாவது அர்த்தமுள்ள வகையில் செய்யமுடியும். ஆனாலும் அவர்தனது அதிகாரப் பரப்பினுள் எந்தளவிற்கு செய்ய முடியும் என்பதே பிரச்சினை அவருக்கும் மேலே உள்ள அதிகாரக் கரங்கள் அமைச்சரை சுயாதீனமாக முடிவுகள் மேற் கொண்டு செயற்பட அனுமதிக்குமா என்பது முக்கியமான தொன்றாகும்.

ஆனால் புதிய நிதியமைச்சர் தயங்காது அல்லது தட்டிக் கழிக்காது நீண்டகால விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டவர்களின் அடிப்படை உரிமைகளை நியாமான வழிகளில் அனுகித் தீர்க்க வேண்டும் என்பதே இங்கு வற்புறுத்தப் படுகிறது. இவ்வாறு 3,5,10,15 வருடங்களாக சிறையில் இருந்து வரும் 700க்கு மேற்பட்ட தடுத்து வைக்கப்பட்டோரின் விடுதலைக்கு புதிய நீதியமைச்சர் ரவ்வூஃ ஹக்கீம் தனது முழு முயற்சி எடுப்பதையே உள்ளேயும் வெளியேயும் பாதிக்கப்பட்டோர் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

புதிய - ஜனாநயக மாக்சிச- லெனினிச கட்சியின் முன்னனித் தோழர்களான சுகேசனன் 3 வருடங்களாகவும் பிரதீபன் 2 வருடங்களாகவும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் இவர்களினதும் ஏனையேரினதும் விடுதலைக்குத் தொடர்ந்து போராடுவோம் .

1ம் பக்க தொடர்ச்சி

மக்களை வாட்டி

ஊழியர்களும் தாங்கிக் கொள்ளவியலாது தத்தளித்த வண்ணமே உள்ளனர். வறுமை, இல்லாமை, போதாமை, பெற முடியாமை போன்றவற்றால் ஏகப் பெரும்பான்மையான மக்கள் துன்பச் சுமைகளை அனுபவித்த வண்ணம் உள்ளனர்.

ஆனால் மக்களின் வாக்குகளைப் பல்வேறு வாக்குறுதிகள் வழங்கிப் பெற்றுச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று மக்களது அன்றாட வாழ்க்கையைப் பாதித்துக் கொண்டிருக்கின்ற வாழ்க்கைச் செலவுப் பிரச்சினைகள், சம்பள உயர்வு பற்றிப் பேசாது ஆளுவோருக்கு விசுவாச சாமரை வீசி வருகின்றனர். இந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொடுத்த சம்பளங்கள் மற்றும் சலுகைகள், வரியற்ற ஆடம்பர வாகனங்கள் யாவும் கிடைத்து வருகின்றன. மேலும் தமது பதவியைப் பயன்படுத்தி அரசாங்கத்திடமிருந்து வாங்கி வலிக்கக் கூடிய அனைத்தையும் பெற்றுத் தம்மைச் சுகபோகத்திற்குள் வைத்துள்ளனர். இதனாலேயே பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் மக்கள் விரோதச் செயற்பாடுகள் அனைத்திற்கும் துணை போகின்றனர். இதுதான் சொத்துடைய வர்க்க சுகபோக ஆளும் வர்க்க அரசியலாகும். இதில் இன, மத வேறுபாடு கிடையாது என்பதே உண்மையாகும்.

மேலும் இவ் வரவு செலவுத் திட்டம் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கியுள்ள ஐந்து சதவீத அற்ப சம்பள உயர்வும் அறுநூறு ரூபா வாழ்க்கைச் செலவுப் படியும் வெறும் கண்துடைப்பாகும். இது கூடத் தனியார் துறையினருக்கு வழங்கப்படவில்லை. அத்தியாவசியப் பொருட்களின் அதிகரித்துச் செல்லும் விலை உயர்வுக்கு அரசாங்கம் விதிக்கும் அதிக வரிகள் ஒரு காரணமாகும். அதே வேளை முதலீட்டாளர்களுக்கும் ஏற்றுமதியாளர்களு க்கும் வரிச் சலுகைகள் வழங்கப்பட்டு அவர்கள் குளிர்விக்கப்பட்டுள்ளனர்.

உலகின் ஏகாதிபத்திய நிதி நிறுவனமான சர்வதேச நாணய நிதியம் இவ் வரவு செலவுத் திட்டத்தைப் புகழ்ந்து வரவேற்றுள்ளது. இது எதனைக் காட்டுகிறது. மக்களுக்கு எவ்வித நன்மையும் சலுகையும் வழங்காது முதலாளித்துவத்திற்கும் பல்தேசிய நிறுவனங்களுக்கும் முழுமையான வாய்ப்பு வசதிகளை வழங்கி நிற்கும் தன்மையினையே எடுத்துக் காட்டுகிறது.

இவ்வரவு செலவுத் திட்டம் பாதுகாப்பிற்கு இருபதினாயிரம் கோடி ரூபாவை ஒதுக்கி நிற்கிறது. இதில் தான் மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, நகர அபிவிருத்தி என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படு கிறது. அப்படியாயின் வடக்கு கிழக்கின் மீள் குடியே ற்றம் புனர்வாழ்வு புனரமைப்பு என்பன பாதுகாப்புத் தரப்பினரிடமே தொடர்ந்த இருக்கப் போவதையே இது எடுத்துக் காட்டுகிறது.

ஆதலால் நிறைவேற்றப்பட்ட 2011ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் முதலாளித்துவத்தையும் பேரினவாதத்தையும் அந்நிய ஏகாதிபத்திய சக்திக ளையும் மையமாக வைத்து அவர்களது நலன் பேணும் ஒன்றாகவே காணப்படுகிறது. இந்நாட்டின் அனைத்து உழைக்கும் வர்க்கத்திற்கும், ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கும் எதிரான ஒரு வரவு செலவுத் திட்டம் என்பதில் எவ்வித ஐயமும் இருக்க முடியாது.

## காணமல் போன ஒருவர்!

ஆனால் இன்றைய அமைதிச் சூழலில் ஒருவர் காணாமற் போயிருக்கிறார்

அவர் மலையகத்தைச் சாராத மலையக எம்.பி.யாவர்.

மலையகத்தின் தலைவர்களுள் ஒருவராக்கப்படுவதற்காகவே ஒரு ஊடக மகராசா ஊட்டி வளர்த்தை பிள்ளை காணாமற் போய்விட்டது. மலையகம் எங்கும் சல்லடை போட்டுத் தேடியும் ஆளை இன்னமும் அகப்படவில்லை. அவருடைய சாயலில் ஒருவரை இப்போது வடக்கிலும் வன்னியிலும் இடையிடை காணுவதாகச் சொல்லப்படுகிறது. அவர்தான் இவரா என்று யாராவது சொன்னால் உதவியாய் இருக்கும்.

## மு. பொய்யின்பலம் மீண்டும் எழுதுகிறார்.

தனக்குப் பங்கில்லை என்று அ. யேசுராசா முன்பு மறுத்து எழுதியதும் குறிப்பிடத் தக்கது.

சில காலம் முன்பு புலம்பெயர்ந்த இடதுசாரி எதிர்ப்பு எழுத்தாளர் முத்துலிங்கம் எவ்வாறு கைலாசபதி தன்னை எழுதுமாறு ஊக்குவித்தார் என்பதைத் தீராநதி என்ற இந்திய ஏட்டில் எழுதியதையும் மேற்படி மனிதர் வாசித்திருப்பார்.

ஆனாலும், மறுபடியும் தினக்குரலில் தனக்குக் கிடைத்துள்ள இடத்தை பாவித்துக் கைலாசபதி இடதுசாரிகளுக்கு மட்டுமே

விட்டுள்ளார்.

எங்கே போய் முட்ட!

## நாலு நடக்கும் உலகிலே

நற்குணன்

## அரசியல் கலப்பற்ற(?) இலக்கிய மாநாடு

உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாடு பற்றி சர்ச்சைகள் உள்ளன. அதைப் பற்றிய சில கேள்விகட்கு விடை பெறும் போது, பல தமிழறிஞர்களும் பங்குபற்றிய ஒரு கூட்டத்திலேயே மாநாடு பற்றிய அனைத்து முடிவுகளும் எடுக்கப்பட்டன என்று அதன் ஏற்பாட்டாளர்களில் ஒருவர் கூறியிருந்தார்.

மாநாட்டில் அரசியல் பேசக் கூடாதென்று அதன் ஏற்பாட்டாளர்கள் சார்பாகக் கூறப்பட்டிருந்தது. பிறகு குறுக்கு விசாரணையின் பின்பு சில வகையான அரசியல் பற்றி விலக்களிக்க இடமிருக்கும் என்ற தோரணையில் பதிலளித்திருந்தார். ஆனால் திட்டவட்டமாக எதையும் கூறவில்லை.

மாநாட்டில் அரசியல் தவிர்க்கப்பட வேண்டும் என்ற திட்டவட்டமான முடிவு சொல்லப்பட்ட ஏற்பாட்டுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவா என்பதைப் பங்குபற்றிய யாராவது தெளிவுபடுத்துவார்களா?

## எசமான் கட்டளைப்படி நடத்தல்

கற்ற பாடங்கள், நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் முன்பு சாட்சியமளித்துப் பயனில்லை என்று கருத்துக் கூறிய தமிழர் தேசியக் கூட்டமைப்பு இப்போது பாட்டைக் கொஞ்சம் மாற்றிப் பாடுகிறது.

அவர்கள் இப்போது சாட்சியமளிப்பார்கள். இந்த மனமாற்றத்திற்கான காரணம் இன்னமும் மக்களிடம் சொல்லப்படவில்லை.

அவர்கள் சொல்லாவிட்டாலென்ன? எல்லாருக்கும் தெரிந்த கதைதானே. வழமை போல, எசமானர்கள் தான் அவர்களது மனதை மாற்றினார்கள் என்பது தெரியாத விடயமா?

என்றாலும் இனியாவது காலைச் சாப்பாடு முதலாக கழிப்பறைக்குப் போவது வரை அனைத்து முடிவுகளையும் எசமானர்களிடம் முன்கூட்டியே கேட்டு அதன்படி எடுத்தால் சிக்கல் இல்லை அல்லவா. வசதியாக இப்போது எசமானர்கட்கு ஒன்றுக்கு நாலு முகவரகங்கள் நாட்டில் உள்ளனவே.

## அச்சமா, ஆணையா?

நல்லிணக்க ஆணைக்குழுவின் மூலம் மக்களுக்குப் பயனுள்ள எதுவும் நடவாது என்பது எல்லாரையும் விட அரசாங்கத்துக்கும் அதன் எடுபிடிகளுக்கும் தெரியவேண்டும்.

ஆனாலும் வடக்கில் சாட்சியமளிக்காமல் மக்கள் மறிக்கப்படுகின்றார்கள். விசாரணைக்கு வருவோர் கண்காணிக்கப்படுகிறார்கள். சாட்சியளித்தோர் மிரட்டப்படுகிறார்கள். புகைப்படம் எடுத்த தமிழ்ச் செய்தியாளர்களை தாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சிலர் விசாரணை நடக்கும் இடங்களுக்கு ஆயுதங்களுடன் போயிருந்ததாகவும் தெரிய வருகிறது.

விசாரணைகள் நம்பகமான முறையில் நடக்க வேண்டுமானால் மக்கள் பெருமளவில் பங்கு பற்ற வேண்டும். அதன் பின்பு ஆணைக்குழு எதை எழுதும் என்பது வேறு கதை.

தோற்றப்பாடான நம்பகத் தன்மையே சீர்குலைக்கும் விதமாகச் சிலர் நடந்து கொள்ளக் காரணம் என்ன? அரச கட்டளையா, அல்லது வேறு அச்சங்களா?

## தன் வினை தன்னைச் சுடும்?

'ஞானம்' சஞ்சிகை எஸ். பொன்னுத்துரையையும் பிறரையும் பயன்படுத்தி இடதுசாரிகட்கெதிராக அவதூறுகளைப் பரப்பி வந்துள்ளது. கைலாசபதியை இலக்கு வைத்தே கேள்விகள் கேட்கப்பட்டுப் பழைய பொய்களும் புதிய பொய்களுமாகப் பலவும் கூறப்பட்டன. அவை மறுக்கப்பட்ட போதும் அவற்றைக் கண்டு கொள்ளாமலே இந்த 'நடுநிலை' பேணும் ஏட்டின் ஆசிரியர் நடந்து கொண்டார்.

இப்போது முருகபூபதி என்னும் புலம்பெயர்ந்த மூத்த படைப்பாளியும் ஞானம் ஆசிரியர் ஞானசேகரனும் இணைந்து ஒரு சர்வதேச மாநாட்டை நடத்த முற்பட்டுள்ள வேளையில் அது அரசாங்கத்திடம் பணம் வாங்கித் தமிழ் மக்களுக்கு இலங்கையில் பிரச்சினையே இல்லை என்று பிரசாரம் செய்கிற நோக்கில் திட்டமிடப்பட்ட மாநாடு என்ற குற்றச்சாட்டும் பிற குற்றச்சாட்டுக்களும் எஸ். பொன்னுத்துரையால் தொடக்கி வைக்கப்பட்டு அவை காட்டுத் தீ போல் பரவி விட்டன.

பொன்னுத்துரை எதையுமே சமூக நன்மை கருதிச் சொல்லுபவர் அல்ல. அவர் சொல்லுகிற விடயங்களுக்கு எந்த ஆதாரமுமே தேவையில்லை. அவருடைய தனிப்பட்ட கோபதாபங்களை விட அவரது சொற்கள் வேறு நோக்கங்களை நிறைவேற்றுவதில்லை.

அதனால் அவர் சொல்லுகிற கதைகள் உண்மையா பொய்யா என்ற முடிவுக்கு யாரும் வர முடியாது. எனினும் பொய்களே அதிகம் என்பதில் நமக்கு ஐயமில்லை.

எஸ். பொன்னுத்துரை ஞானத்தின் ஆசிரியர் மீது இப்போது கைவைத்துள்ளார். தன்னைச் சாடையாக விமர்சிக்கின்றவர்களுக்கே ஆள் வைத்துச் சாற்றுகிற ஆசிரியர் வாயடைத்துப் போயுள்ளார். இனி ஒருவேளை பொன்னுத்துரை ஒரு பொய்யரென்பதைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்ளக் கூடும். ஆனாலும் பிறரைப் பற்றிச் சொல்லிய பொய்களுக்குத் தானும் உடந்தையாய் இருந்த கதையைச் சொல்ல முடியுமா?

சொல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத சங்கடம் அல்லவா!

## அரசியலில்லாத அரசியல் தலைவர்கள்.

தமிழ் மக்கள் இப்போது தலைமைத்துவம் இல்லாத நிலையில் தடுமாறுகின்றனர். எனவே அவர்களுக்குப் புதிய தலைவர்கள் தேவை என்பதால் இலங்கை அரசாங்கமும், இந்திய அரசாங்கமும் புதிய தலைமைகளை உருவாக்குவதில் போட்டியிடுகின்றன. இந்தத் தலைமைத்துவத்துக்கான குறைந்த பட்சத் தகுதி அவர்களுக்கு அரசியல் இருக்கக் கூடாது என்பதுதான். அதை விட அனைத்துத் தமிழ்க் கட்சிக்கும் வழிகாட்டக் கூடிய ஒரு தலைமை என்ற நிலையில் யாரும் இருப்பதையும் இந்தத் தலைமைகளின் தலைமைகளான இரண்டு அரசாங்கங்களும் விரும்பவில்லை.

எப்படிப் போட்டி இலக்கங்களை உருவாக்கியும் வளர்த்தும் இந்தியா 1980களில் நாடகமாடியதோ அதை மேலும் வெளிப்படையாக இப்போது இலங்கை மண்ணில் செய்கிறது. இந்தியாவின் பாணியிலேயே இலங்கை அரசாங்கமும் செயற்பட்டாலும் மேலும் நரித்தனமாக நடக்க அதனால் இயலுகிறது. பிரதேச ரீதியாகக் கூட ஒரு தனித் தலைமை உருவாகாமல் இருப்பதற்காக தனக்குக் கீழேயே ஒவ்வொரு பிரதேசத்திலும் போட்டித் தலைமைகளை உருவாக்கி வருகிறது.

இந்தியாவுக்கும் சில முகவர்கள் இருந்து வந்துள்ளனர். மேலும் சிலர் போர் முடிந்த கையோடு இங்கு கொண்டு வந்து இறக்கப்பட்டனர். இலங்கை அரசாங்கம் தன்னுடைய கைவரிசையைக் காட்ட இப்போது சிறிரங்கா என்பரை டக்ளஸ் தேவானந்தாவுக்கு மாற்றாகக் களமிறக்கப் பார்க்கிறது.

மக்களுக்குத் தேவை மாற்று அரசியல் தலைவர்கள் அல்ல. மாற்று அரசியல் தான். அதைத் தருவதற்கு இலங்கைஅரசாங்க முகவர்களாலும் இயலாது. இந்திய முகவர்களாலும் இயலாது.

மாற்று அரசியல் மக்கள் நடுவிலிருந்து உருவாகும் போது மக்கள் நடுவிலிருந்து மாற்றுத் தலைமை ஒன்றும் வடிவம் பெறும். அதை யாரும் உருவாக்கவோ உற்பத்தி செய்யவோ வேண்டியதில்லை.

# காணாமல் போதலுக்கு எதிரான 6 வது சர்வதேச லண்டன் மாநாடு



உலக நாடுகளில காணாமல் போதலுக்கு எதிரான ஆறாவது சர்வதேச மாநாடு டிசம்பர் 9ம் திகதி தொடக்கம் 12ம் திகதி வரை லண்டனில் நடைபெற்றது. இம் மாநாட்டை காணாமல் போதலுக்கு எதிரான சர்வதேசக் குழு ஏற்பாடு செய்திருந்தது. இதன் சர்வதேச செயலகம் (ICAD) லண்டனில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்படி மாநாட்டின 26 நாடுகளைச் சேர்ந்த 130 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இலங்கையிலிருந்து புதிய - ஜனநாயக மாக்சிச- லெனினிசக் கட்சியின் பிரதிநிதியாக அதன் சர்வதேச அமைப்பாளர் தோழர். இ. தம்பையா கலந்து கொண்டார்.

டிசம்பர் 9ம் திகதி மாநாடு ஆரம்பித்தது. Light Drops in Darkness என்ற திரைப்படம் காண்பிக்கப்பட்டது.

10ம் திகதி காணாமல் போனவர்களின் உறவினர்கள் தங்களது சோக அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். அதன் பின்னர் 'யுத்தங்களுகும் காணாமல் போகின்றமையும்', 'தேசிய இயக்கங்களும் காணாமல் போகின்றமையும்' ஆகிய தலைப்புகளில் கருத்துரைகளும் கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. அதன் பின் கலை நிகழ்ச்சிகளும் நடை பெற்றன.

டிசம்பர் 11ம் திகதி 'மனித உரிமை மீறல்களும் காணமால் போகின்றமையும்' என்னும் தலைப்பில் கருத்துரைகள் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. அத்துடன் பயிற்சிப் பட்டறைகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

டிசம்பர் 12ம் திகதி இடம்பெற்ற, பயிற்சிப் பட்டறைகள் மீதான அறிக்கை முன் வைக்கப்பட்டு மாநாட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேற்படி சர்வதேச மாநாட்டு நிறைவாக லண்டனில் ஆர்ப்பாட்டமும் பொதுக் கூட்டமும் நடாத்தப்பட்டன.

மேற்படி நிகழ்வுகளில் தோழர் தம்பையா கலந்து கொண்டு இலங்கையில் காணாமல் போவதன் பின்புலச் சூழல், தொடர்ந்து வந்த அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட காணாமல் போதல் நடவடிக்கைகள் அவற்றின் பாரிய பாதிப்புக்கள், இவற்றைத் தடுத்து நிறுத்த சர்வதேச அளவில் மேற் கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி எடுத்துரைத்து விவாதங்களிலும் கலந்து கொண்டார். இம் மாநாட்டிற்குப் பின் லண்டனில் புதிய திசைகள் ஏற்பாடு செய்த 'புலிகளின் பின்னான இலங்கையின் அரசியல் நிலை' பற்றிய கருத்தரங்கிலும் கலந்து கொண்டு உரையாற்றினார். மேலும் ஊடகங்களிலான நேர்காணல்கள் நடாத்தியதுடன் புலம்பெயர்ந்த தமிழர்களின் மத்தியிலான முற்போக்கு ஜனநாயக இடதுசாரி நண்பர்களுடனான சந்திப்புகளையும் நடாத்தி நாடு திரும்பினார்.

## புதிய உலகம்

ஏழை அழுத கண்ணீர் கூரியவாள் என்போரே
கூரிய வாள் யாரேனும் கையேந்தத் துணியாமல்
அறம்வெல்லும் அறம்வெல்லும் என்றலறிப் பயனில்லை
தானாக அறம் வென்ற வரலாறு எதுமில்லை

தானாக வருவதில்லை வரமெவரும் தருவதில்லை
தீதான தீமையெதும் தானாக அகல்வதில்லை
போராட மனந்துணிந்து நீதிக்காய் எழுந்தீரேல்
மாந்தரெனும் மாசக்தி மாநிலத்தை மாற்றி வைக்கும்

ஒப்பாரி ஓலங்கள் அத்தனையும் ஓய்ந்திடுக
சோர்ந்து கிடப்பவர்கள் நிமிர்ந்து எழுந்திடுக
போராடத் துணிந்தெழுக பழம் பிழைகள் களைந்திடுக
புதியதொரு வழிதேர்ந்து புதுவுலகம் படைத்திடுவோம்

நன்றி : முட்கம்பித் தீவு

## தமிழிற் பாட ஒரு தடை

இலங்கையின் தேசிய கீதத்தில் இரண்டு சிறப்புக்கள் பற்றி புதிய பூமியில் ஒரு கட்டுரை வந்து சில மாதங்களே ஆகின்றன.

ஒரு சிறப்பு அதன் இன-மதச் சார்பின்மை. மற்றையது இரண்டு மொழிகளிலும் அதற்கு அதிகாரபூர்வமான வடிவங்களும் பாடப்படும் உரிமையும் இருந்தது. இப்போது அதன் தமிழ் வடிவத்தைச் செல்லுபடியற்றதாக அரசாங்கம் அமைச்சரவையில் முடிவெடுத்துள்ளது. இம்முடிவை எதிர்த்து வாசுதேவ பேசி அதன் பின்பு ராஜிதவும் பேசிய பின்பே, தமிழ்ப் பேசும் அமைச்சர்கள் சிலருக்குத் திராணி வந்தது.

சிங்களமே அரசகரும மொழியாக இருந்த போதும் தமிழுக்கு இருந்து வந்த ஒரு தகுதி இன்று தமிழும் அரச கரும மொழியான பின்பு அதற்கு மறுக்கப்பட்டுள்ளமை ஒரு முரண்நகையல்லவா? ஒக்ஸ்போர்டில் முகத்தில் அப்பிக் கொண்ட கரி இப்படிப்பட்ட வன்மம் மிக்கக் காரியங்களால் கழுவுண்டு போகுமா? ஆனாலும் தவறான வழியில் போவோரைத் திருத்த முயன்றால் அவர்கள் மேலும் தவறாகவே நடந்து கொள்வார்கள்

தமிழ்த் தலைவர்கள் என்போர் என்ன சொல்லப் போகிறார்கள்? இந்திய வற்புறுத்தலில் ஒன்றுபட்டு முன்வைக்கிற கோரிக்கைகளில் இதுவும் உள்ளடங்குமா?

## வரம் தர மறுத்த மாயக் கிருஷ்ணன்

"கிருஷ்ணா நீ வேகமாக வாராய்" என்ற பிரபல கன்னடப் பாடல் வரிகளை நினைவூட்டுகிற விதமாகவே இந்திய வெளியுறவு அமைச்சரின் வருகை பற்றிய தமிழ்த் தேசியவாதிகளின் எதிர்பார்ப்புக்கள் இருந்தன.

யாழ்ப்பாணத்திலும் அம்பாந்தோட்டையிலும் இந்தியத் துணைத் தூதரகங்களைத் திறந்து வைப்பதிம் இலங்கை மீதான இந்தியப் பொருளாதார ஆதிக்கத்தை மேலும் வலுப்படுத்துவதிலும் அமைச்சர் காட்டிய அக்கறையையும் இந்தப் பயணத்தில் இந்திய அரசாங்கம் காட்டிய அக்கறையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்திய- இலங்கை உறவில் இந்திய அக்கறைகள் எதைப் பற்றியன என்பது தெளிவாக விளங்கும்.

ஆனாலும் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்திய அக்கறை பற்றி நெட்டைக் கனவுகள் இன்னமும் கலைவதாகத் தெரியவில்லை. அம்பாந்தோட்டையிலிருந்து மீண்ட பிறகு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களை அவர் சந்திப்பார் என்று கூறப்பட்டது. அதைப் பற்றிய எதிர்பார்ப்புகளும் கட்டியெழுப்பப்பட்டன.

மாயக் கிருஷ்ணன் அம்பாந்தோட்டையிலிருந்து நேரடியாகவே தனது எசமானர்களிடம் போய் விட்டார். காத்திருந்தோரின் நிலை 'வாயிலே மண்' தான்.

இதென்ன புதிய விடயமா? தமிழ்த் தலைவர்களை இந்தியா பயன்படுத்துமே ஒழிய மதித்து நடத்தாது என்பது எல்லாத் தமிழ்த் தலைவர்களும் அறிவர். மக்களால் நிராகரிக்கப்பட்ட த.தே.கூ. இந்தியாவுக்கு விசுவாசமான அடிமைத்தனத்துடன் வரவு செலவுத் திட்டத்தை எதிர்க்காது ஒதுங்கி நின்ற போதுங் கூட, இந்தியா ஒரு அடிமைக்கு வழங்குகிற கவுரவத்துக்கு மேல் வழங்காது என்பதைத் தான் ஸ்ரீ கிருஷ்ண விஜயம் மறுபடியும் நமக்கும் காட்டியுள்ளது.

"மதியாதார் வாசல் மதித்தொருகால் சென்றே மிதியாமை கோடி பெறும்" என்ற ஔவையாரின் போதனையை நமது தமிழ்த் தலைவர்களுக்கு நாளாந்தம் நினைவூட்டுவது நல்லது.

## 100 வருடங்கள் குடியிருந்த காணியில் இருந்து பல குடும்பங்கள் வெளியேற்றல்

இன்றைய வடபுலத்துச் சூழலில் காணிகளின் பெறுமதியும் விலைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதன் காரணமாகத் தேடுவாரற்று விடப்பட்ட கலட்டுக் காணிகளுக்குச் சொந்தம் கொண்டாடி அல்லது குறுக்குவழிகளில் காணிகளைத் தமதாக்கும் செயற்பாடுகள் வேகமடைகின்றன.

அந்த வகையில் பல தலைமுறைகளாகப் பல வருடங்களுக்கு மேல் வாழ்ந்து வந்த மக்களின் நிலத்திற்கு ஏதோ வகையில் உறுதிகள் முடிக்கப்பட்டு நிலங்களை விலைக்கு வாங்குவதாகக் கூறி மக்கள் குடியெழுப்பப்படுகின்றனர். இதற்கு நிலமற்ற கூலி விவசாயிகளான தாழ்த்தப்பட்ட மக்கள் பலியாகின்றனர்.

இதற்கு உதாரணமாக அண்மையில் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் 50 பரப்பு நிலத்தில் 100 வருடங்களாக இருந்து வந்த குடும்பங்கள் அகற்றப்பட்டுள்ளனர். வெளிநாட்டுப் பணவரவைப் பெற்றுவரும் உயர் சாதிக் குடும்பத்தினர் மேற்படிக் காணிக் கொள்வனவில் ஈடுபட்டு வருவதாக அறிய முடிகிறது. இதற்கு ஆதரவாக வலி -தெற்கு மத்தியஸ்தர் சபை செயல்படுவதாகவும் கூறப்படுகிறது.

மேற்படி காணியில் குடியிருந்து வந்த சிலரை அப் பகுதி க் கிராமசேவகரின் உதவியுடன் கபடத்தனமாக வெளியேற்றி 35 பரப்புக் காணிக்கு கிணற்றையும் உள்ளடக்கி முட்கம்பி வேலி போடப்பட்டுள்ளது. இந்நிலையில் 4 பெண்பிள்ளைகளையும் ஒரு ஆண்பிள்ளையையும் கொண்ட ஒரு கணவனை இழந்த தாய் அக் காணியில் இருந்து வெளியேற மறுத்துள்ளார். தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து விவசாயம் செய்து வந்த காணியை விட்டுச் செல்ல மறுத்து வருகிறார். அது முற்றிலும் நியாயமானதேயாகும். ஆனால் வலி -தெற்கு மத்தியஸ்தர் சபை நீதி நியாயத்திற்கு அப்பால் காணிக் கொள்வனவுக்காரரின் பக்கம் நின்று அந்த ஏழைக் குடும்பத்தை வெளியேற நிற்பந்திக்கிறது.

வடபுலத்தில் நிலமற்ற கூலி விவசாயிகள், குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்கள், யுத்தத்திற்குப் பின்னான காலத்தில் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணமாகும். நீண்டகாலம் தலைமுறைகளாக வாழ்ந்து வந்த நிலத்திலிருந்து மனிதரை வெறும் உறுதிகளைக் காட்டி வெளியேற்ற முடியாது. இந்த நடைமுறைக்கு எதிராக மக்கள் போராடுதல் வேண்டும். மக்களது ஐக்கியப்பட்ட போராட்ட நடைமுறைகளால் மட்டுமே இத்தகைய அத்துமீறல்களைத் தடுத்து நிறுத்த முடியும்.

## தோழர் பொ. துரைராசாவின் மறைவுக்கு அஞ்சலி



யாழ்ப்பாணத்தின் பின்தங்கிய கிராமங்கள் எனப்பட்டவை தமிழர் பழமைவாதத்தின் சாதியச் சங்களினால் பிணைக்கப்பட்டு அமுக்கி அடக்கப்பட்டு வந்தவை. இத்தகைய பின்தங்கிய சூழலில் இருந்து இன்னும் முற்றாக விடுபடாது இருந்துவரும் கிராமங்களில் ஒன்றே வலி- மேற்கு சில்லாலை சாந்தைக் கிராமமாகும். இக் கிராமத்திலிருந்து பொதுவுடமை இயக்கத்தை நாடி வந்தவர்களில் முக்கியமான ஒருவர் பொ. துரைராசா (பாவற்கிளி) ஆவார். தமது கிராமத்தின் நிலையை மாற்றவும் இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தோழர் கே. ஏ. சுப்பிரமணியத்துடன் தொடர்பு கொண்டு பொதுவுடமைக் கருத்துக்களை அக்கிராமத்திற்கு அறிமுகம் செய்தவர் தோழர் பாவற்கிளியாவார். பழைய நிலையில் இருந்து கிராமம் மாற்றமடைந்து இளைஞர்கள் விழிப்புற்று முன்செல்ல வேண்டும். அதற்கு பொதுவுடமைக் கொள்கைகளும் நடைமுறைகளுமே சாலச் சிறந்ததென்ற உறுதியான நம்பிக்கையுடன் செயலாற்றி வந்தவர் தோழர் துரைராசா (பாவற்கிளி) அவரது வீட்டில் கட்சியினதும், தீண்டாமையை ஒழிப்பு வெகுஜன இயகத்தினதும் கூட்டங்கள் அன்று தொட்டு இடம் பெற்று வந்தமை நினைவுகூரத் தக்கதாகும். அவர் தனது இறுதிக்காலம் வரை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் வழிகாட்டலில் கிராமத்தையும் இளைஞர்களையும் வழி நடக்கச் செய்வதில் முன்னின்று செயல்பட்டவர்.

மேலும் அவர் அக்கிராமத்தில் கலை இலக்கிய முயற்சிகளுக்கும் குறிப்பாக நாடக அரங்கேற்றங்களுக்கும் முன்நின்றவர் ஆவார். 1969- 70 ஆண்டுகளில், அக் காலத்தில் புகழ் பெற்ற சாதியத்திற்கு எதிரான 'கந்தன் கருணை' நாடகத்தை நடித்து மேடையேற்றுவதில் முன்னின்ற தோழர் பாவற்கிளி அதில் நடித்தவரும் ஆவார். கிராம முன்னேற்றம் சனசமூக நிலைய வளர்ச்சி ஆகியவற்றுக்கு முன்னின்ற அவர், மாற்று அரசியலாகப் பொதுவுடமை அரசியலை வற்புறுத்தி அதன் வளர்ச்சிக்கு செயலாற்றியவர்.

அத்தகைய தோழர் துரைராசாவின் மறைவு எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சிக்கும் சாந்தைக் கிராமத்திற்கும் பெரும் இழப்பாகும். அவரது மறைவுக்கு கட்சி தனது செவ்வஞ்சலியைத் தெரிவித்துள்ளது. புதியபூமியும் தனது ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது. மறைந்த தோழர் பாவற்கிளியின் குடும்பத்தினருக்கும் உறவினர்கள் கிராம மக்களுக்கும் ஆறுதல் கூறிக் கொள்கின்றோம். (ஆசிரியர் குழு)

# இரத்தினபுரியில் மீண்டும் ஒரு இன வன்செயல் : முற்றுப்புள்ளி எப்போது

இன வன்செயல்கள மலையக மக்களை இலக்கு வைத்து பல பிரதேசங்களிலும் இடம்பெற்றுவரும் நிலையில் இரத்தினபுரி மாவட்டம் இதில் கவனிக்கப்பட வேண்டிய மாவட்டமாக காணப்படுகிறது. எழுபதுகளின் பிற்பகுதியில் இருந்து இம்மாவட்டத்தில் இன வன்செயல்கள் பல்வேறு பரிமாணங்களில் பல்வேறு வடிவங்களில் இடம்பெற்றுவருகிறது. அண்மைக்காலங்களில் பதிவாகிய இன வன்செயல்களில் தாக்கம் அதிகமாக காணப்பட்ட சம்பவங்களாக 1998 ஆம் அண்டு செப்டம்பரில் வேவல்வத்தை பிரதேச சம்பவத்தையும் 2001 ஆம் ஆண்டு டிசம்பர் பாம்காடன் தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவத்தையும் கூறலாம். (கோலை மாவட்டத்தில் பம்பேகம தோட்டத்திலும் 2006 ஆம் ஆண்டு சுமார் 50 குடும்பங்கள் இடப்பெயர்வினை சந்திக்கும் அளவுக்கு இன வன்செயல் இடம்பெற்றது) ஊடகங்கள் வாயிலாக பேசப்பட்ட இவ்வாறான வன்முறை சம்பவங்களுக்கு அப்பால் இம்மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களில் நேரடி வன்முறை (அதாவது ஆட்கள் தாக்கப்படுதல், அச்சுறுத்தல் மற்றும் பொருட்களுக்கு சேதங்களை ஏற்படுத்தல்) சம்பவங்கள் இடம்பெற்றாலும் பல்வேறு காரணிகளினால் அவைகள் வெளிவராமை கவனிக்கத்தக்க விடயமாகும்.

இம்மாதம் (செப்டம்பர்) 13 திகதி இம்மாவட்டத்தின் நிவித்திகல பிரதேசத்தில் உள்ள கிரிபத்கல தோட்டத்தின் குக்குலுகல மற்றும் கிரிபத்கல பிரிவுகளில் இன வன்செயல்கள் இடம்பெற்றுள்ளமை பதிவாகியுள்ளது. குக்குலுகல தோட்ட பிரிவில் ஏற்பட்ட இன வன்செயலுக்கு உடனடி காரணியாக அமைந்தது மதுபானம் விற்கும் தமிழர் ஒருவருடன் மதுபானம் பாவிப்பதற்கு வந்த சிங்கள குழு ஒன்றுடன் மோதல் ஏற்பட சிங்களவர் ஒருவர் கடுமையாக தாக்கப்பட்ட சம்பவமாகும். கிரிபத்கல தோட்டத்தின் கிரிபத்கல பிரிவு சம்பவமானது தோட்டத்தில் தொழில் புரியும் தோட்ட காவலாளிக்கும் தமிழ் இளைஞர் ஒருவருக்கிடை யில் காணப்பட்ட தனிப்பட்ட தகராறின் நீட்சியாக சிங்கள காவலாளி தமிழ் இளைஞரினால் படுகொலை செய்யப்பட்டதாக சந்தேகம் வெளியிடப்ப ட்டது. வாவலாளியின் சடலம் மூன்று நாட்களின் பின் 13 ஆம் திகதியே கண்டெடுக்கப்பட்டது. அதேநேரம் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் தமிழ் இளைஞரும் தலைமறைவாகிவிட்ட நிலையில் அவர் மீதான சந்தேகம் அதிகரித்திருந்தது. பின்னர் அவர் காவல் நிலையத்தில் சரணடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றனர்.

தனிப்படட தகராறுகளை பின்னணியாக கொண்ட இந்த சம்பவங்கள் இரண்டும் வழமைப்போலவே இன வன்செயல்களை தூண்டும் உடனடி காரணியாக அமைந்தது. இச்சம்பவங்களை அறிந்த குக்குலுகல மற்றும் கிரிபத்கல தோட்ட பிரிவை சேர்ந்த தமிழ் மக்கள் இடம்பெற போவதை முன்னேயறிந்து தமது இருப்பிடங்களை விட்டு 13 ஆம் திகதி முற்பகலிலேயே வெளியேறியுள்ளர். குக்குலுகல பிரிவில் வசித்த அனைத்து குடும்பங்களும் (சுமார் 36 குடும்பங்கள்) அச்சத்தின் காரணமாக தமது உறவினர்கள் நண்பர்கள் வீடுகளுக்கு இடம்பெயர்ந்தனர். கிரிபத்கல பிரிவிலும் சில குடும்பங்கள் இடம்பெயர்ந் திருந்தனர். இவர்களின் எதிர்வு கூறல் சரியாகவே அமைந்திருந்தது. 13 ஆம் திகதி இரவு குக்குலுகல தோட்ட பிரிவில் லயன் வீடுகளுக்கு சென்ற கடையர்கள் அங்கிருந்த உடைமைகளை சேதப்படுத்தியதோடு தீ இட்டுள்ளனர். தோட்ட மக்களின் முன்எச்சரிக்கை நடவடிக்கை இவ்வன்செயலில் பாரிய விளைவுகள் ஏற்படுவதனை தடுத்திருக்கின்றன என்றே கூற வேண்டியுள்ளது. ஒரு வாரத்திற்கு மேலாக மக்கள் அச்சத்தின் காரணமாக தமது சொந்த பிரதேசங்களுக்க திரும்பி இருக்கவில்லை. இவ்வன்செயல் காரணமாக இத்தோட்ட பிரிவு மக்களுக்கு அப்பால் டேல (Dela) பிரதேசத்திற்கு அன்மையில் உள்ள தோட்டங்களில் உள்ள மக்கள் அச்சத்திலேயே அழந்துக் கிடந்தனர். குறிப்பாக சம்பவம் இடம்பெற்ற ஒரு வாரத்தில பள்ளி மாணவர்களின் வருகை பாரிய வீழச்சியில் இருந்தமை அறியக்கிடைத்தது.

இச்சம்பவம் தொடர்பில் தோட்டத்தை சேர்ந்த எந்த நபரும் சம்வபம் தொடர்பில் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கவில்லை. இது இம்மக்கள் எவ்வாறான ஒடுக்குமுறைக்கு உட்பட்டு வாழ்கின்றார்கள் என்பதனை ஒருபுறம் எடுத்துக்காட்டும். அதேவேளை குறிப்பாக சிங்கள ஊடகங்கள் இவ்வாறான பிரச்சினை இடம்பெற்றமையை உத்தியோகபூர்வமாக அறிந்துக் கொள்வதற்கான வாய்பையும் இல்லாமல் செய்துவிட்டது. இது அப்பிரதேசத்தில் இயல்பான ஒன்றாகும்.

தற்போது சில குடும்பங்கள் மீள குடியேறி வருவதாக கூறப்படுகிறது. எனினும் சில குடும்பங்கள் நிரந்தரமாக வேறு இடங்களில் குடியேற தீர்மானித்துள்ளமை அறிய முடிகின்றது. அன்மையில் டேல தமிழ் மகா வித்தியலயத்தில் 02 மாணவர்கள் தங்களது ஆவணங்களை பெற்றுக் கொண்டு பாடசாலையில் இருந்து விலகிச் சென்றுள்ளனர். அவர்களின் குடும்பம் ஹட்டன் பிரதேசத்துக்கு அன்மைய தோட்டத்தில் உள்ள தங்களின் உறவினர் வீட்டில் வசிக்கப் போவதாக அவர்கள் கண்ணீர் மல்ழ்க ஆசிரியர்களிடமும் தமது சகாக்களிடமும் கூறினார்கள். இவர்களில் அதிகமானவர்கள் அண்டைய கிராமங்களில் நாட்கூலிக்கு தொழில் செய்பவர்களாகவே காணப்படுகினறனர் அத்தோடு சிலர் கம்பனி தோட்டத்தில் வேலை செய்கின்றனர். மிக வறுமைக்குட்பட்ட இம்மக்கள் இந்த சம்பவத்தினால் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு உட்பட்டுள்ளனர்.

இந்த பின்னணியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச நிவாரணங்கள் பெற்றுத்தர வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. அதற்கு மேலாக அவர்களுக்கான பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பில் இருந்தும் அரசு பின்வாங்க முடியாது. தமது முழு உழைப்பையும் இந்நாட்டின் அபிவிருத்திக்காய் வழங்கும் இம்மக்களின் வாழ்வதற்கான உரிமையை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடப்பாடாகும்.

இப்பிரதேசத்தில் இடம்பெறும் இந்த இன வன்செயல்களின் பின்புலங்களை அவைகள் தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையில் அவதானிக்கபடி வேண்டியவைகளாகவே இருக்கின்றன. தமிழர் –தமிழர், சிங்களவர் - சிங்களவர் முரண்பாடுகள் சாதாரண சிவில் சட்டங்களின் அடிப்படையில் தீரக்கப்படும் நிலையில் தமிழர் சிங்களவரை தாக்கும் சம்பவங்கள் இடம்பெறும் போது அதன் பின்னணிகள் எதுவும் கருத்தில் எடுக்கப்படாது அது இன வன்செயல்களுக்கான காரணியாக மாறுகின்றது. (சிங்களவர்களினால் தமிழர்கள் மீது தொடுக்கப்படும் அன்றாட வன்முறை சம்பவங்கள் பாரதூரமான சம்பவங்கள் கூட அச்சத்தின்காரனமாக தமிழர்களினால் வெளிக்கு கொண்டுவரப்படுவதே இல்லை என்பது இங்கு வழியுறுத்தப்பட வேண்டியதாகும்) ஆக, தனிப்பட்ட முரண்பாடுகளின் விளைவுகள் ஒரு இன வன்செயலாக பரிணமிப்பதில் இருந்து இதன் பின்னணியில் காணப்படும் சமூக, அரசியல் காரணிகளின் செல்வாக்கின் மேலான தன்மையினை உணரலாம்.

இலங்கையில் மலையக மக்கள் மீது தமிழர்கள் என்ற வகையிலும் அந்நியர்கள் என்றவகையிலும் எடுத்து செல்லப்பட்ட இனதுவேசம் சிங்களவர்களுக்கும் இவர்களுக்குமிடையிலான நம்பிக்கையின்மையை வளர்த்துள்ளது. இது அவர்கள் அருகருகே வாழ்ந்து வந்தாலும் பொதுவாக இடைவெளிகள் மிகுந்த வாழ்கையாகவே காணமுடிகின்றது. இதனை வழியுறுத்துவதாக இருக்கும் அம்சம் யாதெனில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறும் தோட்டங்களில் உள்ள மக்கள் கிராமங்களில் தமது வாழ்வாதார செயற்பாடுகளை மேற்கொள்பவர்கள் என்ற நிலையில் பரஸ்பர தங்குநிலை வாழ்கை நிலை காணப்பட்டபோதும் இன துவேசம் மேலெழுந்து நிற்கின்மையாகும். தேசிய இன முரண்பாட்டின் தாக்கமும் இந்த இரு இனத்தினரிடையேயான இன துவேச மன நிலைக்கு தனது பங்களிப்பை சிறப்பாக செய்து வந்துள்ளது. தேசிய அரசியலைப் போலவே பிரதேச அரசியல் தலைவர்களும் தமது அரசியல் இருப்பிற்கு அதனை சிறப்பாக பயன்படுத்தி வந்துள்னர். 1998 வேவல்வத்தை சம்பவம் இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். இனவன் செயலை தூண்டுவதில் முன்னின்ற அரசியல்வாதி மாவட்டத்தின் பெரும்பான்மை மக்களினால் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதில் இருந்து அறிந்துக் கொள்ளலாம். அண்மைய சம்பவத்திலும் பிரதேசத்தின் பிரபல அரசியல்வாதி ஒருவரின் அனுசரனை இருத்திருக்கலாம் என்ற சந்தேகம் மக்களிடம் காணப்படுகிறது. அசம்பாவிதங்கள் இடம்பெற்ற பின்னரும் அவர் சம்பவம் தொடர்பில் தனது கவனத்தை செலுத்தியதாக இல்லை. இம்மக்களில் மிக அதிகமானவர்கள் அவருக்கே தமது வாக்குகளை வழங்கியதனையும் ஒத்துக் கொள்கின்றனர். வன்முறையில் நேரடியாக தொடர்பு கொண்ட காடையர்கள் தொடர்பில் எவ்வித சட்ட நடவடிக்கையையும் வரலாற்றில் எடுக்கப்பட்டதில்லை. இவ்வாறான இனவன்செயல்களை சாதாரண சம்பவங்களாக நோக்கும் மனே நிலை சிங்கள அரசியல் தலைமைகளிடத்தில் மட்டுமல்லாது தமிழர்களின் உரிமைகளுக்கு குரல் கொடுப்பதாக கூறும் தமிழ் அரசியல் தலைவர்களிடமும் இருக்கின்றது. மக்கள் இன வன்செயல் தொடர்பாக மலையகத்தின் பெரிய அரசியல் தலைமைகள் என்று கூறி கொள்பவர்களிடம் தமது நிலையை விபரித்தபோதும் தங்கள் கட்சி குறித்த பிரதேசத்தில் இருந்து பாராளுமன்றத்திற்கோ மாகாண சபைக்கோ உறுப்பினர்களை கொண்டிருக்காத நிலையில் தங்களினால் அதற்கு தலையிட முடியாது என்று கைகழுவி விட்டதாக கூறப்படுகிறது. மலையக மக்கள் மீதான அவர்களின் அக்றையயின் தரத்தை இது எடுத்துக் காட்டுகிறது.

இப்பிரதேசத்தில் வாழும் மலையக மக்களின் வரலாற்று, பெருந்தோட்ட அடிமை கட்டமைப்பு கூறுகள், இன ஒடுக்கல், வறுமை, குடியிருப்பு பிரச்சனை, காணி உரிமை இன்மை போன்ற காரணிகளினால் பன்னையடிமை முறைகள் கூறுகளுக்குள்ளேயே வாழ்ந்து வருகி ன்றனர். மலையக மக்கள் சிதறி வாழும் காலி, மாத்தறை மற்றும் மொனராகலை போன்று பிரதேசங்களில் தனியார் தோட்டங்களில் வாழும் மலையக மக்கள் பண்ணையடிமை முறையின் கூர்மையான வலுவான பிடிக்குள் இருப்பதனால் இவர்கள் மீதான பாரிய வன்முறைகளும் வெளிவருவதில்லை. அங்கு அடையாளத்துக்கான போராட்டம் கூட வெளிப்படுவதில்லை. இரத்தினபுரி போன்ற மாவட்டத்தில் அடையான வெளிப்பாடுகள் போராட்டத்துடன் மலையக மக்களினால் முன்னெடுக்கப்படுகின்றன. கிராமங்களுக்கிடையே தனித்து சிறிய தோட்டங்களில் பெரும்பான்மை இனத்தவரின் ஆதிக்கம் அவர்களின் செயற்பாடுகள் அனைத்திலும் தாக்கத்தை செலுத்தி வருகின்றன. இன ஆதிக்கங்கள் இப்பிரதேசத்தில் இன வன்செயல்களுக்கான அடி நாதங்களாக காணப்படுகின்றன, இப்பிரதேசங்களில் இன ஆதிக்கத்தை வளர்ப்பதில் பண்ணையடிமைப்பாங்கிலான பெருந் தோட்ட கட்டமைப்பும் குறிப்பாக வேகமாக வளர்ந்து வரும் தனியார் தோட்ட கட்டமைப்பும் காணப்படுகிறது.

எனவே, அடிமைத்தன கூறுகளைக் களைந்து மலையக மக்கள் தமது பிரதேசங்களில் சுய கௌரவத்துடன் வாழக்கூடிய நிலையை ஏற்படுத்தும் போதே சிங்கள மலையக மக்களுக்கிடையிலான உறவுகள் வலிமைபெறும் அதுவே இப்பிரச்சினைக்கான நீண்டகால தீர்வாகவும் அமையும்.

## மாடு தருவதாக கூறி மாட்டு அமைச்சரின் எடுபிடிகளால் ஏமாற்றப்பட்ட இளைஞனின் வேதனைக் குரல்

கடந்த பொது தேர்தல் காலத்தில் மாடு தருகிறோம் என்று தோட்டப்புற இளைஞர்களுக்கு ஆசை காட்டி போஸ்ட்டர் ஒட்டுவதற்காகவும் தேர்தல் பிரச்சாரத்திற்காகவும் அழைத்து செல்லப்பட்ட இளைஞர் பட்டாளத்தில் நானும் ஒருவன். எங்களுக்கு மாடு தருவதாகக் கூறி தான் அட்டன் பிரதேசத்தில் தேர்தல் வேலைக்காக அழைத்து சென்றனர். நாங்களும் மாட்டாசையில் பட்டினி கிடந்து தேர்தல் வேலை செய்தோம் தேர்தலும் முடிந்தது கால் நடை அமைச்சர் பதவியும் கிடைத்தது. எமக்கு மாடு மாத்திரம் கிடைக்கவில்லை மாடு தருவதாக பல கூட்டங்கள் வைத்து எம்மை அழைத்தும் மாடு மட்டும் கிடைக்க வில்லை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தயவில் மாடு கிடைக்கும் என்று நம்பி மாடாக வேலை செய்த நாங்கள் எருமை மாடாகி விட்டோம். எதிர் வரும் உள்ளூராட்சி தேர்தல் காலத்தில் யானை தருவதாகக் கூட கூறி வருவார்கள் மலையக இளைஞர் யுவதிகளே பட்டது போதும் ஏமாற்று காரர்களை பாதணியால் அடித்து விரட்டும் துணிவு கொண்டு செயற்படுங்கள் எத்தனை காலம் தான் மாடாக வாழ்வது

அன்புடன்

குமாரவேல் குமரேசன் கிட்டித் தோட்டம் குரங்குமலை டிவிசன் அட்டன்

## மலையக மாட்சி மழையக மாட்சி என்று பொருத்தப்பட்டிருந்தது மலையகத்தலை நகர் அட்டனில் மலையக சாகித்திய விழாவின் போது

மலையக மாட்சி மழையக மாட்சி என்று பொருத்தப்பட்டிருந்தது மலையகத்தலை நகர் அட்டனில் மலையக சாகித்திய விழாவின் போது அட்டன் நகரின் பல பகுதிகளிலும் பொருத்தப்பட்டிருந்த கட் அவுட்களில் மலையக மாட்சி என்பதற்கு பதிலாக மழையக மாட்சி என்று பொருத்தப்பட்டிருந்தது. பலரது வேடிக்கைக்கு பாத்திரமானது இதைப்பார்த்த வர்த்தகப் பெருந்தகை ஒருவர் அட்டன் நகரில் தமிழ் நகரசபைத் தலைவன் ஒருவனை நியமித்தது எவ்வளவு பெரிய முட்டாள்த்தனம் இவன்களுக்கு மழைக்கும் மலைக்கும் வித்தியாசம் தெரிய வில்லை என்றால் மலையக சாயித்திய விழா கொண்டாடி என்னத்தை கிழிக்கப் போகின்றானுகள் என்று ஏசிக் கொண்டே பாதையில் பயணித்தார்.

## ஹட்டன் ஹைலன்ட்ஸ் பொஸ்கோ கல்லூரி அதிபர்களின் மறுப்பு

'திருடர் பிடித்துக் கொடுக்கும் புதிய பொலிஸ்காரன் முன்னாள் தொழிற்சங்கவாதி ஓ. ஏ. இராமையா' என்ற தலைப்பில் செப்டெம்பர்-ஒக்டோபர் மாதப் புதியபூமியில் வெளிவந்த செய்திக்கு ஹட்டன் ஹைலன்ட்ஸ் பொஸ்கோ கல்லூரி அதிபர்கள் எஸ்.விஜயசிங், எஸ்.என் குறுஸ் ஆகியோர் இணைந்து மறுப்புத் தெரிவித்து கடிதமொன்றை எழுதியிருந்தனர்.

அக் கடிதத்தில் "பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள மேற்படி செய்தி தொடர்பாகவும், திரு. ஓ.ஏ.இராயைா அவர்களது கருத்துக்கள் தொடர்பாகவும் மலையகத்தின் முன்னோடிப் பாடசாலைகளின் அதிபர்கள் என்ற வகையில் எமது ஆழ்ந்த விசனத்தையும் அதிருப்தி யையும் வெளியிடுவதோடு, உங்கள் இருவரது நடவடிக்கை களையும், அதிபர்களாக நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்" என்றும் தெரிவிக்க ப்பட்டுள்ளது.

ஆசிரியர் பீடக் குறிப்பு: மேற்படி அதிபர்களைத் தனிப்படப் பாதிக்கும் நோக்கத்தில் அச் செய்தி வெளியிடப்படவில்லை என்பதை மனவருத்தத்துடன் அதிபர்கள் இருவருக்கும் தெரிவிக்கும் அதே வேளை, திரு. ஓ. ஏ. இராமையா செய்தியிற் கூறியவாறு பேசினார் என்பதற்கு எம்மிடம் ஆதாரங்கள் இருக்கின்றன என உறுதிப்படுத்துகிறோம். அவர் பேசியதன் உண்மைத் தன்மை பற்றி மேலும் அறிய அக்கறை கொண்டுள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## கஹவத்தையில் குயில்தோப்பு பௌர்ணமி தின கலை இலக்கிய ஒன்று கூடல்

கஹவத்தையில் குயில்தோப்பு கலை இலக்கிய வட்டம் ஒவ்வொரு பௌர்னமி தினத்திலும் நடத்திவரும் பௌர்னமி ஒன்று கூடலின் நவம்பர் மாத ஒன்று கூடல் 21 ஆம் திகதி தேசிய கலை இலக்கிய பேரவையின் கொழும்பு கிளை வெளியிட்ட "உன்னை உலகை உண்மையறிய ஒரே வழி வாசிப்பு" என்ற தொகுப்பு தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

குயில்தோப்பு கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் நெல்சன் மோகன்ராஜின் அறிமுக குறிப்புகளோடு ஆரம்பமானதுடன் நிகழ்வுக்கு தலைமைதாங்கிய சு.விஜயகுமாரின் ஆவணம் தொடர்பான அறிமுகத்துடன் கலந்துரையாடல் தொடங்கியது. இடையிடையே மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்தும் கவிதைகள், பாடல்கள் இடம்பெற்றதுடன் மலையகத்தின் சமூக மாற்றத்திற்கு வாசிப்பின் தேவையும், வாசிப்பு பழக்கம் மலையகத்தில் மிகவும் கீழ் மட்டத்தில் இருப்பதற்கான காரணிகள், அதற்கான தீர்வுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன் பாடசாலைகள், பெற்றோர்கள், குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்கள் என்றவகையில் மலையக ஆசிரியர் சமூகத்தின் பங்கு, கலை இலக்கிய அமைப்புகள் ஆற்ற வேண்டிய பணி தொடர்பாக ஆராயப்பட்டது. தேசிய கலை இலக்கிய பேரவை அப்பணியை மக்களுடன் இணைந்து அமைப்பு ரீதியாக முன்னெடுக்க வேண்டும் என்ற யோசனை பலராலும் இதன் போது முன்வைக்கப்பட்டது.

செட்டம்பர் ஒக்டோபர் மாத பௌர்னமி தினங்களில் முறையே சினெமாவும் வாழ்வும், இளைஞர்களும் கூட்டுவாழ்வும் என்ற தலைப்புகளில் திறந்த கலந்துரையாடல் பாடசாலை மாணவர்கள் மற்றும் பலரின் இடம்பெற்றமை குறிப்படத்தக்கதாகும். இம்மாதம் ஒன்றுகூடல் (டிசம்பர்) 20 ஆம் திகதி "மலையக சமூக மாற்றத்தில் மாணவர்கள் இடைவிலகலின் தாக்கம்" எனும் தலைப்பில் ஆசிரியர் த. கோபியன் அவர்களின் தலைமையில் கஹவத்தை விடியல் கல்வியகத்தில் 10.00 மணிக்கு இடம்பெறும். அனைவரையும் குயில்தோப்பு கலை இலக்கிய வட்டம் அழைக்கிறது.

**புதிய பூமி**

சுற்று 17 நவம்பர் - டிசம்பர் 2010 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 133

இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@gmail.com, web : www.ndpsl.org

# மறுக்கப்படும் அரசியல் தீர்வும் வென்றெடுக்கும் வெகுஜன மார்க்கமும்

வடக்கு கிழக்கையும் தமிழ் மக்களையும் குறி வைத்த கோர யுத்தம் முடிவடைந்து ஒன்றரை வருடங்கள் முடிவடைந்து விட்டது. அழிவுகள், இழப்புக்கள், சோக வாழ்வு, நாளாந்தம் எதிர்நோக்கும் இன்னல்கள் போன்றவற்றிலிருந்து மீள முடியாது மக்கள் திக்கற்றுத் திணறிய வண்ணம் உள்ளனர். இவை ஒரு புறம் இருந்து வரும் அதே வேளை இனிமேலாவது நாம் நிம்மதியாக இந் நாட்டின் பிரஜைகளாக எமக்குரிய அடிப்படை உரிமைகளுடன் இரண்டாம் தரமுமற்ற சூழலில் வாழ முடியுமா என்ற பெரும் கேள்வியுடனேயே அடிப்பட்டு அல்லறப்பட்ட மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அதாவது எமக்குரிய நியாயமான அரசியல் தீர்வு ஒன்று வழங்கப்பட்டு அதன் கீழ் இயல்பு வாழ்வு, சமாதானம், ஐக்கியம் என்பவற்றுடன் வாழ முடியுமா என்ற எதிர்பார்ப்புடனேயே ஒவ்வொரு தமிழ்க் குடிமகனும் இருந்து வருகிறார். இதே எதிர்பார்ப்பு முஸ்லீம், மலையகத் தமிழ் மக்களிடமும் இருந்து வரும் மனநிலையாகும்.

ஆனால் அரசியல் தீர்வு பற்றி நாட்டின் சர்வ அதிகாரம் படைத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வாய் திறப்பதாக இல்லை. யுத்தத்தின் பின் நாட்டு மக்களுக்கு என அவர் உரையாற்றிய பல சந்தர்ப்பங்கள் வந்து போய்விட்டன. குறிப்பாகக் கடந்த செப்டம்பர் மாதத்தில் உலக அரங்கு எனக் கூறப்படும் ஐ.நா. மன்றப் பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றிய போதும் அரசியல் தீர்வு பற்றி ஜனாதிபதி உச்சரிக்கவே இல்லை. அடுத்து இடம் பெற்ற முக்கிய நிகழ்வான தனது இரண்டாவது பதவிக்காலத்தைப் பொறுப்பேற்ற நவம்பர் 19ம் திகதி பதவி ஏற்பு உரையிலும் அரசியல் தீர்வு பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. மேலும் பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தில் உரையாற்றிய இரண்டு சந்தர்ப்பங்களிலும் அரசியல் தீர்வு என்ற ஒன்று பற்றி எதுவுமே பேசவில்லை.

இவ்வாறு பேசக் கிடைத்த முக்கிய தருணங்களில் அரசியல் தீர்வு பற்றி பேச மறந்த அல்லது மறுத்தவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. ஆனால் லண்டன் ஒக்ஸ்போர்ட் மாணவர் சங்கத்தில் அரசியல் தீர்வு பற்றிப் பேச இருந்ததாகவும் அது தடுக்கப்பட்டு பேச முடியாது போய்விட்டதாகவும் கூறுவது வேடிக்கை தரும் ஒன்றாகவே காணப்படுகிறது. அரசியல் தீர்வை வற்புறுத்தி நிற்பவர்கள் தமிழ் மக்களும், முஸ்லீம், மலையகத் தமிழ் மக்களுமாவர். அவர்கள் முன்னால் நேர்மையுடனும், தூரநோக்குடனும், திறந்த மனதுடனும் ஒரு நியாயமான அரசியல் தீர்வை முன்வைப்பதே இன்றைய தேவை. அதற்கான பரந்த மனப்பான்மையும், தூர நோக்கும், அர்ப்பணிப்புடன் கூடிய அரசியல் நேர்மையும், துணிவான முடிவுகளும் தேவையானவையாகும். இவற்றை அரசாங்கத் தரப்பினரிடம் மட்டுமன்றி எதிர்த் தரப்பில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் தலைவர்களிடமும் இல்லை என்பதே இன்றைய யதார்த்தம்.

அது மட்டுமன்றி ஒரு அரசியல் தீர்வை இந்தியாவின் ஆளுவோருக்கு ஊடாகவோ அமெரிக்க-மேற்குலக ஆட்சிகளின் அழுத்தங்கள் மூலமாகவோ பெறலாம் என்பது வெறும் பகற் கனவே. ஆனால் இன்னும் நமது பாராளுமன்ற தமிழர் தரப்புத் தலைமைகள் எனப்படுவன அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு ஜனாதிபதியையும், இந்தியாவையும் அமெரிக்காவையும் நம்பி எதிர்பார்த்து நிற்கும் வட்டத்திற்குள்ளேயே இருந்து வருகின்றன. அதனைக் கடந்து கொள்வதற்கு இவர்களில் எவரும் தயாராக இல்லை.

ஜனாதிபதியும் அவர் தலைமையிலான அரசாங்கத்திற்கும் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்கப்படக் கூடாது என்பதில் உறுதியான உள்ளார்ந்த நிலைப்பாடு இருந்து வருகிறது. அது பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்க அதிகாரத்தோடும் அதன் நிலைத்த நீடிப்போடும் சம்மந்தமுடையது. இன்றும் பிரதான இடத்தில் இருந்து வரும் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான அரசியல் தீர்வு காணப்படும் நிலை ஏற்பட்டால் ஏகப் பெரும்பான்மையான சிங்கள மக்களின் கவனம் முழுவதும் திரும்பி விடும் என்பதை மகிந்த சிந்தனை நன்கு அறியும். ஐக்கிய தேசியக் கட்சியின் சிந்தனையும் அதனையே அடிநாதமாகக் கொண்டுள்ளது. எனவே பௌத்த சிங்களப் பெருந்தேசியவாத அலைகளுக்கு மத்தியில் சிங்கள மக்களைத் தொடர்ந்தும் வைத்திருப்பதே ஆளும் வர்க்க நலன்களுக்கும் ஆட்சி நிலைப்பிற்கும் அடிப்படையானதாகும்.

அவ்வாறே இந்திய ஆளும் வர்க்கமும் அமெரிக்க-மேற்குலக சக்திகளும் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதை விரும்பும் நிலையில் இல்லை. குளம் எப்போதும் கலங்கிய நிலையில் இருப்பதையே அவை விரும்பி நிற்கின்றன. அவர்களுக்கு இலங்கை மக்கள் மீதோ அன்றி தமிழ் மக்கள் மீதோ எவ்வித கரிசனையும் கிடையாது. அவர்களது அக்கறைகள் யாவும் தத்தமது பொருளாதார அரசியல் இராணுவ மேலாதிக்க நலன்கள் குறித்ததேயாகும்.

எனவே இன ஒடுக்குமுறைக்கு உட்பட்டு நிற்கும் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்கள் இதுவரையான பாராளுமன்ற அல்லது ஆயுதப் போராட்ட வழிமுறைகளிலான அரசியல் களத்தில் பெற்றுக் கொண்ட பாடங்களையும் பட்டறிவுகளையும் வைத்து சரியான அரசியல் முடிவுகளுக்கு வரவேண்டும். அரசாங்கத்துடன் இணைந்து நிற்கும் தலைமைகளும் தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் தனித்தனியாகவோ அன்றி கூட்டிணைந்தோ இன்றைய சூழலில் அரசியல் தீர்வை வென்றெடுக்க யாவற்றையும் கடந்து முன்வருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் அரவணைப்பில் சுகம் காண்பவர்களால் அதிலிருந்து விடுபட முடியாது. அதே போன்று பாராளுமன்றச் சுகபோகம் அனுபவித்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது ஆதிக்க அரசியல் நிலைப்பாட்டிலிருந்தும் இந்திய மேலாதிக்கவாதியினருக்குச் சாமரை வீசும் நிலையிலிருந்தும் விடுபடப் போவதில்லை.

ஆதலால் அரசியல் தீர்வுக்கான தெளிவான கோரிக்கைகளை முன்வைத்து மக்கள் இயக்கங்களைத் தோற்றுவிக்க வேண்டும். வெகுஜன அரசியல் மார்க்கம் ஒன்றே அரசியல் தீர்வை வென்றெடுப்பதற்கான அடிப்படையாகும். அதற்கான முன் முயற்சிகளைப் பல தளங்களிலும் முன்னெடுக்க வேண்டும் என்பதே புதியபூமியின் நிலைப்பாடாகும்.

**ஆசிரியர் குழு**

# தமிழரசுக் கட்சிக்கு ஒரு திறந்த மடல்

## ஆதிக்க அரசியலுக்கு மீண்டும் வாழ்வு தரத் திட்டமா?

தமிழரசுக் கட்சிக் கனவான்களே!

நீங்கள் வடக்குக் கிழக்கில் மீண்டும் தமிழரசுக்கட்சியைப் புனரமைத்துத், தமிழ் மக்கள் மத்தியில் உங்களது பழைய இனவாத அரசியலை முன்னெடுகக வந்துள்ளீர்கள். அழிவுகரமான உங்கள் பழைய இன வெறி அரசியலின் நீட்சியும் அதன் முடிவும் தான் 2009ல் முள்ளி வாய்க்காலில் கொள்ளியாய் மாறி எம் மக்களை அழிவுகளுக்கு உள்ளாக்கியது. இதனை மறந்து அல்லது மறைத்தே இன்ற தமிழரசுக் கட்சியைப் புனரமைப்புச் செய்ய முன் வந்திருக்கிறீர்கள். புதிய தலைமுறையினர் ஏமாற உங்கள் பழைய ஆதிக்க அரசியலை வெட்கமோ குற்றவுணர்வோ இன்றி முன்னெடுக்க முன்வந்திருப்பது அப்பட்டமான அரசியல் அயோக்கியத்தனம் என்று கூறுவதில் என்ன தவறு இருக்கிறது? எனவே புதிய தலைமுறையினருக்கு இபபகிரங்க மடல் மூலம் உங்கள் பிற் போக்கு முகமூடிகளை கிழித்துக் காட்ட வேண்டிய தேவையும் அவசியமும் எமக்குண்டு.

அன்று நாற்பதுகளின் நடுக் கூற்றிலே தமிழ்த் தேசியத்தின் பிற்போக்குக் கூறுகளிடன் திரட்சியாகவே அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது. அதன் தலைமை சைவ வேளாளத் தலைமையாக ஜீ.ஜீ. பொன்னம்பலம் தலைமையில் அமைந்தது. இக்கட்சி மூலமே ஜீ.ஜீ . பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம், கு. வன்னியசிங்கம் போன்றோர் 1947ல் பாராளுமன்றம் சென்றனர். இவர்களும் இவர்களை ஆதாரித்து முன்னின்றவர்கள் அனைவரும் தமிழர்கள் மத்தியில் நிலவுடைமை வழிவந்த உயர்வர்க்க மேட்டுக்குடியினராவர். இவர்களது ஆதிக்க அரசியலே கிராம மட்டம் முதல் நகர மட்டங்கள் வரை வியாபித்து இருந்தது. இக் கட்சி மூலம் தமிழர் உரிமைகள் பாராளுமன்றத்தின் ஊடாக வென்றெடுக்கப்படும் என்றே உறுதியளிக்கப்பட்டது. ஆனால் 1948ல் இந்திய வம்சாவளித் தமிழர்களின் பிரசாவுரிமை- வாக்குரிமை பறிக்கப்பட்டதும் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அமைச்சர் பதவி பெற்றதும், தமிழ் காங்கிரஸ் உடைபடுவதற்கு காரணமாகியது.

1949 ல் தமிழரசுக் கட்சி தோற்றுவிக்கப்பட்டது. மேட்டுக்குடி வழிவந்த கிறிஸ்தவரான எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் சைவரான கு. வன்னியசிங்கமும் இவர்களோடு இணைந்தவர்களான சைவ- கிறிஸ்தவ வேளாள மேட்டுக்குடியினருமே தலைமையினராயினர். தமிழரசுக் கட்சியின் கொள்கைள் தமிழ் காங்கிரஸின் அடிப்படையான தமிழ்த் தேசியப் பிற்போக்குக் கொள்கைகளில் இருந்து அதிகளவிற்கு மாற்றமடையவில்லை. வடக்குக் கிழக்கில் தமிழரசு என்றும் தெற்கில் சமஷ்டி என்றும் தமது கட்சியை அறிமுகம் செய்தனர். உள்ளார்ந்த தமிழ்ப் பிற்போக்குத்தனத்தில் ஊறியிருந்த தமிழரசுக்கட்சி வெளிப் போர்வைக்கு தமிழர்களின் பரந்துபட்ட நலன்களுக்கான கட்சி போன்ற ஒரு தோற்ற ப்பாட்டை அளித்தது. இந்திய நாட்டின் காந்தியத்தையும் தமிழகத்துத் தி.மு.க. அரசியலையும் கலந்த ஒரு கலவை அரசியலைத் தமிழ் மக்கள் மத்தியில் முன்னெடுத்தது. காந்திய அகிம்சை வழிமுறையும் கறுப்புக் கொடி எதிர்ப்பும் என்ற நிலையில் பாராளுமன்ற வாக்கு வங்கியை நிரப்பி ஆசனங்களை அதிகரிக்கும் அரசியலை நடாத்தியது. இதிலேயே அதிகம் பேசாதவரும் அமைதியான நடையுடை பாவனை கொண்டவருமான எஸ்.ஜே.வி. செல்வநாயகம் 'தமிழரசுத் தந்தை' எனவும் 'ஈழத்துக் காந்தி' எனவும் பட்டங்கள் சூட்டி முன்நிறுத்தப்பட்டார். இனவாத அரசியல் கொடிகட்டிப் பறந்தது.

தமிழரசுக் கட்சியின் கனல் கக்கும் இனவாத, இனவெறிப் பேச்சுக்களின் முன்னால் தமிழ் காங்கிரஸினால் நின்று பிடிக்க முடியவில்லை. தமிழ் மக்கள் வெறும் இன உணர்ச்சி அரசியல் அலையால் ஈர்க்கப்பட்டனர். தூர நோக்கிலான எந்தக் கொள்கையும் தமிழரசுக் கட்சியிடம் இருக்க வில்லை. தமிழர்கள் மத்தியில் காணப்பட்ட வர்க்க, சாதிய, பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கு எதிராக ஏகப் பெரும்பான்மையானோர் சார்பாக எத்தகைய கொள்கைகளும் முன் வைக்கப்படவில்லை. அத்துடன் சிங்கள மக்களைத் திசை திருப்பி ஏமாற்றி வளர்க்கப்பட்ட பௌத்த சிங்களப் பேரினவாதத்தை எதிர்கொள்வதற்கு சரியான கொள்கைத் தந்திரோபாயத்தை தமிழரசுக்கட்சி கொண்டிருக்கவில்லை. சிங்கள பௌத்த ஆளும் வர்க்கத்தையும் சாதாரண சிங்கள உழைக்கும் வர்க்க மக்களையும் வேறுபடுத்தி உழைப்போரின் ஒற்றுமையுடன் தமிழர் உரிமைகளை வென்றெடுக்க முன்வரவில்லை. பதிலாக சிங்கள

**வெகுஜனன்**

ஆளும்வர்க்க மேட்டுக்குடியினருடன் வர்க்க ஐக்கியம் கொண்டிருந்த அதே வேளை சாதாரணச் சிங்கள மக்களை எதிரிகளாக்கிக் கொண்டனர். அத்துடன் கொலனிய ஏகாதிபத்திய சக்திகளையும் இந்திய ஆளும் வர்க்கத்தையும் போற்றிப் பூசை செய்து வந்தனர்.

இத்தகைய தமிழரசுக் கட்சித் தலைமையானது தனது சைவ- கிறிஸ்தவ, உயர் வர்க்க, உயர் சாதியத் தலைமையைத் தமிழர் மத்தியில் ஆதிக்க அரசியலாக முன்னெடுப்பதில் முன்னின்று வந்தது. இந்த அடிப்படையிலான பிற்போக்கு நிலைப்பாட்டைத் தமிழரசுக் கட்சியானது தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியாகி தமிழீழக் கோரிக்கையை முன்வைத்த வேளையிலும் கைவிடவில்லை. தமிழரசுக் கட்சியின் தலைவரான 'தந்தை' செல்வா தனது இறுதி நேரத்தின் போது 'தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று கூறிக் கண் மூடிக் கொண்ட போதிலும் அவர்கள் நம்பிய இந்திய-அமெரிக்க-இஸ்ரேலிய-பிரித்தானியக் கடவுள்கள் எவராலும் இறுதி நேரத்திலும் முள்ளிவாய்க்காலில் இருந்த தமிழ் மக்களைக் காப்பாற்ற முடியவில்லை. முள்ளிவாய்க்கால் அவலங்களுக்கும் அழிவுகளுக்கும் தனியே புலிகள் இயக்கத்தினர் மட்டும் குற்றவாளிகள் அல்லர். அனைத்து ஆயுத இயக்கங்களும் அதன் தலைமைகட்கும் மேலாக, யாவற்றுக்கும் அடிப்படையாக அமைந்த தமிழரசுக்கட்சியே முதல் குற்றவாளியாகும். தமிழ் இனத்துக்குத் தலைமை தாங்குவதாகக் கூறி குருட்டுத்தனமும் மலட்டுத்தனமும் கொண்ட கொள்கைகளை முன்னிறுத்தி மக்களை மந்தைகளாக்கி ஆதிக்க அரசியல் நடத்தியதன் விளைவே இன்றைய அவல நிலையாகும். இத்தகைய அழிவுகளைத் தமிழ் மக்களுக்குத் தேடித் தந்தவர்கள் தமிழரசுக் கட்சித் தலைமையினர் என்பதை இத்தனை பட்டறிவுகளுக்குப் பின்பாவது தமிழ் மக்கள் புரிந்து கொள்ளல் வேண்டும்.

எந்தவொரு மக்கள் சமூகத்தினதும் அரசியல் வழிகாட்டல்களுக்கும் அடிப்படையாக அமைவது கொள்கையாகும். அத்தகைய கொள்கை நாட்டினதும் மக்களினதும் யதார்த்த நிலைமைகளுக்கு பொருந்தக் கூடியதாகவும் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கத் தக்கதாகவும் இருக்க வேண்டும். மேலும் வகுத்து முன் வைக்கக் கூடிய கொள்கையானது ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் சாதாரண மக்களின் நலன்களை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

இவ்வாறு நோக்கும் போது 61 வருடங்களுக்குப் பின்பு மீண்டும் தமிழரசுக் கட்சியை எந்த அடிப்படையில் புனரமைப்புச் செய்ய அதன் கனவான்கள் முன்வந்திருக்கிறார்கள் என்பதே எழுப்ப வேண்டிய கேள்வியாகும். இலங்கையில் பேரினவாதம் என்பது ஆளும் வர்க்க அரசியலின் கருவியாகவே வளர்க்கப்பட்டது. அதே வேளை பேரினவாதத்தை எதிர்ப்பது போன்று நின்றே தமிழ்த் தேசியவாதம் குறுந்தேசியவாதமாக தமிழர் அரசியலில் பயன்படுத்தப்பட்டது. இதில் எல்லோரையும் விடத் தமிழரசுக் கட்சியே முன்னின்றது.

அத்தகைய தமிழர் பழைமைவாதப் பிற்போக்குக் கட்சி பல வடிவங்களில் அழிவுகளைத் தேடித் தந்தபின், இன்று மீண்டும் தமிழ் மக்கள் மத்தியில் ஆதிக்க அரசியலை முன்னெடுக்கத் தன்னைப் புனரமைத்து நிற்கின்றது. அதன் தலைவர்கள் எவ்வாறான கொள்கைகளை மக்களுக்கு முன் வைக்கின்றனர்? வேதாளம் மீண்டும் முருங்கையில் என்பது போன்று என்றால், தமிழ் மக்களை வெறும் மந்தைக் கூட்டமாக இக் கனவான்கள் கணித்துள்ளார்களா? தமிழ் மக்கள் மத்தியில் இருந்து வரும் பழைமைவாதப் பிற்போக்காளர்களுக்கு தமிழரசுக் கட்சி தேவைப்படலாம். அதற்காக ஆதிக்க அரசியலை விரும்பும் சில சட்டத்தரணிகள், நிலவுடைமை வழிவந்த தனவந்தர்கள், முதலாளிகள், மெத்தப் படித்த ஏமாற்றுப் பேர்வழிகள், தமிழ் மக்களைச் சுரண்டி ஏமாற்றும் கூட்டம், சாதித் தடிப்புள்ள மேட்டுக்குடியினர் ஆகியோருக்குத் தமிழரசுக் கட்சி தேவையாகவே உள்ளது. ஆனால், சாதாரண உழைக்கும் தமிழ் மக்களான தொழிலாளர்கள், விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மக்கள், மீனவர்கள், பெண்கள் ஆகியோருக்குத் தமிழரசுக் கட்சியும் அதன் அழிவுகரமான இனவாத அரசியலும் தேவையற்றனவாகும்.

தமிழரசுக்கட்சி புனரமைக்கப்படும் இவ்வேளையில் அந்தக் கனவான்களிடம் தமிழ் மக்கள் குறிப்பாக இளந் தலைமுறையினர் கடந்த காலப் பட்டறிவின் மூலமான கேள்விகளை எழுப்ப வேண்டும். கேள்வியும் மீறலும் எதிர்ப்பும் இடம்பெறாத வரை அதன் மூலம் சரியானவற்றை தேர்ந்தெடுக்காத வரை தமிழ் மக்களுக்கு விடுதலையும் விமோசனமும் ஏற்பட மாட்டாது. மீண்டும் மீண்டும் தமிழ் தேசியம் என்ற பிற்போக்கு மூடு மந்திரத்தால் ஏமாற்றப்பட்டு செக்கிழுத்த பாதையில் சென்று அழிவுகளைத் தேடிக் கொள்ளவே முடியும்.

எனவே இவற்றைத் தமிழரசுக் கட்சி புனரமைக்கப்படும் இவ் வேளையில் ஆழ்ந்து சிந்திப்பது அவசியம் என்பதை இம் மடலின் மூலம் தெரியப்படுத்துகின்றோம்

# கருத்துச் சுதந்திர மறுப்பும் ஜனாதிபதிக்கு மறுக்கப்பட்ட பேச்சுரிமையும்




ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவர் சங்கம் (Oxford Union) அழைப்பை ஏற்று அங்கு உரையாற்றச் சென்ற சனாதிபதி அங்கு உரை யாற்ற இயலாமல் திரும்பியதைப் பற்றிப் பலவாறான கருத்துக்கள் நிலவுகின்றன. எல்லாவற்றிலும் ஒரு பொதுக் கருத்து சனாதிபதி ராஜ பக்ஷ அவமதிக்கப்பட்டுள்ளார் என்பதுதான்.

* நிச்சயமாக அவருக்கெதிராக விமான நிலையத்தில் நடந்த ஆர்ப்பாட்டமும் அதன் பயனாக அவர் வேறு வழியாக வெளியேற நேர்ந்ததும் அவரது உரையை ரத்துச் செய்ய முக்கியமான பங்களித்தன. அதே வேளை அவர் பிரித்தானியா அரசாங்க அதிதியாக இல்லாது தனிப்பட்ட முறையில் பயணத்தை மேற்கொண்டதும் அவருக்குப் பாது காப்பு அளிப்பது பற்றிய முன்னேற்பாடுகளைச் செய்ய இயலாது போனதும் பற்றிப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் அரசாங்க வெளிவிவகார அமைச்சில் உள்ளோரும் பிற ஆலோசகர்களுமாவர்.

* பேரளவில் இவ் விடயத்தில் பிரித்தானிய அரசாங்கத்திற்கு ஒரு பங்கும் இல்லை. என்றாலும் நட்பான இன்னொரு நாட்டின் ஆட்சித் தலைவர் விடயத்தில் பிரித்தானிய அரசாங்கம் இதே விதமான அக்கறை யற்ற போக்கைக் கடைப்பிடித்திருக்குமா என்பது கவனிக்க வேண்டிய கேள்வியாகும். அவரை அழைத்தவர்களோ அவரது உரையை ரத்துச் செய்தனர் என்பதைப் பற்றி பிரித்தானிய அரசியலில் ஒரு சிறு சலசலப்புக் கூட இல்லை என்பதும் கவனிக்கத் தக்கது. இலங்கையின் சனாதிபதி அவமதிக்கப்பட்டது அங்கு ஒரு பெரிய விடயமல்ல என்பதை இலங்கை அரசாங்கம் எவ்வாறு விளங்கிக் கொண்டாலும், சனாதிபதி ராஜபக்ஷ அரசின் அலட்சியமான போக்கிற்கு இது ஒரு பாடமென்பதை யாரும் விளங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை.

* அந்தக் கூட்டத்தில் தனது அரசியல் தீர்வை அறிவிக்க இருந்ததாக அவர் இப்போது சொல்லுவது நகைப்பிற்குரியதாகவே தோன்றுகிறது. தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றிய அறிவிப்பை பகிரங்கப் படுத்த உகந்த இடம் அதுதானா என்று யோசித்தால் அந்தக் கூற்று நிகழ் வின் பயனாகத் தமிழ் மக்கள் மீது ஏற்பட்ட சினத்தின் ஒரு வெளிப்பா டாகவே தெரிகிறது.

* இன்னொரு புறம், தமிழ் மக்களின் எதிர்ப்பை விடுதலைப் புலிக ளின் எதிர்ப்பாகக் காட்டுகிற முனைப்பு சிங்களப் பேரினவாதிகளிடை யிலும் புலம்பெயர்ந்த புலிப் பிரமுகரிடையிலும் ஒரே அளவிற்கு உள்ளமை, பேரினவாதமும் குறுகிய தேசியவாதமும் ஒன்றுக்கொன்று எவ்வாறு ஊட்டமளிக்கின்றன என்பதை நினைவூட்டுகிற விதமாக அமைந்தது எனலாம்.

* எந்தவிதமான அமைப்பும் சாராமல் விமான நிலையத்தினுள் நடந்த அமைதியான எதிர்ப்பின் போது, திட்டமிட்ட விடுதலைப் புலிச் சின்னம் மட்டுமே பொறித்த பதாகைகளை அங்கு திரண்டிருந்தோரிடையே வெளியேரல் வாயிலை அண்டிய பகுதியில் நின்றவர்கள் சிலர் பிடித்து நின்றனர். முன்னாலிருந்து எடுத்த படங்கள் பெருந்தொகையான புலி ஆதரவாளர்கள் இருந்தது போன்ற மயக்கத்தை உருவாக்கிய போதும் பின்னாலிருந்து எடுத்த படங்களில் நூற்றுக்கணக்கான மக்களிடையே ஒரு சிலர் மட்டுமே கூட்டத்தின் ஒரு அந்தத்தில் பதாகைகளுடன் நின்றதைக் காணக் கூடியதாக இருந்தது.

* இந்த முயற்சிக்குப் பின்னால் எந்தவிதமான நோக்கங்கள் இருந் தன என்று உறுதியாகக் கூற இயலாவிட்டாலும், 2008ன் பிற்பகுதியி லிருந்து போர் நிறுத்தம் வேண்டி மேற்குலகில் நடந்த மக்களெதிர்ப்பில் விடுதலைப்புலிப் பதாகைகளின் ஆதிக்கத்தின் விளைவாக அந்த எதிர்ப்பியக்கம் பெற்றிருக்கக் கூடிய அதிகளவு ஆதரவைப் பெறத் தவறி விட்டதென்பதை ஏற்பவர்கள் பேரினவாத எதிர்ப்பிற்குத் தொடர்ந்தும் விடுதலைப் புலி முகமூடி அணிவிப்பதால் தமிழ் மக்களின் ஒருங்கி ணைந்த எதிர்ப்புக்குரல் பலவீனப்படுவதுடன் பேரினவாதிகளின் கரங்களும் வலுப்படும் என்பதைப் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் கவன த்திலெடுக்க வேண்டும்.

* எந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும், எவரும் எந்த அமைப்பும் பங்கு பற்றுவது வரவேற்கத்தக்கது. ஆனால் அதை யாரும் தமது ஏகபோகமாக முயல்வது கண்டிக்கத்தக்கது.

* ராஜபக்ஸவுக்கு ஏற்பட்ட அவமதிப்பு இப்போது பழி தீர்க்கிற ஒரு வஞ்சிமம் போல வடிவெடுத்துள்ளது. அது இப்போது அரசாங்கத்தின் போர்க் குற்றங்கள் பற்றி வாய் திறப்போர் மீதும் 'புலி ஆதரவாளர்' தோற் றந் தந்த அல்லது சுருதப்பட்ட சில அரசியல்வாதிகள் மீதும் வலிந்த தாக்குதல் தொடுக்கும் நடவடிக்கைகளாகத் தன்னை வெளிப்படுத்து கிறது.

* நம் முன்னால் உள்ள பணி சனநாயக மறுப்புக்கெதிராக மக்களை ஒன்று திரட்டுவதாக அமைவது முக்கியமானது. எனவே, ஜே.வி.பி. தலைவர்கள் மீதான தாக்குதல்கள் முதலாக கரு ஜெயசூரிய, ஜயலத் ஜயவர்த்தன, விக்கிரமபாகு கருணாரத்ன முதலானோர் மீதான தாக்குதல் வரை, அனைத்தையும் நிபந்தனையின்றி நாம் வன்மையாகக் கண்டிப்பதும் அதற்கான சனநாயக நியாயத்தை தெளிவாகக் கூறுவதும் முக்கியமானது.

* இந்த அரசாங்கம் இந்த நாட்டில் மறுத்து வரும் கருத்துச் சுதந்திரம் பற்றி மக்களுக்கு எடுத்துரைக்கவும் இது ஒரு நல்ல தருணமாகும்.

# வன்னி மண்ணில் வெறுங் கையானோரின் கதை

இது வெறுங்கையோடு புறப்பட்டு வெறுங்கையோடு வீடு மீண்டவர்களின் கதை. இலங்கை அரசாங்கம் சமாதானம் முழுமையாக வந்துவிட்டதாகவும் மக்கள் எல்லோரும் அகதி முகாங்களிலிருந்து மீள்குடியேற்றப் பட்டுள்ளதாகவும் "வடக்கின் வசந்தம்" தென்றலாய் வீசுவதாகவும் சொல்லிக் கொண்டிருக் கையில் நான் சொல்லும் கதை உண்மை நிலையைப் பேசுகிறது, கதையாய் .... ஆனால் இது வழமையான அரசாங்கம் அளக்கின்ற கதை போலல்ல.

**இடம்: வட்டக்கச்சி, கிளிநொச்சி மாவட்டம்**

இங்கு மீளக் குடியேறியவைகளிற்கு எதுவுமே மிஞ்சி இருக்கவில்லை. அவர்களது வீடுகள் உடைக்கப்பட்டு குடிசைகள் முற்றாகத் தீக்கிரையாக்கப் பட்டிருக்கின்றன. மெனிக் முகாமிலிருந்து மீளுகிற போது வழங்கப்பட்ட தாப்போலின் தரைவிரிப்பைக் கொண்டு தற்காலிகக் கூடாரம் அமைத்துத் தங்கியிருக்கிறாஉகள். சிலருக்கு ஐக்கிய நாடுகள் அகதிகள் நிறுவனத்தினால் (UNHCR) வழங்கப்பட்ட 25,000/- உதவித் தொகை தகரங்களைக் கொள்வனவு செய்ய உதவியிருக்கிறது. சிலருக்கு 5,000 ரூபாவே வழங்கப்பட்டிருக்கிறது. சிலருக்கு எதுவுமே வழங்கப்படவில்லை. ஏன் இந்தப் பாகுபாடு எனக் கேட்ட போது தங்களுக்கு உதவி வழங்கும் நாடுகள் வழங்கும் நிதி நிறுத்தப்பட்டதால் முதலில் மீளக் குடியேறியோருக்கு 25,000/- வழங்கப்பட்டதாகவும் பின்னர் மீளக் குடியேறியோருக்கு 5,000/- வழங்கப்பட்டதாகவும் இந்த ஆண்டின் நடுப்பகுதியில் மீளக் குடியேறியோருக்கு எதுவுமே வழங்க முடியவில்லை எனவும் கூறுகிறது UNHCR. இங்குள்ள குடும்பங்களில் 70% குடும்பங்களுக்கு பெண்களே தலைமை தாங்குகிறார்கள். அவர்களே குடும்பங்களுக்கான வருவாயைத் தேட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். குடும்பத் தலைவவுகள் யுத்தத்தில் கொல்லப்பட்டோ, காணாமற் போயோ அல்லது தடுத்து வைக்கப்பட்டோ இருக்கும் நிலையில் எதிர்காலத்தின் மீது நம்பிக்கையற்ற மக்களையே காணமுடிகிறது. இங்கே முன்பள்ளிகள் குழந்தைப் பராமரிப்பு நிலையங்களாக மாறியிருக்கின்றன. Day care centrefs இங்கும் உண்டு. அதுமட்டுமல்ல, சில்வா வீதி, பெரேரா வீதிகளும் கூட இங்கு உண்டு. இவ்வளவு நடந்தும் தமிழன் சினிமாவைக் கைவிடவில்லை என்பதைப் பெருமையோடு காணமுடிந்தது. பேரிதாக ஒன்றும் மாறிவிடவில்லை. முன்னர் விடுதலைப் புலிகள் இருந்த இடங்களிலும் முகாம்களிலும் இராணுவம் இருக்கிறது. புலிகளைப் போலவே மக்களோடு மக்களாக இராணுவமும் வாழ்கிறாஉகள். அவ்வளவுதான். முன்னர் புலிகளின் நிர்வாகம் இப்போது இராணுவத்தினரின் நிர்வாகம். முன்னர் போர்நிறுத்த காலத்தில் மாவட்டச் திட்டமிடற் செயலகம் (PDS) வன்னியின் சகல அபிவிருத்தித் திட்டமிடலுக்கான அலுவலகமாக விடுதலைப் புலிகளால் நடத்தப் பட்டது.



[illegible]

**இடம்: கண்டாவளை, கிளிநொச்சி மாவட்டம்**

[illegible]





எல்லாவற்றிற்கும் கையேந்தத் தலைப்பட்டிருக்கிறோம்." எல்லோர் மனதிலும் இதுதான் நிறைந்திருக்கிறது. இழந்த உடமைகளை விட அவர்கள் இழந்திருக்கின்ற தன்மானம் அவர்களை உளவியல் ரீதியான நெருக்கடிக்குள் தள்ளியிருக்கிறது. பொருளாதார நெருக்கடியும் வாழ்வாதாரப் சிக்கல்களும் அவர்கள் வாழ்வில் தவிர்க்கவே இயலாத அம்சங்களாகிவிட்டன. பெய்கின்ற பெருமழை மீண்டும் அவர்களை அகதிகளாக்குகின்றது. யுத்தத்தில் ஊனமுன்றவர்களுக்கு அன்றாட வாழ்கையே போராட்டமாகிறது. தங்கள் சொந்த நிலங்களே சொந்தமில்லை என அறிவிக்கப்பட்ட நிலையில் செய்வதறியாது திகைக்கிறார்கள். அவர்ளிடம் இருப்பது விடுதலைப் புலிகளால் வழங்கப்பட்ட காணி உறுதிப் பத்திரங்களே. அவை செல்லுபடி யற்றதாக்கப்பட்ட நிலையில் பலருக்கு இருப்பதற்கு சொந்தமாக ஒரு துண்டு காணி கூட இல்லை.

போரின் கோரத் தாண்டவம் வரைந்துசென்ற சுவடுகள் இன்னும் அப்படியே கொடுமையாக உள்ளன. நந்திக் கடலோ எதுவுமே நடக்காதது போல மயான அமைதியாய்க் கிடக்கிறது. இந்த இடத்தில் வன்னி மக்களோடு பணியாற்றுகின்ற ஒரு மனிதநேயப் பணியாளர் சொன்ன செய்தி இன்னும் செவிப் பறைகளை உறைவித்து முகத்தில் அறைந்தது. அவர் சொன்னது இதுதான். "உங்கள் தத்துவ விசாரங்களையும் குடுமி பிடிச் சண்டைகளையும் நீங்கள் ஐரோப்பிய எல்லைகளுக்குள் வைத்துக் கொள்ளுங்கள். கட்டுநாயக்காவிற்குள் காலடி எடுத்துவைக்கத் துணிவற்றவர்கள் தான் வட்டுக்கோட்டை பற்றிப் பேசுகிறார்கள். நாங்கள் அடுத்த வேளை சாப்பாட்டிற்கே வக்கற்றவஉகளாக ஆகியிருக்கிறோம். உங்களது தத்துவ விசாரணைகள், விசாரணைகளின்றித் தடுத்துவைக்கப் பட்டுள்ளவ ர்களை மீட்கவோ காணாமல் போனவஉகள் பற்றிய தகவல்களை அறியவோ உதவப் போவதில்லை. நாங்கள் எதுவும் செய்வதில்லை என்று எங்கள் மீது பழியைப் போட்டுவிட்டு அப்பால் நகர்கிறீர்கள் அடுத்த அலுவலைப் பார்பதற்கு. அனுமதியின்றி அணுவும் இங்கே அசையாது என்று தெரியுமா உங்களுக்கு?"

# மீள் குடியேற்றமும் பழி வாங்கப்படும் வன்னி மக்களும்!

விசு

நலன்புரி நிலையங்களை எனப்படும் அகதிமுகாம்கள் இந்த ஆண்டு முடிவிற்குள் மூடப்படலாம் எனத் தெரிகிறது. மூடப்படும் முகாம்களிலுள்ள மக்களில் ஒரு தொகையினர் அவர்களது வாழிடங்களுக்குக் கொண்டு செல்லப்படாமல் இடைத்தங்கல் முகாம்களில் வைக்கப்பட வேண்டிய நிலையும் உள்ளதாகத் தெரிகிறது. முட்கம்பி வேலிகளுக்குள் அடைக்கப்பட்ட மக்களை அவரவர் இடத்தில், மீளக் குடியேற்றுமாறு பலமாதங்களாக பலதரப்பட்டவர்கள் அறிக்கை மேல் அறிக்கைவிட்டு வந்தனர். போரில் மக்களுக்கு கைகொடுக்காத சர்வதேச சமூகம் மக்கள் முட்கம்பிவேலிக்குள் இருக்கும்போது கை கொடுக்கப் போகிறது என்று எல்லோரும் நம்பினோம். ஆனால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை.

முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்ட மக்களை ஒரு மாதகாலத்துள் திரும்பவும் தமது பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கச் சாத்தியங்கள் நிறைய இருந்தன. இந்தச் சாத்தியங்களை அரசு திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. பேரினவாத நோக்கங்களே இதற்கான முழுக் காரணமுமாகும். இன்னமும் மீளக் குடியமர்த்தப்படாமல் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தின் பெரும்பகுதிகள், மாத்தளன் முதல் முள்ளிவாய்க்கால் வரையான பிரதேசங்கள், உள்ளன. மேற்படி பிரதேசங்களும் தாமதமாகக் குடியமர்த்தப்பட்ட ஏனைய பிரசேதங்களை அண்டிய பகுதிகளும் வன்னியில் அனைத்து மாவட்ட மக்களும் போரின் இறுதிக் காலத்தில் தங்கியிருந்த இடங்களாகும். சொல்லொணாத் துன்பங்களுடன் தம்முடன் எடுத்து வந்த உடமைகள் அனைத்தையும் கைவிட்டுச் சென்ற பகுதிகளுமாகும். புலிகளின் உடமைகளும் பெருமளவு இப் பகுதிகளிலேயே கைவிடப் பட்டன. தங்கம், செம்பு, பித்தளை, இரும்பு என அவை நிறைக் கணக்கிலும் கணிசமான பெறுமதியுடையவை. இவை பொருள் வடிவில் மேலும் அதிகம் பெறுமதியுடையவை. இவற்றின் பெறுமதிக்காக இவை அப்புறப்படுத்தப்பட்ட பிரதேசங்களே மீளக் குடியமர்வுக்கு அனுமதிக்கப் படுகின்றன. வீட்டின் கூரைகள் கதவுகள் கூட அப்புறப் படுத்தப் பட்டுள்ளன. அப்புறப்படுத்துவதற்கான கால தாமதமே மீளக் கூடியமர்வுக்கான கால தாமதமாகும் என்று மக்கள் கருதுகின்றனர். தமது வீட்டில் கைவிட்டு வந்த பொருட்கள் களவாடப் பட்டுள்ளதையும் பல வருடங்களாக முயற்சி எடுத்து வளர்க்கப்பட்ட தென்னைகள், யானைகளால் அழிக்கப்பட்டு நாசமாகியுள்ளதையும் நீர்ப்பாசன மூலம் வளர்க்கப்பட்ட பயிர்கள் பட்டுப் போனதையும் கால்நடைகள் தொலைந்து போனதையும் மீள் குடியேற்றம் தாமதமானதால் ஏற்பட்ட இடர்களில் சில என்று குறிப்பிடலாம். இவ்வாறான அழிவுப் பட்டியல் இன்றும் மிக நீண்டதாக உள்ளது. ஓலைகளால் வேயப்பட்ட வீடுகள் பல முற்றாகத் தீக்கிரையாக்கப்பட்டன. நாம் வாழ்ந்த பகுதியில் கண்ணிவெடிகள் இருந்தமைக்கான தடயங்களையோ அவை அகற்றப்பட்டதற்கான தடயங்களையோ சம்பந்தப்பட்ட மக்களால் காண முடியவில்லை. போரின் முடிவுக்கு மறுநாளே தமது பிரதேசங்கள் மீளக் குடியேறுவதற்கு ஏற்றதாக இருந்தன என்பதே எல்லோரது அபிப்பிராயமுமாகும்.

கண்ணிவெடிகள் அகற்ற மூன்று ஆண்டுகளாவது செல்லும். அதன் பின்னரே மீளக் குடியேற்றம் சாத்தியமென்று முட்கம்பி வேலிக்குள் மக்கள் இருந்த போது இந்திய அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா கூறினார். இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராகவும் துரோகமாகவும் நடப்பதால் இலங்கை அரசைத் தமது பக்கம் வைத்துக் கொள்ளலாம் என்று இந்தியக் கொள்கை வகுப்போரிடம் ஒரு கணக்கு உள்ளது. இந்தியனவின் அணு நிலையங்கள் தமிழ் நாட்டிலும் அதையண்டிய பகுதிகளிலும் உள்ளன. அவற்றின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாகக் கருதுவதால் தமது பாதுகாப்பிற்காக எங்கள் தலைவிதிகளை எப்படி எப்படியோ இந்தியா எழுதி வருகிறது. இன்னும் எழுதவும் உள்ளது.

மீண்டும் குடியேற்றம் உரியவாறு துரிதகெதியில் நடந்து முடிந்திருந்தால் அதற்கு இங்கு யார் உரிமை கொண்டாடி இருப்பார்கள். தமது வேண்டுகோளின் பிரகாரம் இந்திய அமெரிக்க எசமானர்களின் உத்தரவுப்படி இலங்கை அரசால் செய்யப்பட்டதாக கூட்டமைப்பினர் கயிறு விட்டிருப்பார்கள். எதையாவது சொல்லிப் பிழைப்பு நடத்த முடியாமல் அவர்கள் அம்பலமாகி வருகிறார்கள். அவர்களின் கையாலாகத் தனங்களையும் தங்களால் மறைக்க முடியுமென்ற மனத்திடம் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு உண்டு. மீள் குடியேற்றத்தின் தாமதத்திற்குக் காரணம் கண்ணிவெடிகள் என்று அவ்வப்போது ஒரு நாளேடு செய்திகள் போட்டு வந்தது. மக்களை நம்ப வைப்பதற்காக கண்ணிவெடியந்திரங்கள்- மோப்ப நாய்கள்- சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியின் அறிக்கை- அவரின் பேச்சாளரின் செய்தி என்று பல செய்திகள் சோடிக்கப்பட்டிருந்தன.

வன்னி மக்களின் இரத்தக் குளிப்புக்கும் புலம்பெயர்ந்து வாழ்பவர்களுக்குமிடையே சம்மந்தம் உண்டு என்று இலண்டன் நகரொன்றின் மேயர் யாழ் வந்தபோது கருத்து வெளியிட்டதை செய்தியாகப் பார்த்தது ஞாபகம். புலம்பெயர்ந்தவர்களிடம் அவருக்கு உள்ள குரோதத்தால் அப்படிக் கூறியதாகக் கருத முடியாது. மீள் குடியேற்றம்இ மறுவாழ்வு என்பவற்றில் புலம்பெயர்ந்தவர்கள் அக்கறையில்லாமல் இருப்பதைச் சுட்டிக்காட்டவே அவர் இவ்வாறு கூறினார் போலும். புலம்பெயர்ந்த ஒருவரால் வழங்கப்பட்ட பைசிக்கிள் ஒன்றை இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் வழங்குவதைப் படம் போட்டுச் செய்தியாக வெளியிடுமளவிற்கு உறவுகள் அற்பமாகவும் வெறுமையாகவும் இருக்கின்றன. புலம்பெயர்ந்த நாடுகளுக்குச் சென்ற கூட்டமைப்புத் தலைவர்கள் தங்களைச் சாவு துரத்துகின்றது என்று கூறியுள்ளார்கள். இதன் அர்த்தம், இங்கு எவருக்கும் விளங்கவில்லை.

மீளக் குடியமரும் மக்கள் தங்கள் இடங்களில் மறுவாழ்வைத் தொடங்குவதில் பல இடர்களைச் சந்திக்கின்றார்கள். மீள் குடியமர்வு என்பது வசந்தம் என்றும், மலர்வு என்றும் கூறுவது பொருத்தமற்றது. நிவாரணம் வாழ்வாதார உதவித் திட்டம் வீடமைப்புத் திட்டம் என்பவைகள் அவர்களுக்கு ஒரு ஆறுதல் அளிக்குமென்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. ஆனால் எதிர்கால வாழ்வு பற்றிய அச்சம் அவர்களைச் சூழ்ந்துள்ளது. இராணுவ நடமாட்டமும் தலையீடுகளும் அற்ற, நீதியான சிவில் அமைப்பின் கீழ் தாங்கள் வாழ வேண்டும் என்பதே அவர்களின் முழு விருப்பமுமாகும். அதுவே இயல்பு வாழ்வாகும். அரசு இதனை வன்னி மக்களுக்கு வழங்குமா? தமிழர் தலைமைகள் இதையாவது பெற்றுக் கொடுப்பார்களா? இவையே இன்றைய கேள்விகளாக உள்ளன. இரண்டு கேள்விகட்கும் பதில் என்னவோ ஒன்று தான்.

# புதிய கல்விச் சீர்திருத்தம் ஏற்படுத்தப் போகும் மாற்றம்

மக்களின் வாழ்வாதாரங்கள் அனைத்தும் தனியாளுக்கோ அல்லது ஏதேனும் ஒரு குழுவுக்கோ சொந்தமானவையல்ல. ஒரு தனியாளுக்கோ ஒரு குழுவுக்கோ மக்களின் வாழ்வாதாரங்களை உரித்தாக்கிக் கொள்ளவோ, சுரண்டிச் சீரழிக்கவோ உரிமையில்லை. அவை மக்களுக்குரியன. அவை அவர்களது பொதுப் பயன்பாட்டுக்குரின. பூகோள மயமாதல் நிகழ்ச்சி நிரல் உலகை வழிநடத்திக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில் அனைத்துமே விற்பனைக்குரியவாக மாறியுள்ளன. இயற்கை வளங்கள், மனிதர்கள் உழைப்பு, உணர்வு என அனைத்துக்குமே ஒரு விலை நிர்ணயிக்கப்படுகிறது. மனிதர்கள் வரையறையின்றி நகரும் விலங்குளாக மாற்றப்படுகிறார்கள்.

இவ்வாறானதோர் சூழலில் சேவைத் துறையில் உயர்ந்த இடத்தில் இருக்கும் கல்வித் துறையும் கல்வியும் விற்பனைப் பண்டமாக லாபம் சம்பாதிக்கக் கூடிய துறையாக மாற்றப் பட்டிருப்பதில் வியப்பதற்கு ஏதுமில்லை. இலங்கையின் கல்வித் துறை 1940களில் இலவசமாக்கப்பட்டது. 60களில் தேசியமயமாக்கப் பட்டது. அதைத் தொடர்ந்து சாதாரண மக்கள் ஓரளவுக்காவது கல்வியைப் பெற வாய்ப்பிருந்தது. 1978க்கு பிறகான ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகமானது. அன்றிலிருந்து சமூக நல அரசால் வழங்கப்படுகிற இலவச சேவைகளுக்கு ஆப்பு வைக்கிற பல்வேறு பொறிமுறைகளையும் செயற் திட்டங்களையும் தொடர்ந்து ஆண்டுவரும் அரசாங்கங்கள் இன்றுவரை எடுத்துவருகின்றன. மக்களின் எதிர்பார்ப்புக்குப் பயந்து இலவச சேவைகள் இன்றளவும் நீடிக்கப் படுகின்றன. ஆயினும், அண்மைக் காலப் போக்குக்கள், கல்வித் துறையைத் தனியார் மயமாக்க அரசு முயல்வதைத் தெளிவாக்குகின்றன. இலங்கை ஒவ்வொரு வருடமும் புதிது புதிதாய் கல்வித் துறையில் அறிமுகப்படுத்தும் சீர்திருத்தங்கள், கொள்கைகள் என்பன நவதாராளவாதம், உலகமயமாக்கல் என்பவற்றின் பிரதான சித்தாந்தக் கருவிகள் என்பது ரகசியமானதல்ல. புதிய கல்விக் கொள்கைள், சீர்திருத்தங்கள் என்ப மக்கள் நலனை கருத்திற் கொண்டோ, நம் நாட்டின் நலனை முன்னிறுத்தியோ நடைமுறைப்படுத்த வில்லை என்பது தெளிவாகும். மாறாக, அவை பல்தேசியக் கம்பனிகளின் சந்தை விஸ்தரிப்புக்கு, அதில் தமக்குச் சேவையாற்ற விசுவாசமான பணியாளர்களை தொழிற்படையாக உருவாக்குவதற்குமாகும்.

திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவாக புதிய கல்விக் கொள்கைளும் சீர் திருத்தங்களும் இந் நாட்டு மக்களின் அரசியல் பொருளாதாரப் பண்பாட்டு அம்சங்களோடு ஒத்துப் போகவில்லை. அவை மக்களையோ அவர்களது அரசியற் பண்பாட்டு பொருளாதார அம்சங் களையோ மேம்படுத்துவதாக அமையவில்லை. ஏனெனில் அவை மக்கள் நலன் சார்ந்தவையல்ல. மாறாக, ஆளுகிறவர்களின் நலன் சார்ந்தனவாக மாத்திரமே உள்ளன. தற்போது பாடசாலை மட்டங்களிலும், கல்விக் காரியாலய திணைக்கள மட்டங்களிலும் 2011ற்குரிய கல்விச் சீர்திருத்தங்கள், நிர்வாக ரீதியான மாற்றங்கள் தொடர்பில் பேசப்படுகிறது. ஆயினும் அது பற்றிய உத்தியோகபூர்வச் சுற்று நிரூபங்களோ அரசு அறிவித்தல் எதுவுமோ இதுவரை வெளியாக்கப்படவில்லை. ஆனால் ஆசிரியர்களின் கருத்தரங்குகளிலும், அதிபர்களுக்கான கூட்டங்களிலும் பேசப்பட்டுள்ளது. உலக வங்கி 2011ற்கான கடன் வழங்குவதோடு, சில நிபந்தனைகளையும் விதித்திருக்கிறது. இது பாடசாலைகளின் நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பானதாகும். அதாவது இனிவருங் காலங்களில் பாடசாலைகள் இரண்டு விதமாக மாத்திரமே வகைப்படுத்தப்படப் போகின்றன. 1- 5 தரம் வரையான பாடசாலைகளும், 6-13 தரம் வரையான பாடசாலைகளுமாக வகைப்படுத்தப் போவதாக அறியக் கிடைக்கிறது. அத்துடன் மொழிவாரியாகப் பாடசாலைகள் பிரிக்கப்படாமல் ஒரே நிர்வாகத்தின் கீழ் சிங்கள, தமிழ் மொழி மூலமான கல்வியை ஒரே பாடசாலையில் பெறக் கூடியதாக திட்டமிடப்பட்டுள்ளது. சில பாடசாலைகட்கு விலக்களிக்கப் பட்டுள்ளதாச அறியக் கிடைக்கிறது. அவை வசதி படைத்தவர்களது பாடசாலைகளாக இருக்கும்.

இவ்வாறான மாற்றங்களால் அதிகம் பாதிக்கப்படப் போவது இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பின்தங்கிய கிராமப்புற பாடசாலைகளும், பெருந்தோட்டப் பாடசாலைகளும் ஆகும். இப் பிரதேசங்களின் உட்கட்டமைப்பு விதிகள் இன்றும் மிகுந்த மோசமானதாகவே உள்ளன. புதிய மாற்றங்கள், வளர்ந்த ஏதேனும் நாட்டினது மாதிரியாக இருக்கலம். அந் நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகட்கும் எமது நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளும் பாரிய இடைவெளி உள்ளதை புரிந்து கொள்ள வேண்டும்.

இதனால் பாதிக்கப்படுவோர் இலங்கையின் சாதாரண உழைக்கும் மக்களும் அவர்களது பிள்ளைகளும் ஆவர். எனவே அவர்களும் அவர்கள் சார்பிலான படித்தவர்களும் இதுபற்றி விழிப்புடன் இருக்கவேண்டும். எமது பிள்ளைகளின், இந்த நாட்டின் எதிர்காலத்தை சிறந்ததாக மாற்றுங் கடமை உழைக்கும் மக்களைச் சார்ந்ததாகும். அவர்கள் பக்கத்தில் இருக்கும் கல்வியாளர்களுக்குரியதாகும்.

எல்லண்ணா

# புலம் பெயர்ந்த நாடுகளில் தோழர் செந்திவேல் மேற்கொண்ட அரசியற் பயணம்.

புதிய- ஜனநாயக மாக்சிச- லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா. செந்திவேல் அண்மையில் கனடா, பிரானஸ், டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு அரசியல் பயணம் மேற்கொண்டு நாடு திரும்பினார். கனடாவில் கடந்த 20 வருடங்களாகச் செயல்பட்டு வரும் தேடகம் (TRC) அமைப்பின் 20வது வருடச் சிறப்பு நிகழ்வில் மறைந்த தோழர் சிவம் நினைவுப் பேருரையை வழங்க அவர் அழைக்கப்பட்டிருந்தார். ஒக்ரோபர் 2ம் திகதி மேற்படி நிகழ்வு மாலை 5 மணிக்கு ரொரன்றோ நகரில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு தேடகத்தின் சார்பில் தோழர் பா. அ. ஜயகரன் தலைமை தாங்கினார். அவர் தனது தலைமை உரையில் தேடகத்தின் கடந்த 20 வருடகாலப் பணியை எடுத்துரைத்தார். தோழர் சிவம் நினைவாக வெளியிடப்பட்ட தேடல் சிறப்பு மலரை தோழர் செந்திவேல் வெளியிட்டு அதன் முதற் பிரதியை மறைந்த தோழர் சிவத்தின் மனைவிக்கு வழங்கினார். அதனைத் தொடர்ந்து தோழர் செந்தில் நேர்மையான புரட்சிகரப் பொதுவுடமைவாதியாக வாழ்ந்து மறைந்த தோழர் சிவத்தின் நினைவுகளை மீட்டுத் தனது உரையை ஆரம்பித்து இலங்கையின் தற்போதைய அரசியல் நிலை, வடக்கு கிழக்கு மக்களின் அவல நிலை, அவற்றுக்குக் காரணமாக அமைந்த பேரினவாத ஒடுக்குமுறை, தமிழ் ஆதிக்க அரசியலின் குறுந்தேசியவாத நிலைப்பாடு என்பனவற்றை உள்ளடக்கிய உரையை நிகழ்த்தினார். புலிகளின் தலைமையிலான தவறான போராட்டமும் அதன் தோல்வியும் தமிழ் மக்களின் மத்தியில் ஏற்படுத்தியுள்ள அரசியல் வெற்றிடத்தை தூரநோக்கிலான உறுதி மிக்க சரியான கொள்கையின் மூலம் நிரப்புவதற்கும் அறைகூவல் விடுத்தார். இலங்கையின் இன்றைய நவகொலனித்துவ அமைப்பின் கீழ் நிலவும் நான்கு வகையான முரண்பாடுகள், வர்க்க, இன, சாதிய, பெண் ஒடுக்குமுறைகளாக நீடித்து வருவதை எடுத்துக் காட்டினார். இவற்றில் வர்க்க ஒடுக்குமுறை அடிப்படையானதாக இருக்கும் அதேவேளை, இன முரண்பாடு பிரதான முரண்பாடாக இருந்து வருவதையும் விளக்கினார். தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி முன்வைக்கும் நான்காம் கட்டப் போர் பற்றி விபரித்த தோழர் செந்தில் அது உழைக்கும் மக்கள் தலைமையிலான பரந்துபட்டதும் ஐக்கியப்பட்டதுமான வெகுஜனப் போராட்ட மாரக்கமாக அமைவதையும் வற்புறுத்தினார். சுமார் ஒன்றே முக்கால் மணிநேரம் ஆற்றிய அவரது நீண்ட உரையினை மண்டபம் நிறைந்த மக்கள் மிகுந்த அவதானிப்புடனும் ஆர்வத்துடனும் செவிமடுத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து ஒக்ரோபர் 23ம் திகதி ரொரன்ரோவில் மற்றொரு உரையும் கலந்துரையாடலும் இடம் பெற்றது. "தீண்டாமை ஒழிப்புப் போராட்டமும் ஒக்ரோபர் எழுச்சியும்- ஒரு போராளியின் பார்வையில்" என்னும் தலைப்பில் தோழர் செந்தில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜனப் போராட்டத்தின் சாரம்சத்தையும அக்கால தனது போராட்ட அனுபவங்களையும் எடுத்துக் கூறி உரையாற்றினார். உரையினைத் தொடர்ந்து சபையோர் கருத்துக்களும் கேள்விகளும் விடைகளும், கலந்துரையாடல்களும் இடம்பெற்றன.



அடுத்து ஒக்ரோபர் 30ம் திகதி "இலங்கையின் தேசிய இனங்கள் எதிர்நோக்கும் சவால்கள்" என்னும் தலைப்பிலான அரசியல் அரங்கத்தில் தோழர் செந்திவேல், பொன். பால்ராஜன், ஜான் மாஸ்ரர் ஆகியோர் தத்தமது அரசியல் நிலைப்பாட்டை முன்வைத்தனர். பெண்கள் உட்பட பெரும் தொகையானோர் கலந்து கொண்ட மேற்படி நிகழ்வில் சபையோர் கேள்விகளும் கருத்துரைகளும் இடம்பெற்றன. மேற்படி நிகழ்வுகளுக்கு அப்பாலும் பல்வேறு அரசியல கலந்துரையாடல்கள், சந்திப்புக்கள், வானொலி நேர்காணல், வீடியோ பதிவுகள் என்பன ரொரன்றோவில் இடம்பெற்றன.

கனடாவில் தனது ஒருமாதகால அரசியல் பயணத்தை முடித்துக் கொண்டு பிரான்ஸ் வந்தடைந்த தோழர் செந்திவேல் நவம்பர் 7ம் திகதி பாரிஸ் நகரில் "இலங்கையின் எதிர்காலம்" என்னும் தலைப்பில் 'அசை- சமூக அசைவிற்கான எழுத்தியக்கம்' ஏற்பாடு செய்த கூட்டத்தில் உரையாற்றினார். அங்கு சுமார் ஒன்றரை மணிநேரம் உரையாற்றிய தோழர் செந்திலிடம் சபையோர் கேள்விகளை கேட்டு இலங்கையினதும

10ம் பக்கம் பார்க்க

# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை 10

- வெகுஜனன் -

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் 1987 யூலை 29ம் திகதியன்று அமைதி காக்கும் படையென்னும் பெயரில் வந்திறங்கிய இந்தியப் படைகள் வடக்குக் கிழக்கில் பரந்து நிலை கொண்டன. இலங்கை ராணுவம் பிரதான முகாங்களுக்குள் இருந்து கொண்டது. எங்கும் ஒரு அமைதி நிலவியது போன்ற தோற்றம் காணப்பட்டது. ஆனால் அது புயலுக்கு முன்பான அமைதி போன்றே இருந்தது. பிராந்திய மேலாதிக்க நோக்கம் கொண்டிருந்த இந்திய ராணுவமும் ஏகப் பிரதிநிதித்துவ ஆதிக்க எண்ணத்திலிருந்து வந்த விடுதலைப் புலிகளும் ஒரு நேரடி மோதல் நிலையை நோக்கி நகருகிற சூழலை ஏற்படுத்தி வந்தனர். ஆயுத ஒப்படைப்பும் வாய்ச்சொல் வாக்குறுதியும், வெறுமையான வார்த்தைகள் என்பதும் ஏமாற்று நடவடிக்கை என்பதும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு மட்டுமன்றி விபரங்களைப் பார்த்து நின்ற அனைவருக்கும் புரியக் கூடியதாக இருந்தது.



பத்து விடுதலைப்புலிகள் சயனைட் உட்கொண்டு தடுப்பில் இறந்த சம்பவமும் உண்ணாவிதரம் இருந்து உயிர் நீத்த திலீபனின் சாவும் இந்திய ராணுவத்திற்கு எதிரான மோதல் நிலைக்கு வழி வகுத்தது. இவற்றுடன் பொதுமக்கள் மத்தியில் விடுதலைப் புலிகளின் திட்டமிட்ட பிரச்சாரத்தை முன்னெடுக்கும் முகமாக ஆங்காங்கே எதிர்ப்பு நடவடிக்கைகளும் இந்திய இராணுவத்திற்கெதிராகத் தூண்டி விடப்பட்டன. இந்தியாவும் இந்திய ராணுவமும் விடுதலைப் புலிகளை மதித்து ஒரே ஒரு போராட்டச் சக்தியாகவும் ஏப்பிரதிநிதியாகவும் ஏற்க மறுத்த நிலையில், புலிகளால் இந்திய எதிர்ப்பு காட்டப்பட்டது. அதற்கு அப்பால், இந்தியாவின் பிராந்திய நோக்கத்திற்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்ததல்ல என்பது காண வேண்டிய உண்மையாகும்.

இந்நிலையில் 1987 ஒக்டோபர் 10ந் திகதி இந்திய ராணுவம் தனது தாக்குதல் முனையைத் திறந்து கொண்டது. விடுதலைப் புலிகளை நிராயுதபாணியாக்கி வடக்குக் கிழக்கில் அமைதியை நிலை நிறுத்துவது எனத் தொடங்கிய இந்திய ராணுவ நடவடிக்கையை எதிர்த்து விடுதலைப் புலிகளும் எதிர்த் தாக்குதல் நடத்தினர். இவற்றால் பொதுமக்களே தாக்குதல்களுக்கும் உயிரிழப்புகளுக்கும் ஆளாகினர். பொதுமக்கள் கொல்லப்படுவது பற்றி இரு தரப்பினரும் அக்கறையோ அனுதாபமோ கொண்டிருக்கவில்லை என்பதை முக்கியமான இராணுவ நடவடிக்கைகளின் போது காண முடிந்தது.

இதற்கு உதாரணமாக, யாழ் கொக்குவில் பகுதியில் பிரம்படி எனும் இடத்தில் 40 பொதுமக்களை இந்திய ராணுவம் சுட்டுக் கொன்று தமது அந்நிய ராணுவ அக்கிரமத்தை வெளிப்படுத்தியது. அதன் கொடூரத்திற்கு மற்றொரு எடுத்துக் காட்டாக அதே இடத்தில் சில பொதுமக்களை வீதியில் படுக்க வைத்து அவர்களுக்கு மேலால் தமது டாங்கியை ஓட்டிச் சென்றனர். இம் மோதலில் 37 இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். இச் சம்பவத்தின் போது ஆங்காங்கே இந்தியப் படைகளால் பெண்கள் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டனர்.



இவ்வாறு ஒக்ரோபர் 10ம் திகதிக்குப் பின்பு வடக்குக் கிழக்கின் சகல பகுதிகளிலும் இந்திய ராணுவத்தின் தாக்குதல்கள் விரிவடைந்தன. அவை ஈவிரக்கமற்றவையாகவும் மக்களை அற்பமானவர்களாகவும் கருதிய தாக்குதல்களாகவே அமைந்தன. விடுதலைப் புலிகளும் இந்திய ராணுவத்திற்கெதிரான பரவலான தாக்குதல்களை விரிவுபடுத்தினர். அவர்களும் மக்களின் நலன்களை கவனத்தில் கொள்ளாது நடந்து கொண்டனர். புலிகள் இயக்கத்தினரை அடையாளம் காணமுடியாத சூழலில் புலியெனச் சந்தேகித்த பொதுமக்களும் இளைஞர் யுவதிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஆதரவு கொடுக்கும் பொதுமக்கள் என்ற பெயரில் வயது முதிர்ந்தவர்கள் பெண்கள் என்ற வேறுபாடின்றி சுட்டுக் கொல்லப்பட்டதுடன் பலரும் பலவாறான அவமதிப்புக்களுக்கு ஆளாக்கப்பட்டனர்.

இவ்வாறு இந்திய ராணுவம் விடுதலைப் புலிகளின் ராணுவச் செல்வாக்குப் பிரதேசம் எனக் கணிக்கப்பட்ட குடா நாட்டினைத் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் திட்டமிட்ட தாக்குதல்களை மேற்கொண்டனர். ஷெல் தாக்குதல்கள். உலங்குவானூர்தித் தாக்குதல்கள், நேரடியான தரைத் தாக்குதல்கள் எனப் பரந்தளவில் இடம்பெற்றன. கேள்வி நியாயமின்றி இந்திய இராணுவம் தனது தாக்குதலின் போது பொதுமக்களைச் சுட்டுக் கொன்றது. யாழ் மருத்துவமனைப் பிரேத அறை நாளாந்தம் நூற்றுக்கு மேற்பட்ட சடலங்களால் நிரம்பி வழிந்தது. பலர் காயப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்தனர். டாக்டர்கள் தாதிமார்கள், ஊழியர்கள் மிகுந்த நெருக்கடிகட்கும் மரண பீதிக்கும் மத்தியில் நோயாளர்களுக்குச் சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தனர்.

இந் நிலையில் ஒக்ரோபர் இறுதி வாரத்தில் யாழ் போதனா வைத்தியசாலையின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அவ் வைத்தியசாலையும் அதன் அண்டிய பிரதேசத்தையும் பாதுகாப்பு வலயமாக்கி வைத்திருந்த முன்னைய நிலைப்பாட்டை இந்திய ராணுவம் துச்சமாக்கியவாறு ஷெல் தாக்குதல்களையும் துப்பாக்கிச் சூடுகளையும் நடத்தியது. இதற்குக் களமமைத்துக் கொடுப்பது போன்று விடுதலைப் புலிகள் மேற்படி வைத்தியசாலைக்குள் இருந்து தமது தாக்குதல்களை நடாத்தியிருந்தார்கள். யாழ் நகரத்தைக் கைப்பற்றும் இந்திய ராணுவத்தின் தாக்குதல் முயற்சியின் போது யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையில் இருந்த வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட ஊழியர்கள் பலர் கொல்லப்பட்டனர். பிரபல குழந்தை வைத்திய நிபுணர் சிவபாதசுந்தரம், தான் ஒரு வைத்தியர் என்றும் மற்றையோர் தாதியர் என்றும் கைகளை உயர்த்தியவாறு உரத்துக் கூறி நின்றபோதும் அந்த அகிம்சை நாட்டின் இராணுவம் ஈவிரக்கமின்றி அவ் வைத்திய நிபுணரைச் சுட்டு வீழ்த்தியது. இது போன்ற கொடிய ராணுவத் தாக்குதலை, அதற்கு முன்புஞ் சரி, பின்புஞ் சரி, இலங்கை ராணுவம் யாழ் போதனா வைத்தியசாலையில் நடத்தியது கிடையாது என்பது ஒப்பிடத்தக்கதாக அமைந்திருந்தது.

இந்திய இராணுவத்தினதும் புலிகளினதும் ராணுவ மோதல் வடக்கின் சகல பகுதிகளிலும் இடம்பெற்றது போலவே கிழக்கிலும் காணப்பட்டன. வடக்கில் காங்கேசன்துறை துறைமுகம் பலாலி விமான நிலையம் முற்று முழுதாக இந்திய ராணுவத்தின் வசமிருந்தது. அதே போன்று திருகோணமலைத் துறைமுகத்தையும் விமான நிலையத்தையும் இந்திய ராணுவம் தனது விருப்பின்படி கையாண்டது. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இந்திய ராணுவம் புலிகளை நிராயுதபாணியாக்குவது என்னும் பெயரில் தனது தாக்குதல்களை மேற்கொண்டது. ஏற்கனவே மட்டக்களப்பில் பூபதி என்ற பெண்மணியை சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க வைப்பதில் புலிகள் முன்னின்று செயற்பட்டு அவரது இறப்பைப் பயன்படுத்தி இந்திய ராணுவத் தலையீடுக்கெதிரான உணர்ச்களை முன் தள்ளிக் கொண்டனர்.

எழுபதுகளில் ஆரம்பத்தில் கிழக்கு பாகிஸ்தானில் புகுந்த இந்திய ராணுவம் பங்ளாதேஷ் உருவாக்கத்திற்குத் தனது படை பலத்தைப் பயன்படுத்திக் கொண்டது. அவ்வாறு இலங்கையில் வடக்குக் கிழக்கை பிரித்துத் தமிழீழத்தை துண்டாடித் தரும் என முன்பு நப்பாசை கொண்டிருந்த தமிழ்த் தலைமைகளுக்கு அமைதிப் படையின் மக்கள் மீதான மிருகத்தனமான தாக்குதல்களும், அடாவடித்தனங்களும் பெரும் அடியாகவும் ஏமாற்றமாகவும் அமைந்திருந்தன. தான் மேலாதிக்க அகங்காரம் கொண்ட ஒரு அந்நிய இராணுவம் என்பதை இந்திய ராணுவம் இலங்கையில், அதுவும் தமிழர்களின் மத்தியில், நிரூபித்து நின்றது. அதனால், இந்தியப் படை ஒரு அமைதி காக்கும் படையாக இருக்க முடியாது, அது ஒரு ஆக்கிரமிப்புப் படையாக மட்டுமே இருக்க முடியுமென்று மாக்சிச லெனினிசவாதிகளின் எதிர்வு கூறியது நிதர்சனமாக மக்கள் முன் தெளிவாகியது.

மேலும் இந்திய ராணுவ-புலிகள் இயக்க மோதல் உக்கிரமடைந்து வந்த சூழலில் ஜே.ஆர். ஜயவர்த்தன தனது ராஜதந்திர நகர்வின் வெற்றியை இட்டுப் பெருமிதம் கொண்டிருந்தார். எந்த இந்தியா தமிழ் இளைஞர் இயக்கங்களுக்கு பயிற்சியும் ஆயுதங்களும் கொடுத்து வந்ததோ அந்த இயக்கங்களில் வல்லமை பொருந்திய புலிகள் இயக்கத்துடன் ராணுவ மோதலில் ஈடுபட்டு இந்தியா இழப்புக்களைச் சந்தித்து வருவதையிட்டு ஜே.ஆர். திருப்தி அடைந்தார். அதே வேளை எப்பொழுதும் இந்தியாவைத் தாய் நாடு என்றும் தொப்புள் கொடி உறவு என்றும் கண்மூடித்தனமாக போற்றிப் புகழ்ந்து வந்த தமிழ்த் தலைமைகள் மக்கள் மத்தியில் வெட்கித் தலைகுனிவுக்கு ஆளாகினர். அதுவரை இருந்து வந்த ஆளும் வர்க்கப் பிரமையானது தமிழ் மக்கள் மத்தியில் முதல் தடவையாக உடைந்து அம்பலமாகியது. இந்திய ராணுவத்தின் கொடூரத் தாக்குதல்கள், ஈவிரக்கமற்ற போக்குகள், அதிகாரத் திமிர், வல்லரசு ராணுவம் என்னும் அகங்காரம், பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச்செயல்கள் போன்ற யாவும் இந்திய ராணுவத்தின் மீதான தமிழ் மக்களின் வெறுப்பை அதிகரித்தன.


இத்தகைய சூழலைப் புலிகள் இயக்கம் தனது நிலைப்பாட்டிற்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது. அதனை வைத்து, இந்திய ராணுவ ஆதரவு கொண்ட தமிழ் இயக்கங்கள் இந்திய ராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்தி நின்றன. ஏற்கனவே புலிகள் இயக்கத்தால் பழிவாங்கப்பட்டு இழப்புக்களைச் சந்தித்த தமிழ் ஆயுத இயக்கங்கள் தமது இலங்கை அரசாங்க ஆதரவு நிலைப்பாட்டுடன் இந்தியாவின் அரவணைப்புக்குள் சுகம் காண முன்வந்து கொண்டன. இதில் ஈ.பி.ஆர்.எல்.எவ். முதன்மை பெற்று நின்றது.

இலங்கை-இந்திய ஒப்பந்தமும் அதனைத் தொடர்ந்த இந்திய ராணுவ வருகையும் அதனை எதிர்த்து நின்ற புலிகள் இயக்கத்தின் ராணுவ நடவடிக்கையும் இலங்கையின் இனப் பிரச்சினை சார்ந்த விடயமாகவே வெளித் தோற்றத்திற்குக் காணப்பட்டது. அதில் உண்மையில்லை என நிராகரிக்க முடியாது. ஆனால் அதன் பின்னால் இப் பிராந்தியத்தில் யார் ஆதிக்கம் செலுத்துவது என்பதில் இந்தியப் பிராந் திய மேலாதிக்க ஆளும் வர்க்க சக்திகளுக் கும் அமெரிக்க- மேற்குலக மேலாதிக்கச் சக்திகளுக்கு மிடையிலான உள்ளார்ந்த போட்டியாக இருந்தமை உள்ளுறை யாகும். இதன் அடிப்படையில் தமிழீழத்திற்காக ஆயுதமேந்தி நின்ற இளைஞர் இயக்கங்கள் அணி பிரிந்து இந்திய- அமெரிக்க அரவணைப்பிற்கும் வழிகாட்டல்களுக்கும் ஆளாகின. இதில் புலிகள் இயக்கமானது மிக நாசூக்கான வழிகளில் தன்னை அமெரிக்க, மேற்குலக விசுவாசியாக்கிக் கொண்டது.



இந்தியப் படைகளின் நிலை கொள்ளலும் ராணுவ நடவடிக்கைகளும் தெற்கில் பல்வேறு எதிர்விளைவுகளைத் தோற்றுவித்தன. ஜே.ஆர். தலைமையிலான ஐ.தே. கட்சி அரசாங்கம், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி., பாராளுமன்ற இடதுசாரிகள் என்போர் மத்தியில் உருவாகியிருந்த அரசியல் நிலைப்பாடுகள் வெவ்வேறு வழிகளில் வெளியிடப்பட்டன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி இலங்கை இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்தது. அதனை வைத்து சரிந்து போன தனது பாராளுமன்றச் செல்வாக்கை மீளப் பெற்றுக் கொள்ள முயன்றது. அதன் அடிப்படையில் இந்திய ராணுவம் வடக்குக் கிழக்கில் இருந்து வெளியேற வேண்டும் என்பதை வலியுறுத்தியது. அதே வேளை இடதுசாரிகள் எனப்பட்ட பாராளுமன்றவாதிகள் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஆதரித்து நின்றனர். அந்தவேளை ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இலங்கை- இந்திய ஒப்பந்தம், இந்தியப் படைகளின் பிரசன்னம் ஆகியன பற்றி பலத்த கருத்து மோதல்கள் உட்கட்சி முரண்பாடுகளாக வளர்ந்து கொண்டிருந்தன. அன்று ஜே.ஆர். தலைமையிலான ஐ.தே.கட்சி அரசாங்கம் ஆறில் ஐந்து பெரும்பான்மை குலையாதவாறு பார்த்து வந்தது. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. ஒன்று, ஜே.ஆர் அமெரிக்க- மேற்குலக விசுவாசமும் முதலாளித்துவ ஆளும் வர்க்க அரசியல் ஆளுமையும் கொண்வராக விளங்கினார். இரண்டு, தனது அரசாங்கப் பாராளுமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரிட மும் இருந்து திகதி இடப்படாத பாரளுமன்றப் பதவி விலகல் கடிதங்களை ஆரம்பத்திலேயே பெற்று வைத்திருந்தார். மூன்றாவது, ஆர். பிரேமதாசா, அத்துலத் முதலி, காமினி திசாநாயக்க ஆகியோரிடையே உருவாகி நின்ற அடுத்த தலைமைப் போட்யை ஜே. ஆர். தனக்குரிய நரித் தந்திர அரசியல் மூலம் கையாண்டு வந்தார். இதில் பிரேமதாசா தனது இடத்தையும் எதிர்காலத்திற்குரிய நிலையை யும் பாதுகாத்துக் கொண்டார். இத்தகைய தென் இலங்கைச் சூழலில் ஜே.வி.பி. தனது முன்னைய இந்திய விஸ்தரிப்பு வாத எதிர்ப்புக் கொள்கையை தனது அரசியல் மூலதனத்தின் ஒரு பகுதியாக்கிக் கொண்டது. இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சிக்கு தன்னைத் தயாராக்கிக் கொண்டது. தென்னிலங்கையில் மீண்டும் இளைஞர் யுவதிகளை வீணே பலி கொடுக்கும் கொள்கையை விஜயவீரா தன தலைமைத்துவ வழிகாட்டலில் நடைமுறைப்படுத்த முன்வந்தார். தாக்கி அழித்துவிட்டுத் தப்பி ஓடும் தனிநபர்கள் மீதான தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டன. இத் தாக்குதல்களுக்கு இலங்கை இந்திய ஒப்பந்தத்தையும் அதன் கீழான மாகாண சபைகள் தோற்றுவிக்கப்படுவதையும் ஆதரித்த பலர் ஜே.வி.பி. யால் கொல்லப்பட்டனர். இதில் பாராளுமன்ற இடதுசாரிகள் நூற்றுக்கு மேற்பட்டோர் ஜே.வி.பியினர் தம்மை தேசப்பற்றாளர்களாக மக்கள் மத்தியில் உருவகப்படுத்திக் காட்ட முன்னின்றனர். தெற்கிலே இந்திய எதிர்ப்பலையை ஜே.வி.பி யானது முன்னெடுத்த போதிலும், வடக்கு கிழக்கில் அவர்களால் எதனையும் செய்ய இயலவில்லை.



இவ்வாறு தெற்கில் இந்திய ஒப்பந்த எதிர்ப்பும் மாகாண சபைக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை நிராகரித்த அரசியல் போக்குகள் முன் தள்ளப்பட்டன. அதேவேளை இந்தியாவிற்கு ஒப்பந்த வழியாக வழங்கப்பட்ட வாக்குறுதியின் படி ஜே. ஆர். அரசாங்கம் மாகாணசபைகளுக்கான தேர்தலையும் அதன் மூலம் மாகாண சபைகள் நிறுப்படுவதற்கான நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டன. அதனை வடக்குக் கிழக்கில் புலிகள் இயக்கம் எதிர்த்து நின்றது. இவற்றின் நடுவே தேர்தல் மூலம் மாகாண சபை சபைகள் தோற்றுவிக்கப்பட்டன. இது பற்றி அடுத்து பார்க்க முடியும். அதே வேளை, வடக்குக் கிழக்கில் இலங்கை இந்திய ஒப்பந்த அடிப்படையில் உருவாக்கப்பட்ட பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் மாகாண சபைகளை உருவாக்கும் முயற்சிகள் முன் தள்ளப்பட்டன. அவை பற்றி அடுத்த பாகத்திற் பார்க்க முடியும்.

# பேரினவாத ஒடுக்குமுறையும் தமிழீழக் கோரிக்கையும் மக்களின் அழிவுகளுக்கு அடிப்படையாகும் ~ கனடாவில் தோழர் செந்தில்

**அண்மையில் கனடா, பிரான்ஸ், டென்மார்க் ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு நாடு**

**இங்க தருகின்றோம்.**

*(ஆசிரியர் குழு)*

***கேள்வி:*** *நீங்கள் அண்மையில் கனடா, பிரான்ஸ், டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு பயணம் செய்து திரும்பியுள்ளீர்கள். அப் பயணத்தின் நோக்கம் என்ன?*

**பதில்:** இப் பயணம் முற்றிலும் அரசியல் பயணமாகவே அமைந்திருந்தது. கனடாவில் அங்குள்ள தமிழர்கள் மத்தியில் கடந்த இருபது வருடங்களாக அரசியல் சமூக கலை இலக்கிய அமைப்பாகச் செயற்பட்டு வருவது தேடகம். அதன் முன்னிலைத் தோழர்களில் ஒருவராகச் செயலாற்றி வந்தவர் பொதுவுடமைவாதியான தோழர் நெல்லியடி சிவம். அவரது மறைவின் முதலாண்டு நிறைவு தினக் கூட்டத்தில் நினைவுரை நிகழ்த்தத் தேடகம் அமைப்பினர் என்னை அழைத்திருந்தனர். அத்துடன் அங்கு ஒரு மாத காலம் தங்கியிருந்து அவர்கள் ஒழுங்கு செய்த பல்வேறு நிகழ்ச்சிகளிற் கலந்துகொள்ளும் வாய்ப்புங் கிடைத்தது. அதன் பின்பு பிரான்ஸிலும் டென்மார்க்கிலும் இடம்பெற்ற கூட்டங்களிலும் சந்திப்புகளிலும் கலந்து கொண்டேன்.

***கேள்வி:*** *உங்களைக் கனடா நாட்டிற்கு அழைத்திருந்த தேடகம் அமைப்பு புலிகளுடன் சம்மந்துமுடைய ஒரு அமைப்பு என்று இங்கு பிரச்சாரம் செய்யப்படுகிறதே. அதில் உண்மை உண்டா?*

**பதில்:** 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்றதொரு முதுமொழி உண்டு. அதே போன்றது தான் தேடகம் அமைப்பின் மீதான புலி முத்திரை குத்தலும். கடந்த காலத்திலும் தற்போதும் புலி ஆதரவு அல்லது புலி எதிர்ப்பு என்ற இரண்டு சட்டகங்களுக்குள் மட்டும் வைத்து விடயங்களையும் மனிதர்களையும் பார்க்கும் போக்கு இருந்து வந்துள்ளது. இவ்விரண்டிற்கும் அப்பால் மூன்றாவதாக ஒரு நிலைப்பாடு இருந்து வருவதைக் காணவோ ஏற்கவோ மறுப்போரின் வக்கிரத்தனத்திலிருந்தே இப் புலி முத்திரை குத்தல் இடம்பெறுகிறது. மூன்றாவது நிலைப்பாடானது அனைத்து ஒடுக்குமுறைகளையும் எதிர்த்து மக்கள் சார்பாக அவர்களின் பக்கத்தில் இருந்து மாற்று அரசியலை வற்புறுத்துவதாகும். இதனை நேர்மையாக உள்வாங்க முடியாது, வெறும் புலி எதிர்ப்பாளர்கள் தமது பேரினவாத ஆளும் வர்க்கச் சார்பை நியாயப்படுத்தவே ஏனையோர் மீது புலி முத்திரையைப் பொறிக்க முன்நிற்கின்றனர்.

***கேள்வி:*** *அது பற்றி விளங்கிக் கொள்ள முடிகிறது. அப்படியானால் நீங்கள் பங்கு கொண்ட நிகழ்ச்சிகள் பற்றிக் கூறுங்கள்.*

**பதில்:** கனடாவில் ரொரன்றோ நகரில் தேடகம் ஏற்பாடு செய்திருந்த தோழர் சிவம் நினைவுக் கூட்டத்தில் சுமார் ஒன்றே முக்கால் மணிநேரம் உரையாற்றினேன். அக் கூட்டத்தில் தேடல் சஞ்சிகையின் சிறப்பு மலர் சிவம் நினைவாக வெளியிடப்பட்டது. மேலும் ரொரன்றோவில் 'தீண்டாமை ஒழிப்புப் போராட்டமும் ஒக்ரோபர் எழுச்சியும்- ஒரு போராளியின் பார்வையில்....' எனும் தலைப்பில் ஒரு கூட்டமும் கலந்துரையாடலும் இடம்பெற்றது. மற்றொரு கூட்டம் 'இலங்கையில் தேசிய இனங்கள் எதிர்நோக்கும் சவால்கள்' என்னும் தலைப்பில் இடம்பெற்றது. இது ஒரு வித்தியாசமான கூட்டமாக அமைந்திருந்தது. இதில் எமது கட்சியின் சார்பில் நானும் "மே 18 இயக்கத்தின்" சார்பில் ஜான் மாஸ்ற்ரரும், நாடு கடந்த தமிழீழம் அமைப்பின் சார்பில் பொன். பால்ராஜனும் கலந்து கொண்டோம். இதில் தத்தம் அமைப்பின் கொள்கைகளையும் நிலைப்பாட்டையும் முன் வைத்துத் தெளிவுபடுத்துமாறு கேட்கப்பட்டது. அவ்வுரைகளுக்குப் பின் சபையினரிடமிருந்து கேள்விகள் கேட்கப்பட்டன. அத்துடன் கருத்துரைகளும் முன்வைக்கப்பட்டன. இவ்வரங்கத்தைத் தேடகம் சார்பாக தோழர் பா.ஆ. ஜயகரன் நெறிப்படுத்தினார். இக் கூட்டங்களை விடவும் பல்வேறு கலந்துரையாடல்களிலும் சந்திப்புக்களிலும் கலந்து கொள்ள முடிந்தது.

***கேள்வி:*** *நீங்கள் நாடு கடந்த தமிழீழம் அமைப்பின் பிரதிநிதி கலந்து கொண்ட கூட்டத்தில் பங்கு கொண்டதைப் புலிகளுடன் இணைந்து நின்று பேசியதாக இங்கு கூறிவருகிறார்கள் என்று நினைக்கின்றோம். அது பற்றி என்ன கூறுகிறீர்கள்?*




**பதில்:** பங்கு கொண்டதில் எந்தத் தவறும் இல்லை. அவர்கள் தமது நிலைப்பாட்டை எடுத்துரைக்க நான் எமது கட்சியின் கொள்கை நிலையினைச் சபையோர் முன் எடுத்து விளக்கினேன். அதன் மூலம் நாடு கடந்த தமிழீழமென்பது அர்த்தமற்ற ஒன்று என்றும் இது கடந்த முப்பத்திநான்கு வருடங்களாக தமிழீழத்தைப் பற்றிய கனவின் தொடர்ச்சி என்றும் எடுத்துரைக்க வாய்ப்பு ஏற்பட்டது. முன்பு, 1975ல், தமிழீழக் கோரிக்கையைப் பற்றி எமது கட்சி அம்பலப்படுத்தி அதன் சாத்தியமின்மையைச் சுட்டிக் காட்டி விவாதங்களைக் கருத்தரங்குகளும் நடாத்தியமை நினைவுக்கு வருகிறது. யாரோடும் எங்கும் பேசலாம். ஆனால் அங்கு என்ன பேசுகின்றோம் என்பதே மிக முக்கியமானதாகும். அன்றுஞ் சரி, இன்றுஞ் சரி, நாம் கொள்கையை விட்டுக் கொடுத்து கிடையாது.

***கேள்வி:*** *நீங்கள் ரொரன்றோவில் சிவம் நினைவுக் கூட்டத்தில் நீண்ட நேர உரையை ஆற்றினீர்கள். அதன் சாராம்சத்தைச் சுருக்கமாகக் கூற முடியுமா?*

**பதில்:** எனது உரையில் தோழர் சிவத்தை முதலில் நினைவு கூர்ந்தேன். அவர் எங்களோடு பொதுவுடமை இயக்கத்தில் புரட்சிகரப் பணியாற்றியவர். அனைத்து ஒடுக்குமுறைகளையும் எதிர்த்து நிற்பதில் முன்னின்றவர். புலம்பெயர்ந்த சூழலிலும் தனது பொதுவுடமைக் கொள்கைப் பணியினை தேடகம் அமைப்புடன் சேர்ந்து முன்னெடுத்தவர். தான் ஒரு சர்வதேசியவாதி என்ற அடையாளத்தை இழக்காத, மானுடநேயத்தை அடிநாதமாகக் கொண்டவர் என்பதை நினைவூட்டினேன்.

மேலும் எனது உரையில், யுத்தத்தின் முடிவுக்குப் பின்னான



இலங்கையின் அரசியல் நிலமை, பேரினவாத ஒடுக்குமுறையின் தொடர்ச்சி புதிய வடிவம் பெற்று நிற்பது, இன்றைய ஆளும்வர்க்க சக்திகள் ஃபாசிசத்தை கைப்பிடித்துச் செல்லும் அபாயம், அதற்கான வழியில் கொண்டுவரப்பட்ட பதினெட்டாவது திருத்தம் என்பன பற்றியும் குறிப்பிட்டேன். மேலும், இலங்கையின் அடிப்படை முரண்பாடு வர்க்க முரண்பாடாக நீடித்து வரும் அதேவேளை, தேசிய இனப் பிரச்சினையானது யுத்தத்திற்குப் பின்பும் பிரதான முரண்பாடாக நீடித்து வருவதையும் சுட்டிக் காட்டினேன். அதனைத் தீர்ப்பதில் தமிழ்த் தேசிய இனத்தின் போராட்ட வரலாற்றில் வெற்றி பெற முடியாது போன மூன்று கால கட்டங்களை 1920ல் இருந்து சுட்டிக்காட்டி, நான்காம் கட்டத்திற்கான போராட்ட மார்க்கம் பற்றிச் சுட்டிக்காட்டினேன். அந்த நான்காம் கட்டத்திற்கான கொள்கை, தந்திரோபாயம், செயற்றிட்டம் ஆகிய யாவும் புதிய திசையில் --இதுவரை பரீட்சிக்கப்படாத தளங்களில்-- முன்னெடுக்கப்பட வேண்டியதையும் வலியுறுத்தினேன். அத்துடன் சாத்தியமற்றதும் வெற்றி பெற முடியாதும் போனதான தமிழீழக் கோரிக்கைக்கான சகல கடந்தகால போராட்டக் கொள்கை நிலைப்பாடுகளும் சுய விமர்சனத்திற்கும் மறு மதிப்பீட்டிற்கும் மக்கள முன் வைக்கப்படுவதையும் வற்புறுத்திக் கூறினேன். இதில் தனியே புலிகள் இயக்கம் மட்டுமன்றி தமிழீழக் கோரிக்கையை முன்மொழிந்த ஆதிக்க அரசியல் தலைமைகளும் அதனைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றிய சகல ஆயுதம் தாங்கிய இயக்கங்களும் அதற்கான பொறுப்பை ஏற்றே ஆக வேண்டுமென்பதையுஞ் சுட்டிக் காட்டினேன். மேலும் முடிந்த யுத்தத்தின் போது இலங்கை அரசாங்கம் இந்தியாவின் முழுமையான ஆதரவோடு முன்னெடுத்த தாக்குதல்களால் அவலங்களையும் இழப்புக்களையும் சந்தித்த மக்களின் சோகக் கதைகளையும் எடுத்துரைத்தேன். அதே வேளை, புலிகள் இயக்கம் மக்களை இறுதி வரை நிர்ப்பந்தித்து அழைத்துச் சென்று முள்ளிவாய்க்கால் அழிவுக்கு ஒருவகையில் காரணமாகி நின்றதையும் சுட்டிக்காட்டினேன்.

***கேள்வி:*** *புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் யுத்தத்திற்குப் பின்னான மனவுணர்வுகள் எவ்வாறு உள்ளன?*

**பதில்:** பொதுமக்களைப் பொறுத்தவரையில் தோற்றுப் போன மனவுணர்வும் நம்பிக்கையீனமான போக்குமே காணப்படுகின்றன. நம்பி ஏமாந்து விட்டோம் என்று கூறுபவர்களும் இருக்கின்றார்கள். இவற்றின் நடுவே பேரினவாத ஒடுக்குமுறை மீதான வெறுப்பும் எதிர்ப்பும் இருக்கவே செய்கிறது.

***கேள்வி:*** *அவ்வாறெனில் புலம்பெயர்ந்த நாடுகளில் அரசியல் அக்கறை கொண்டோரின் நடுவே காணப்படும் போக்குகள் எவ்வாறு காணப்படுகின்றன?*

**பதில்:** அவர்களிடையே மூன்று வித போக்கும் நோக்கும் காணப்படுகின்றன. 1- தோல்வி அடைந்த நிலையில் மூன்று நான்கு குழுக்களாகி நிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது பழைய நிலைப்பாட்டுடனேயே இருந்து வருகின்றனர். இதனால் விரக்தியடைந்த சிலரே மாற்று அரசியல் பற்றிச் சிந்திக்க முற்படுகின்றனர். அவர்களது குறுந்தேசியவாதம் கடந்த நிலைப்பாட்டைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். 2- வெறும் புலி எதிர்ப்பை மட்டும் கொண்டிருந்தவர்கள் தற்போது தம்மை இலங்கை அரசாங்க ஆதரவாளர்களாக்கி மகிந்த சிந்தனை அரசின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தி வருபவர்களாக உள்ளனர். 3- கடந்தகாலப் பட்டறிவுகளுடன் ஊடாக மக்களுக்கான மாற்று அரசியல் திசை மார்க்கத்தை வேண்டி நிற்போர். இவர்கள் சுயவிமர்சனத்தையும் சகலவற்றிலும் மறுமதிப்பீட்டைக் கோரி நிற்பவர்களாக உள்ளனர்.

***கேள்வி:*** *அவ்வாறெனில் இம் மூன்று தரப்பாரிடையே உங்கள் கட்சியின் நெருக்கம் அல்லது ஈடுபாடு எத்தரப்பினருடன் இருக்கலாம் என எதிர்பார்க்கின்றீர்கள்?*

**பதில்:** நிச்சயமாக முதல் இரண்டு தரப்பினருடன் நெருங்க முடியாது. ஏனெனில் அவர்கள் இரு அந்தலைகளில் இருந்து வருபவர்கள். இவர்கள் அரசியல் யதார்த்தத்தை புரிந்து கொள்ள மறுப்பவர்கள். மக்கள் சார்பையோ சமூக மாற்றத்தையோ கொண்டிராதவர்கள். ஆனால் குறிப்பிட்ட மூன்றாந் தரப்பினருடன் எமக்கு நெருக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்த முடியும். அதற்கான தொடர்ந்த உரையாடல்களும் செயற்பாட்டு நடைமுறைகளும் முன்னெடுக்கப்படுவது அவசியம். அதற்கான முன்முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படல் வேண்டுமென்பதே நமது நிலைப்பாடு.

***கேள்வி:*** *தீண்டாமை பற்றிய கூட்டம் இடம்பெற்றதாகக் கூறுனீர்கள். புலம்பெயர்ந்த தமிழர்களிடையே சாதியம்- தீண்டாமை எந்தளவில் பின்பற்றப்படுகிறது?*

**பதில்:** தமிழர்கள் எங்கு சென்றாலும் தம்முடன் சாதியத்தை எடுத்துச் செல்வதில் பின்நிற்பதில்லை. புலம்பெயர்ந்த நாடுகளில் தாராளமாகச் சாதியமும் தீண்டாமையும் நிலைத்து வருகின்றன. சாதியம் பற்றிய கருத்தியலும் அதன் சிந்தனை நடைமுறையும், பெருமையாகவும் உணர்ச்சி ததும்பவும் கூறப்படும் தமிழ்த் தேசியத்தின் ஒரு பகுதியாகவே இன்றும் இருந்து வருகிறது. அவ்வாறெனில் தமிழத் தேசியத்தை அதன் பழைமை வாதப் பிற்போக்குத் தனங்களின் அடிப்படையில் நிலை நிறுத்தி வரும் போக்கின் நடுவே சாதியமும் தீண்டாமையும் வெவ்வேறு வடிவங்களில் நீடித்து வருவதையே காண முடிகிறது. அதற்கான சமகால உதாரணங்கள் பலவற்றை அங்குள்ள தோழர்களும் நண்பர்களும் கூறினார்கள்.

***கேள்வி:*** *பிரான்ஸ், டென்மார்க் கூட்டங்கள் எவ்வாறு அமைந்தன என்று கூறுவீர்களா?*

**பதில்:** பிரான்ஸின் பாரிஸ் நகரில் 'இலங்கையின் எதிர்காலம்' எனும் தலைப்பில் "அசை- சமூக இயக்கத்திற்கான எழுத்தியக்கம்" ஏற்பாடு செய்த கூட்டத்தில் உரையாற்ற முடிந்தது. அதேபோன்று, டென்மார்க்கில் வயன் நகரில் தமிழிலக்கிய மன்றம் 'சமகால அரசியல்' எனும் தலைப்பிலான உரையும் கருத்தாடலும் இடம்பெற்றது. இக் கூட்டத்திற் பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர். அங்கு கேள்விகளும் கருத்துரைகளும் இடம்பெற்றன. மேற்படி அனைத்துக் கூட்டங்களிலும் கலந்துரையாடல்களிலும் சந்திப்புக்களிலும் கணிசமான அளவிற்குப் பெண்கள் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

***கேள்வி:*** *உங்களது இவ் அரசியல் பயணம் பயனுள்ளதாக அமைந்திருக்குமென நம்புகிறோம். நிறைவாக அது பற்றி உங்கள் கருத்து என்ன?*

**பதில்:** இன்றைய இலங்கையின் அரசியல் சூழலில் புலம்பெயர்ந்த



நாடுகளில் வாழும் தமிழர்களின் பங்கும் பணியும் முக்கியத்துவமுடையதாகும். அந்த வகையில் எனது பயணத்தின் போது பல்வேறு அனுபவங்களைப் பெற முடிந்தது. அவை எமது கட்சிக்கு முக்கியமானவையாகும். புலம்பெயர் வாழ்வின் பல்வேறு நெருக்கடிகள் சிக்கல்கள் மத்தியில் தமது சொந்த நாட்டின் மீதும் குறிப்பாக ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாகி நிற்கும் மக்கள் மீதும் உணர்வுபூர்வமான சமூக அக்கறையோடும் சமூக மாற்றம் வேண்டியும் சிந்திக்கும் தோழர்கள், நண்பர்கள், சமூக ஆர்வலர்கள் என்போரைச் சந்தித்து கொண்டதில் மன நிறைவு என்றே கூறவேண்டும். இதன் மூலம் நாம் இங்கு முன்னெடுக்கும் கொள்கைகளுக்கும் செயற்பாட்டிற்கும் பலம் சேர்க்க முடியும் என நம்புகின்றேன். இவ்வாறு புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் மாற்று அரசியலுக்கான கொள்கையும் செயற்பாடும் முன்னெடுக்கப்படும் என்ற நம்பிக்கையும் உண்டு.

# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன் 29

## தமிழ் மக்களைக் கைவிட்ட சத்தியாக்கிரக இயக்கம்

இலங்கையின அரசியலில் 1956ம் ஆண்டு ஏற்பட்ட போக்குக்கள் சில பண்டார நாயக்கவுக்கும் பிலிப் குணவர்த்தனவுக்கும் இடையே ஏற்பட்ட பிளவால் ஓரளவு பாதிக்கப்பட்டாலும் ஏகாதிபத்தியத்திற்கும் ஸ்ரீ.சு.க. அரசாங்கத்திற்குமிடையிலான முரண்பாடுகள் கொஞ்சம் வலுப்படுவதற்கு ஏதுவாகவே 1960களில் உலக நிலவரங்களும் உள்நாட்டில் வலுப்படுத்தப்பட்டிருந்த இடதுசாரி, தேசிய வாதப் போக்குக்களும் தொழிலாளர் வர்க்கத்தின் போர்க்குணத்தின் முனைப்பான வளர்ச்சியும் அமைந்திருந்தன. எனினும் இந்தச் சூழலைச் சரிவரப் பயன்படுத்தாத வாறு இடதுசாரித் தலைமைகளின் தவறான அணுகுமுறை அமைந்திருந்தது.

1960 முதல் 1965 வரையிலான காலகட்டம் பல வரலாற்று முக்கியத்துவமான நிகழ்வுகளைக் கொண்டிருந்தது. சிறிமா பண்டாரநாயக்கவின் தலைமையிலான அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் முற்று முழுதாக ஏகாதிபத்திய எதிர்ப்பு நோக்கில் எடுக்கப்பட்டவையல்ல. எனினும் சில நடவடிக்கைகளை எடுக்கும் படி அதைத் தூண்டியது ஏகாதிபத்தியமே தான்.

* பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு இன்னமும் இலங்கையின் செல்வாக்கு இருந்த காலமாகவே அக் காலம் இருந்தது. அமெரிக்காவின் செல்வாக்கை பிரித்தானியச் செல்வாக்கை இன்னமும் மேவாவிடினும் அமெரிக்காவின் ராணுவ, பொருளாதார வலிமையும் ஆசியாவில் தன்னை வலுவாக நிலை நிறுத்தும் தேவைக்கு இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் மறுக்க இயலாததாயிருந்தது. பிரித்தானியக் கடற்படைத் தளமும் விமானப் படைத்தளமும் 1957ல் அகற்றப்பட்ட பிறகு அமெரிக்கா திருகோணமலைத் துறைமுகத்தின் மீது கண் வைத்தது.

சோவியத் ஒன்றியத்துடனும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் சீனாவுடனும் ஏற்பட்ட அரசு மட்டத்திலான உறவு பண்டாரநாயக்க ஆட்சியின் போது வலுப்பட்டதை அமெரிக்கா வெறுத்தது. எனவே ஸ்ரீ.சு.க. அரசாங்கத்தை கம்யூனிஸ அனுதாப அரசாங்கமாகவும் சோஷலிஸ அரசாங்கமாகவும் பார்க்கிற போக்கு வலுவாக இருந்தது. யூ.என்.பி. யைத் தனது மேலாதிக்க நோக்கத்திற்கு உடன்பாடான கட்சியாக அமெரிக்கா நோக்கியதில் தவறில்லை. ஆனால் சில தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்கு அமெரிக்காவிடம் ஏற்பட்ட கவர்ச்சிக்கும் தமிழ் மக்களுடைய நலன்கட்கும் எவ்விதமான உறவு இருந்தது என்பது அத் தலைவர்களுக்குத் தான் தெரியும்.

* சிரிமா பண்டாரநாயக்கவின் தலைமையின் கீழ் அரசாங்கத்தின் பேரினவாத முனைப்பு வலுப்படுத்தப்பட்டது. எனினும் அதன் ஒவ்வொரு நடவடிக்கையையும் சிங்கள- தமிழ் முரண்பாட்டின் அடிப்படையிலேயே நோக்குவது தவறானது. 1960 ஆம் ஆண்டு முடிவளவில் அரசாங்க உதவி பெறும் இலவசக் கல்விப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்ற போது அப்பாடசாலை நிருவாகத்திற்கும் பாடசாலையை அரசாங்க உதவி பெறாத தனியார் பாடசாலையாக நடத்த உரிமை வழங்கப்பட்டது. எனினும், பாடசாலையில் கல்வி பயில்வோரிடம் கட்டணம் வசூலிக்க இயலாது என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. அதன்படி மதம் சார்பான பாடசாலைகள் விரும்பினால் தமது சமூகத்தினதும் நலன் விரும்பிகளினதும் நிதி ஆதரவுடன் பாடசாலைகளைத் தனியார் பாடசாலைகளாக நடத்தலாம். மத நிறுவனங்கள் பலவும் இதை விரும்பவில்லை. அதற்கான காரணங்களில் முக்கியமானது பாடசாலைக் கல்வியைப் பயன்படுத்தி மாணவர்களை மதம் மாற்றுவதல்ல. ஏனெனில் இலவசக் கல்வியின் வருகையோடும் அரசாங்கப் பாடசாலைகளின் பெருக்கத்தோடும் பாடசாலைக் கல்வியை அவ்வாறான நோங்கட்காகப் பயன்படுத்தும் வாய்ப்பு மிகவும் குறைந்து விட்டது.

* பாடசாலைகள், எவ்வாறாயினும் நேரடியாக மாணவர் மூலமும் மறைமுகமாகப் பெற்றோர் மூலமும் பிற சமூகச் செயற்பாடுகள் மூலமும் மதத்தின் பெயரால் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்த உயர் வர்க்கதினரின் சமூக வலிமையை பேண உதவின. கத்தோலிக்கத் திருச்சபை தனது கட்டுப்பாடுகட்குட்பட்ட மாதா கோயில் முதலாகப் பாடசாலை வரையிலான அமைப்புக்கள் மூலம் தனது பொதுவான இடதுசாரி விரோதப் போக்கையும் குறிப்பான மார்க்சிய விரோதத்தையும் வெளிப்படுத்தப் பயன்படுத்தியது. அதை விட ஒவ்வொரு பாடசாலை நிருவாகமும் பாடசாலை ஆசிரியர்களதும் மாணவர்களதும் சிந்தனையையும் செயற்பாட்டையும் சில எல்லைகளுக்குள் குறுக்குவதில் கவனம் காட்டியது. வடக்கில் இவற்றை விட வித்தியாசமானதொரு நோக்கம் செயற்பட்டது. பழமைவாதிகள் ஆதிக்கத்திலிருந்த பாடசாலைகளில் சாதி அடிப்படையில் மாணவர் அனுமதி முதலாக ஆசிரிய நியமனம் வரையில் பாகுபாடு காட்டப்பட்டது. இவற்றின் பின்னணியில் நோக்கும் போது யூ.என்.பியும் தமிழ் காங்கிரசும் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றதை எதிர்த்ததில் வியப்பில்லை. தமிழரசுக் கட்சிக்கு அவ்வேளை சைவ வேளாள மேட்டுக்குடிகளின் ஆதரவு கொஞ்சம் குறைவாகவே இருந்தாலும், புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ நிறுவனச் செல்வாக்கு, சற்று வலுவாக இருந்தது. புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ நிறுவனங்களின் நடைமுறை கத்தோலிக்கத் திருச்சபையைப் போல வெளிவெளியான இடதுசாரி எதிர்ப்பாக இருக்கவில்லை. அவர்கள் ஆளுங்கட்சியை பகைக்காமலே காரியமாற்றுவோராக இருந்தனர். எனவே பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றதற்கு மிகக் கடுமையான எதிர்ப்பு கத்தோலிக்கத் திருச்சபையினுடைய தாகவே இருந்தது.

* யூ.என்.பி போலன்றி அப்போது அரசாங்கத்துடன் ஓரளவு சுமுகமான உறவைப் பேணிய தமிழரசுக் கட்சிக்குப் பாடசாலைகளைப் பொறுப்பேற்பது பற்றிய தமிழ் மக்களின் கரிசனைகளை முன்வைத்துப் பேச வாய்ப்பு இருந்தது. எனினும் அந்த அணுகுமுறை கையாளப்படவில்லை. இடதுசாரிகள் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றதை ஊக்கத்துடன் ஆதரித்த நிலையில் தமிழரசுக் கட்சிக்குள் வலுப்பட்டு வந்த இடதுசாரி விரோதமும் தமிழரசுக் கட்சியின் விறைப்பான நிலைப்பாட்டுக்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

* எவ்வாறாயினும் அரசாங்கம் மிகவும் உறுதியாயும் அதே நேரம் தேவையான விட்டுக் கொடுப்புக்கள் சிலவற்றைச் செய்தும் -- முக்கியமாகப் பாடசாலைகளின் மதமொழி அடையாளங்களைத் தொடர்ந்தும் பேண அனுமதி போன்ற உத்தரவாதங்களை வழங்கிக்-- கத்தோலிக்கத் திருச்சபையின் எதிர்ப்பை முறியடித்தது. பெரிய கத்தோலிக்கப் பாடசாலைகள் பல தனியார் பாடசாலைகளாக இயங்க முடிவெடுத்தன. பிறவற்றுள், மிகச் சிலவே அவ்வாறான முடிவை எடுத்தன.

* ஸ்ரீ.ல.சு.க. அரசாங்கத்தை 'இடதுசாரி' அரசாங்கமென்று மேற்குலக நாடுகள் முத்திரை குத்த இந்த நடவடிக்கை காரணமாயிருந்தாலும் இந்த முற்போக்கான நடவடிக்கைக்கு கல்வி தொடர்பான (முக்கியமாகப் பாடசாலைகளில் ஒரு சீரான முறையில் கல்வி வழங்கும் தேவை போன்ற) காரணங்கள் இருந்தன. அதை விடச் சில மத நிறுவனங்களின் யூ.என்.பி. சார்பு நடவடிக்கைகளுக்கும் ஒரு பெரும் பங்கிருந்தது. எனவே சிங்கள பௌத்த சிந்தனைச் செல்வாக்குச் செலுத்தியளவுக்கு இடதுசாரிச் சிந்தனை அரசாங்கத்தின் நிலைப்பாட்டிற் பாதிப்பை ஏற்படுத்தியிருக்குமா என்பது ஐயத்திற்குரியது.

* சிரிமா பண்டாரநாயக்காவின் தலைமையின் கீழ்த் தான் அரசாங்கம் ஒரு பெரிய வெகுசன இயக்கத்திற்கு முகங் கொடுக்க வேண்டிய சூழ்நிலையும் உருவானது. சிங்களமே அரச கரும மொழியாக்கப்பட்டாலும், அதன் நடைமுறைப் படுத்தல் மந்த வேகத்திலேயே நடந்து வந்தது. நிருவாக இயந்திரம் ஆங்கிலத்திலேயே செயற்படப் பயிற்றப்பட்டிருந்தமையும் அதிகார வர்க்கத்திற் கணிசமான பகுதியினரது விருப்பு மொழி ஆங்கிலமாக இருந்தமையையும் முக்கியமான காரணங்கள் எனலாம். எனினும் ஆங்கிலத்தின் இடத்தைச் சிங்களம் பிடிப்பது என்பது தவிர்க்க இயலாத ஒன்றாகவே இருந்தது. 1960ல் அரசாங்கம் சிங்கள மொழிச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முற்பட்ட போது தமிழரசுக் கட்சி அதை கடுமையாக எதிர்த்தது. அரசாங்கத்துக்கும் தமிழரசுக் கட்சிகளுக்குமிடையிலான பேச்சு வார்த்தைகள் இழுபட்டன. உடனடியாக ஒரு உடன்பாடு எட்டப்படும் வாய்ப்பு இல்லாத நிலையில், அரசாங்கம் சிங்களத்தை நீதிமன்ற மொழியாக அறிவித்ததையடுத்துத், தமிழரசுக் கட்சி யாழ்ப்பாணத்தில் தனது சத்தியாக் கிரகப் போராட்டத்தைத் தொடங்கியது. சட்ட மறுப்புப் போராட்டம் தொடங்குவதாகவே தமிழரசுக் கட்சி முடிவெடுத்திருந்தது.

* அரசாங்கம் எவ்வளவு தூரம் சமரசத்திற்கு ஆயத்தமாய் இருந்தது என்பது ஒரு பிரச்சனை. ஆனால், பேச்சுவார்த்தைகள் முறிந்ததாக இரு தரப்புக்களும் அறிவிக்காத நிலையில் தமிழரசுக் கட்சி 1961 பெப்ரவரியில் ஒரு போராட்டத்தைத் தொடங்கியதன் மூலம் அதனுடைய நோக்கம் உடனடியான பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் அப்பாலானது என்ற எண்ணம் தெற்கில் வலுப்பெற்றது. அதைவிட முக்கியமாக சத்தியாக்கிரகப் போராட்டமானது எதுவிதமான திட்டமிடலும் இல்லாமலே தொடங்கப்பட்டது என்பதும் எவ்வகையன சட்ட மறுப்பு என்பது பற்றிய தெளிவான முடிவு இல்லாமலும் தொடங்கப்பட்டது என்பதும் தமிழ் மக்களின் தரப்பிலிருந்தும் பின்னர் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள். அவை இதுவரை மறுக்கப்படவுமில்லை, முறையாக விளக்கப்படவுமில்லை.

* திட்டமிடப்படாத முறையில் யாழ்ப்பாணக் கச்சேரி வாசலில் தமிழரசுக் கட்சியினர் நடத்திய அமைதியான மறியலில் பலர் கலந்து கொண்டதாகக் கூற இயலாது. எனினும் மக்களின் பெருமளவிலான பங்குபற்றல் இல்லாத இந்த மறியலைக் கலைக்கப் பொலிஸ்காரர்கள் நடத்திய தண்டாந்தடிப் பிரயோகம் நிலைமைகளைத் தலைகீழாக மாற்றியது.

* அந்தத் தாக்குதலின் பின்பு ஏராளமான மக்கள் பங்குபற்றியது மட்டுமன்றி, மேலும் பலர் தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். சில சமசமாஜக் கட்சிப் பிரமுகர்களும் நேரில் வந்து ஆதரவு தெரிவித்துச் சென்றனர். கம்யூனிஸ்ட் கட்சி போராட்டத்தின் நியாயத்தை ஏற்றாலும் போராட்ட முறையைப் பற்றிய கருத்து முரண்பாட்டைத் தெரிவித்தது. தமிழரசுக் கட்சி தனது நியாயத்தைத் தென்னிலங்கையில் உள்ள பேரினவாதிகளல்லாதவர்கட்கு விளக்கி அவர்களது ஆதரவைப் பெற எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. அவர்களது பார்வையில் பெருமளவிலான தமிழ்ப் பொதுசன ஆதரவு அதற்கான தேவையை ஏற்படுத்தவுமில்லை.

* சத்தியாக்கிரகப் போராட்டம் வடக்கிலும் கிழக்கிலும் முக்கியமான நகரங்களுக்கு விரிவடைந்தது. மக்களின் பங்குபற்றல் நாட்போக்கிற் சிறிதளவு குறைந்தாலும் பொதுமக்களுடைய ஆதரவு தொடர்ந்தும் இருந்து வந்தது. அரசாங்கத்தால் கச்சேரிகளில் (அரசாங்க முகவர் அலுவலகம்) அலுவல்களை நடத்த இயலாதபடி இந்த இழுபறி இரண்டு மாதங்களாகத் தொடர்ந்தது. இரண்டு தரப்பினராலும் எவ்வகையிலும் தமது இலக்கை நோக்கி முன்னேற இயலாத நிலையில் தமிழரசுக் கட்சிக்குள் ஒரு கட்சியாக இயங்கிய ஒரு குழு அதிரடி நடவடிக்கையாக ஒரு தமிழரசுத் தபாற் சேவையைத் தொடக்கியது. சத்தியாக்கிரகம் ஒரு திட்டமிடப்படாத நடவடிக்கை என்பது அடிப்படைத் தவறு என்றால் இந்த நடவடிக்கை எந்தவிதமான முன்யோசனையும் அற்ற ஒரு மூடச் செயல் எனலாம்.

* தமிழ் மக்களின் பேராதரவு பெற்ற ஒரு போராட்டத்தை அடக்குமுறை மூலம் முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம் தயங்கியது. ஆனால், தபாற் சேவை 'தொடக்கப்பட்டவுடன்' தமிழரசுக்கட்சியின் நோக்கம் பிரிவினை தான் என்று பிரச்சாரம் செய்வது அரசாங்கத்திற்கு எளிதாகிவிட்டது.

* அதன் அடிப்படையில் அவசரகார நிலை பிரகடனம் செய்யப்பட்டது. தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் பிற தலைவர்களும் உட்படச், சத்தியாக்கிரகத்தில் பங்கு கொண்ட நூற்றுக்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். அவர்களில், செல்வநாயகம் தனது வீட்டிலும் பிறர் பணாகொடையில் புதிதாகக் கட்டப்பட்ட இராணுவ முகாமிலும் தடுப்புக்காவலில் இருத்தப்பட்டனர்.

* பெரும் அமர்க்களமாகத் தொடங்கிய தபாற்சேவை முழுப் போராட்டமும் ஒரே நாளில் முடங்கிப் போக வழி செய்தது. தொடர்ந்தும் போராட்டத்தை எவ்வாறு முன்னெடுப்பது என்று தமிழரசுக்கட்சியிடம் திட்டமெதுவும் இல்லாத நிலையில் இரகசியமான துண்டுப் பிரசுர விநியோகம் போன்ற சில செயற்பாடுகள் தவிர்ந்து எதுவுமே நடக்கவில்லை. மக்களை அணிதிரட்ட எவராலும் முடியவில்லை.

* சத்தியாக்கிரகத்தின் தோல்வியில் இருந்து தமிழரசுக் கட்சி பாடம் எதையும் கற்கவில்லை. அதனால் அணிதிரட்டப்படாமலே திரண்ட மக்களின் உற்சாகத்தை எவ்வாறு ஒரு போராட்டச் சக்தியாக மாற்றலாம் என்ற சிந்தனை சத்தியாக்கிரகத்தின் சடுதியான முடிவின் பின்பு என்றுமே எழுந்ததாகத் தெரியவில்லை. அதுமட்டுமின்றி அரசாங்கத்துடன் பேச்சுக்கள் நடந்தபோது தமிழரின் மொழியுரிமை தொடர்பாக ஸ்ரீ.ல.சு. கட்சிக்குள் தமிழருக்கு ஆதரவாக குரல் கொடுத்த எஸ்.டி.பண்டாரநாயக்கா போன்றோரது நட்பைப் பேணிச் சிங்கள மக்களிடையே நேச சக்திகளை உருவாக்கும் எண்ணமும் தோன்றவில்லை.

* அவ்வாறே சத்தியாக்கிரகத்தின் தோல்வி ஏற்படுத்திய கசப்புணர்வை மாற்றுகிற விதமாக மீண்டும் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கித் தமிழரசுக் கட்சியுடன் நட்பைப் பேண இயலாவிட்டாலும் தமிழ் மக்களுடன் நல்லுறவுக்கான சைகைகளைக் காட்டும் நோக்கம் அரசாங்கத் தரப்பில் தென்படவில்லை.

* யூ.என்.பியையும் ஸ்ரீ.ல.சு. கட்சியையும் தமிழரின் எதிரிகளாகக் காட்டப் பழகிய தமிழரசுக் கட்சித் தலைமை வெளிப்படையாகவே யூ.என்.பிக்குச் சார்பாக திரும்பச் சத்தியாக் கிரகத்தின் தோல்வியும் ஒரு காரணமாயிற்று.

* சத்தியாக்கிரகத்தின் முடிவையடுத்து இன்னொரு சோதனை அரசாங்கத்தை எதிர்நோக்கியிருந்தது. அது இலங்கையின் பாராளுமன்ற சனநாயக முறைக்கு எதிரான முதலாவது ராணுவச் சவாலாகும்.

---

### புலம் பெயர்ந்த நாடுகளில் தோழர் செந்தில்

5ம் பக்க தொடர்ச்சி

தமிழ் மக்களினதும் அரசியல் நிலைமைகளை கேட்டறிந்தனர். மேலும் பாரிஸ் நகரில் பல அரசியல் கலந்துரையாடல்களைப் புலம் பெயர்ந்த தமிழர்களை ஏற்பாடு செய்திருந்தனர். அவற்றில் கலந்து கொண்ட தோழர் செந்திவேல் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலை தொடர்பாகவும் வடக்கு கிழக்கு மக்கள் எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகள் பற்றியும் எடுத்துரைத்தார். தமிழ் மக்கள் மத்தியில் மாற்று அரசியலின் தேவையையும் பழைமைவாதப் பிற்போக்கு தமிழ்த் தேசியத்தையும் தோழர் செந்தில் தனது உரைகளில் அம்பலப்படுத்தினார்.

அடுத்து டென்மார்க் வயன் நகரில் தமிழ் இலக்கிய மன்றம் ஏற்பாடு செய்த கூட்டத்தில் தோழர் செந்திவேல் உரையாற்றினார். தோழர் சண்முகதாசன் அரங்கில் இடம்பெற்ற கூட்டத்தில் சமகால அரசியல் என்னும் தலைப்பிலான உரையும் கருத்தாடலும் இடம்பெற்றன. கூட்டத்திற்கு தோழர் தருமன் தர்மகுலசிங்கம் தலைமை தாங்கினார். எம்.சி. லோகநாதன் உரையாற்றினார். அங்கு பெண்கள் உட்பட பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர். அக் கூட்டத்திற்கு மறுநாள் அரசியல் கலந்துரையாடல் சந்திப்புக்கள் இடம்பெற்றன.

புதிய- ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் 5வது அனைத்திலங்கை மாநாட்டிற்குப் பின் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா செந்திவேல் மேற்கொண்ட கனடா, பிரான்ஸ், டென்மார்க் ஆகிய நாடுகளுக்கான அரசியல் சுற்றுப் பயணம் கட்சியின் கொள்கை நிலைப்பாட்டையும் நடைமுறை வேலைகளையும் எடுத்துக் கூறி புலம் பெயர்ந்து வாழும் தோழர்கள் நண்பர்கள், பொது மக்கள் மத்தியில் நெருங்கிய நட்பும் உறவும் உருவாகுவதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# வெகுஜன வேலை முறைக்கும் கட்சியைக் கட்டியெழுப்பவும் வழிகாட்டியவர்

பொதுவுடமை இயக்கத்தின் புரட்சிகர முன்னோடிகளில் ஒருவரான கே.ஏ.சுப்பிரமணியத்தின் 21 வது நினைவு தினக் கூட்டங்கள் 28.11.2010 அன்று கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றன. கொழும்புக் கூட்டம் வெள்ளவத்தை தேசிய கலை இலக்கியப் பேரவையின் கைலாசபதி கேட்போர் கூடத்திலும், யாழ்ப்பாணக் கூட்டம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள கட்சிப் பணிமனை மண்டபத்திலும் நடைபெற்றன.

கொழும்புக் கூட்டத்திற்கு தோழர் பொ. கோபிநாத் தலைமை தாங்கி உரையாற்றும் போது 'இளந்தலைமுறையினரான நாம் பொதுவுடமைவாதிகளாக வாழ்ந்து புரட்சிகரப் பணியாற்றி மறைந்த முன்னோடிகளைப் பற்றி அறியவும், அவர்களது அனுபவங்களைப் படிக்கவும் இது போன்ற நினைவுதினக் கூட்டங்கள் மிக அவசியமானவை என்று குறிப்பிட்டார்.

இந் நினைவு தினக் கூட்டத்தில் பு. ஜ.மா. லெ. கட்சியின் சர்வதேச அமைப்பாளர் தோழர் இ. தம்பையா நினைவுரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் பற்றிக் கூறியன: தோழர் மணியம் தனது புரட்சிகர அரசியல் பணியாலும் வாழ்வாலும் பல்வேறு நிலைகளில் முன்னோடியாகத் திகழ்ந்தவர்; தான் வாழ்ந்த காலத்திற்குப் பின்பும் இலங்கையில் ஒரு உறுதியான மாக்சிச லெனினிசக் கட்சி நிலைத்து நீடித்து செயலாற்ற வேண்டும் என்ற தூர நோக்கில் செயல்பட்டவர்; அதன் வழியில் எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி அன்று தோற்றம் பெறுவதற்கு வழிகாட்டி முன்நின்றவர்.

அவர் தனது முழு நேர அரசியல் பணியை முன்னெடுத்துவந்த வேளையில் மூன்று முக்கிய விடயங்களில் முன்னுரிமை அக்கறை செலுத்தி வந்தார். 1- உறுதியான மாக்சிச லெனினிசக் கட்சியை அமைப்பு ரீதியாக கட்டியெழுப்பி முன்னெடுப்பது. 2- ஐக்கிய முன்னணிக் கொள்கையை முன்னெடுத்து பரந்து பட்ட சக்திகளை ஒன்றிணைப்பது. 3- வெகுஜனப் போராட்டங்களை அவற்றுக்குரிய தளங்களில் முன்னெடுத்தல். இவ்வாறு அவர் முக்கியத்துவம் கொடுத்து முன்னெடுத்த விடயங்கள் இன்றும் அவசியமானவைகளாகவே காணப்படுகின்றன.

## தோழர் மணியம் நினைவுத் தினக் கூட்டங்களில் நினைவுரைகள்

என்றும் கூறினார்.

மேலும் தனது நினைவுரையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்ட மூலம் அடிப்படையில் மக்களது ஜனநாயக உரிமைகளை மறுக்கும் ஒன்றாகவே காணப்படுகிறது. மாகாண சபைகளுக்கு கூறப்பட்ட அதிகாரங்களைப் பகிர்ந்து அளிக்க மறுத்து நிற்கும் அரசாங்கமானது கிராம நகர மட்டங்களில் அதிகாரப் பரவலாக்கத்திற்கு தயாரில்லாத நிலையில் ஏற்கனவே இருந்து வரும் ஜனநாயக நடைமுறைகளையும் இச்சட்ட மூலத்தின் மூலம் நிர்மூலமாக்கின்றது. அதிகாரத்தை மேன்மேலும் மத்தியில் குவித்துக் கொள்வதன் மூலம் பதினெட்டாவது திருத்தச் சட்டத்திற்கு வலுச் சேர்த்து நிற்கின்றது. இது பாசிச ஆட்சியின் உச்சத்தை நோக்கிச் செல்வதற்கான படிக்கட்டுகளாகவே காணப்படுகின்றன என்றும் கூறினார்.

கூட்ட முடிவில் சபையோர் கருத்துக்களும் வழங்கப்பட்டதுடன் இரத்தினபுரித் தோழர்கள் இருவரினது பாடலும் இடம்பெற்றது.

அதே நாளில் யாழ்ப்பாணத்தில் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் நினைவு தினக் கூட்டம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள கட்சிப் பணிமனை மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் கா. கதிர்காமநாதன் தலைமை தாங்கி உரையாற்றும் போது, தோழர் மணியத்துடனான தோழமை நிறைந்த உணர்வும் வேலை முறைகளில் அவர் காட்டிய வழிமுறைகளும் பெறுமதி மிக்கவை என நினைவு கூர்ந்து கொண்டார். இக்கூட்டத்தில் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் தோழர் சோ. தேவராஜா உரையாற்றும் போது தோழர் மணியத்தின் தலைமைத்துவ வழிகாட்டல் வெறுமனே நினைவுகூரத் தக்கது மட்டுமன்றி, இன்றும் நடைமுறையில் பின்பற்றப்பட வேண்டியதாகும் என்றார். பல்வேறு தளங்களின் ஊடாக மக்கள் மத்தியில் நமது அரசியல் வேலைகளை முன்னெடுப்பதையே வெகுஜன வேலை முறையென தோழர் மணியம் வற்புறுத்தி வந்தார் என்றும்; மக்கள் மத்தியில் பல்வேறு வகைப்பட்ட நாளாந்தப் பிரச்சினைகள் வளர்ந்தவாறே இருக்கின்றதால், அவற்றை அணுகிச் செயல்படுவதன் மூலமே நமது கட்சி தனது அரசியல் வேலைகளை முன்னெடுக்க முடியும் என்றும்; அதற்கான கொள்கையும் நம்பிக்கையும் உணர்வும் நமது தோழர்களிடம் மேலும் வலுவடைய வேண்டும் என்றும் கூறினார்.

மேலும் இக் கூட்டத்தில் தோழர்கள் தணிகாசலம், கா. பஞ்சலிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

# சமூக வழக்குகளில் ஏற்றத் தாழ்வுகள் 6

### சி. சிவசேகரம்

**மனிதர்** பிறப்பால் ஏற்றத் தாழ்வானோரென்றும் அந்த வேறுபாடு என்றென்றைக்குமானது என்றும் நம்பப்படும் ஒரு மரபிலிருந்து தமிழ்ச் சமூகம் விடுபடவில்லை. முஸ்லிம்கள் பெருமளவுக்கு அதற்கு விலக்காக இருந்தாலும், சாதி ஏற்றத் தாழ்வுகள் கிறிஸ்தவ கத்தோலிக்க வழிபாட்டிடங்களில் இன்னமும் காணப்படுவது உண்மை. எனினும், சாதி அடிப்படையிலே வழிபாட்டு முறையும் வழிபாட்டுக்கான இடமும் தீர்மானிக்கப்பட்ட இந்து மதங்களின்று பிரிக்க இயலாதவையாக சனாதனத் தருமமும் சாதியத் தீட்டு முறைகளும் இருந்து வருகின்றன. முதலாளிய உற்பத்தி முறையின் வருகையும் நவீன மயமாக்கலும் நகரங்களின் தோற்றமும் வளர்ச்சியும் அனைத்திலும் முக்கியமாகச் சாதியத்திற்கு எதிரான போராட்டங்களும் சாதியத்தைப் பலவீனப்படுத்தியிருந்தாலும், இன்னமும் கடவுளரும் கோவில்களும் வழிபாட்டு முறைகளும் சாதியாற் பிரிக்கப்பட்டே உள்ளன.

* நம் முன்னாலுள்ள பிரச்சினை எல்லாருக்கும் பொதுவான ஒரு கடவுளையும் அக் கடவுளுக்கான பொதுக் கோவில்களையும் பொதுவான

## கடவுளரும் வழிபாடும்

ஒரு வழிபாட்டு முறையையும் வகுப்பது என்று நினைப்போர் இருக்கலாம். ஆனாற் பிரச்சனை பொதுமையின்மை அல்ல, சமத்துவமின்மையே தான். எனவே இந்தச் சமத்துவமின்மையை விளக்கிக் கொள்ளாமல் அதன் விளைவுகளைக் கையாள இயலாது.

* சனாதன தருமத்தின் வழியில் வந்த வழிபாட்டு முறைகளாக பார்ப்பாணியத்தை வலியுறுத்தும் வழிபாட்டு முறைகள் உள்ளன. அவற்றின் பல்வேறு அம்சங்களான பூசை, அரிச்சனை ஆகியன தொட்டுத் திருவிழாக்களும், குடமுழுக்கும் உட்பட்ட அனைத்திலும் கடவுளர், பிரதேசம், சாதி என்பனவற்றின் அடிப்படையில் வேறுபாடுகள் உள்ளன. அதை விடக், காலத்தோடு ஒட்டிய மாற்றங்களும் நேர்ந்துள்ளன. எனினும், பார்ப்பனியத்தை ஏற்கும் எல்லா வழிபாட்டு முறைகளிலும் சமஸ்கிருதமும் பிராமணருமே தெய்வத்துக்கு நெருக்கமாக உள்ளமை முக்கியமானது.

* தமிழகத்தில் தமிழில் மந்திரங்களை ஓதவும் சடங்குகளை நடத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பார்ப்பனரல்லாத அர்ச்சகர்களைப் பயிற்றுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆயினும், பார்ப்பனரல்லாத அர்ச்சகர்களைக் கொண்டு தமிழகத்தின் பெரிய கோவில்களில் பூசை முதலாய கருமங்களை நடத்தும் சூழ்நிலை ஏற்பட நீண்டகாலம் எடுக்கும். ஏனெனில் தமிழரிடையே தமிழ்ப் பற்றை விடப் பெரிதாகச் சில அச்சங்கள் உள்ளன. தமிழை விடச் சமஸ்கிருதம் கோவில் வழிபாட்டுக்கு உகந்தது என்று கருத்தைதை விட, அவற்றின் மூலமொழிக்கு ஒரு மந்திர வலிமை உள்ளதாகப் பலர் எண்ணுகின்றனர். ஒழுக்க சீலனான ஒரு பார்ப்பானனல்லாத பூசகனை விட ஒழுக்கம் கெட்ட பார்ப்பனப் பூசகன் கூடப் பிறப்பால் தகுதியானவன் என்று பலர் எண்ணுகின்றனர். இவை மனிதரின் சிந்தனை மீது ஆதிக்கம் செலுத்துகின்ற மேலாதிக்கக் கோட்பாடுகளாக இன்னமும் நிலைத்து நிற்கின்றன.

* பல வழிகளிலும் தமிழகத்தை விட முற்போக்கான சமூகச் சிந்தனை காணப்பட்ட இலங்கையில் இன்னமும் பிராமணர் இல்லாத சமஸ்கிருதம் இல்லாத சைவக் கோவில்கள் பற்றி எண்ணவும் இயலவில்லை. இது ஏன்?

* அது மட்டுமல்லாது பார்ப்பனிய வழிபாட்டு முறையில்லாத பல கோவில்களும் பார்ப்பனிய முறைக்குள் கொண்டு வரப்படுகின்றன. இதை நாம் கிழக்கிலங்கையிற் காணுகின்றோம். அதை விட அவலமான முறையில், எந்தப் பார்ப்பனியம் தங்களைத் தீண்டத் தகாதோராகப் பல நூறு ஆண்டுகளாக ஒதுக்கியதோ அந்தப் பார்ப்பனியம் தங்களுடைய வழிபாட்டு முறையை வழிநடத்த வேண்டுகிறார்கள். சிறு தெய்வங்கள் என்று விலக்கி வைக்கப்பட்ட தங்கள் தெய்வங்கள் விலக்கி வைக்கப்பட்டவாறே இருக்க, பார்ப்பனியத்துடன் சமரசம் செய்கிற விதமாகப் பிள்ளையார் கோவில், காளி கோவில் என்று பார்ப்பன அங்கீகாரம் பெற்ற தெய்வங்களுக்கான கோவில்களை நிறுவி கும்பாபிஷேகங்களும் நடத்துமளவுக்குத் தாழ்த்தப்பட்டோர் போகின்றனர். அது விடுதலை நோக்கிய நகர்வல்ல. தமது சாதி அடையாளத்தைக் கொஞ்சம் மழுப்புகின்ற முயற்சி மட்டுமே.

* சாதியம் வலுவாக உள்ள கிராமிய, சிறு நகரச் சூழல்களில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் உயர் சாதியினர் எனப்படுவோரின் கோவில்களுக்குப் போகவரத் தடையில்லாத சூழ்நிலைகளிலும் பலவேறு கோவிற் சடங்கு சம்பிரதாயங்களில் அவர்கள் தாழ்வாகவே நடத்தப்படுவதைக் காணலாம். நகரச் சூழல்களில் பணத்துக்கு உள்ள முக்கியத்துவம், செல்வம் படைத்த ஒருவருக்குச் சாதியை மீறிய ஒரு மரியாதையைப் பெற்றுக் கொடுத்தாலும், அது முழுமையான, சமத்துவமான அங்கீகாரமாக இராது.

* மறுபுறம் தாழ்த்தப்பட்டோர் உருவாக்கும் பார்ப்பனிய முறையிலான கோவில்களில் அவர்களது சமூகங்கட்கு வெளியில் உள்ளோர் சென்று வழிபடுவது மிக அரிதாகவே இருக்கும். இவ்வாறு உயர் சாதியினரின் தெய்வங்களும் சாதிய அடையாளங்களை, கோயில் அமையும் இடஞ் சார்ந்து உள்வாங்கிக் கொள்ளுகின்றன.

* பிராமணரே பூசைச் சடங்குகளை நடத்தலாம் என்கின்ற விதி முற்றாக முறியடிக்கப்படாமல் வழிபாட்டில் சாதியச் சிந்தனையின் ஆதிக்கத்தைத் தகர்க்க இயலாது.

* பிரமாணரல்லாதார் பூசை, சடங்குகளை நடத்தாத கோவில்கள் குறிப்பாகக் கிழக்கிலங்கையில் இருந்தன, மலையகத்தில் இருந்தன. சாதி சார்ந்த காரணங்களாலேயே இவை ஏற்பட்டன. ஆயினும் இன்று பிராமணர்கள் பூசை நடத்துகிற கோவில்களாகச் சில மாற்றப்பட்டுள்ளன. புதிதாகவும் பிராமணக் கோயில்கள் உருவாகின்றன.

* 'உயர் சாதியினருக்குச்' சேவை வழங்குகிற ஒரு சமூகத்தின் உறுப்பினர்கட்கும் அதே சேவையைத் தாழ்த்தப்பட்டோருக்கு வழங்குகிற அதே சமூகத்தின் இன்னொரு பகுதியினருக்குமிடையே சாதி ஏற்றத் தாழ்வு உருவானதை நாமறிவோம். அவ்வாறே வேறான சாதி அடையாளம் கொண்ட கோயில்களில் பணியாற்றும் பிராமணருக்கிடையிலும் ஒரு ஏற்றத் தாழ்வு ஏற்படுவது தவிர்க்க இயலாததாகிவிடும்.

* தம்மை விடத் தாழ்ந்தோரெனக் கருதப்பட்டவர்கட்கான பூசை, அரிச்சனை, அபிஷேகம் போன்றவற்றை நடத்துகிற பிராமணர்கள் பூசை, அரிச்சினை, அபிஷேகங்களை நடத்தச் சாதியால் உயர்ந்தோராகத் தம்மை நினைப்போர் சம்மதிப்பார்களா?

* அவ்வாறு பார்ப்பனரல்லாத அனைத்துச் சாதியினருக்கும் பொதுவான கோவில்களும் பொதுவான சமய நடைமுறைகளும் உருவானாலும் கூட, பிராமணர் அல்லாதோர் என்ற வேறுபாடு கோவிலுக்குள் ஒரு தீண்டாமை நடைமுறையாகத் தொடரும். அதை நிறுத்தாவரை சாதியத்தின் ஆணிவேர், கோவிற் கருவறையில் வலுவாக ஆழ்ந்து நிற்கும்.

* மனிதரிடையே தூய இனங்கள் இல்லை. தூய சாதிகள் இல்லை, இனக் கலப்பு மிகுந்த ஒரு உலகில் சாதித் தூய்மை என்பது பொருளற்றது. இது பெரும்பாலனவர்கட்கு விளங்கக் கூடிய, ஓரளவுக்கு விளங்குகின்ற உண்மை. ஆனாலும் பிராமணிய (இந்து) மதங்கள் பல நூற்றாண்டுகளாக நமது சிந்தனை மீது செலுத்தி வந்துள்ள ஆதிக்கத்தை முறியடிப்பது எளிதல்ல.

* இறை நம்பிக்கை என்ற பொதுவான ஒரு ஏற்பிற்கும் மேலாக அந்த இறையை மகிழ்விப்பதற்கென்று விதிக்கப்பட்ட ஒழுங்கு முறைகள் நம்மை இறுகப் பிணைத்திருக்கின்றன. அவை தமது வேறுபட்ட வடிவங்களில் நம்மைப் பிரித்தாளுகின்றன.

* இந்து மதம் என்று சொல்லப்படும் பல்வேறு மதங்களை நவீனப்படுத்தும் முயற்சிகளின் தோல்விக்கும் காரணம் வர்ணாசிரமச் சிந்தனை தென்னாசியச் சமூகங்களில் இன்னமும் எவ்வாறோ செலுத்தி வரும் ஆதிக்கம் தான்.

* தாழ்த்தப்பட்டோர் ஒரு காலத்தில் மதம் மாறித் தம்மைச் சாதி ஒடுக்குமுறையின்று விடுவித்துக் கொள்ள முயன்றனர். சமூகத் தாழ்நிலையிலிருந்து விடுபடக் கல்வி, தொழில் போன்றவை ஒரு பகுதியினருக்கு உதவிய போதும், சாதி அடையாளத்தை நீக்க அது உதவவில்லை. இப்போது உயர் சாதியினரெனப் படுவோரின் மதத்திற்குள் தம்மை உள்ளிழுக்கச் செய்கின்ற முயற்சிகள் அதிகம் உதவப் போவதில்லை. ஒரு சிலரால் தமது செல்வத்தினதும் பதவிகளினதும் உதவியுடன் தமது சாதி அடையாளத்தை மறைக்கவும் மாற்றவும் வழி ஏற்படலாம். ஆனால் முழுச் சமூகமாக இந்த ஏற்றத் தாழ்வை ஒழிப்பதற்கு இந்து மதம் எனப்படுவதன் ஆதாரமாக நிற்கும் பார்ப்பனிய வர்ணாசிரமச் சிந்தனை முறை அனுமதிக்கப் போவதில்லை.

* தமிழகத்தில் சைவ பக்தி இயக்கம் உருவாக்கிய ஐக்கிய முன்னணி சாதி அமைப்பைத் தகர்க்கும் எண்ணம் இல்லாத ஒன்றாகவே இருந்தது. நந்தன் தில்லை சென்று உயிரோடு மீண்டிருந்தாலும் சாதியமும் சாதி முறையும் அப்படியேதான் இருந்திருக்கும். நந்தன் ஒரு நாயனாராயிராவிடின் ஒரு சிறு தெய்வமாகி இருக்க இயலுமேயே ஒழியச் சாதி சார்ந்த உயர்வும் இழிவும் நீங்குவதற்கு நந்தனின் 'மதமாற்றம்' உதவவில்லை.

* வைணவ பக்தி இயக்கம் சாதி முறையைப் பலவீனப்படுத்த எடுத்த முயற்சி பற்றி அறிவோம். தாழ்த்தப்பட்டோரை நீராட்டிப் பூணூல் அணிவித்துப் பார்ப்பானர்களாக அறிவித்த ராமானுஜர், அவர்கள் தாழ்நிலைப் பிராமணர்களாகவே என்றுங் கருதப்படுவார்கள் என்று எதிர்பார்த்திருக்க மாட்டார்.

* பார்ப்பனியத்தையும் சாதி முறையையும் நிராகரித்துக் கன்னட பக்தி இயக்கத்தின் மூலம் உருவான வீர சைவம், வீர சைவர்களை ஒரு தனிச் சமூகமாகவும் இன்று ஒரு சாதியை ஒத்த அடையாளமுடையோராகவும் மாற்றியதே ஒழியச் சாதி முறைய ஒழிக்கத் தவறிவிட்டது.

* எனவே இந்து மதங்களின் எல்லைக்குட்பட்டுச் சமூகத்திலும் சமூகத்தில் வழிபடப்படும் கடவுளரதும் கடவுளரது வழிபாட்டிலும் ஆழப் பதிந்துள்ள சாதிய அடையாளங்களை நீக்குவது கடினம்.

* சமூகத் தனத்தில் சமத்துவத்துக்கான போராட்டங்கள் மூலம் சாதிய ஏற்றத் தாழ்வுகள் முறியடிக்கப்படாமலும் சிந்தனைத் தளத்தில் பார்ப்பனியத்திற்கும் இந்துத்துவப் பிற்போக்குச் சிந்தனைகட்கும் எதிரான தொடர்ச்சியான போராட்டங்கள் இல்லாமலும் மனிதருக்கும் சாதியத்தினின்று விடுதலை இல்லை; அவர்கள் வணங்கும் தெய்வங்கட்கும் சாதியத்தினின்று விடுதலை இல்லை.

# பாடசாலைக்குச் சொந்தமான இடத்தில் அத்துமீறிய தனிநபரின் விவசாயம்!


நுவரெலியா வலப்பனை கல்வி வலயத்திற்குட்பட்ட ஹைபொரஸ்ட் இல–3இன் தமிழ் வித்தியாலயம் 1972- ஆண்டு அரசுடமையாக்கப்பட்டது. அதன் போது அப் பாடசாலையை சூழவுள்ள சுமார் 2.5 ஏக்கர் நிலப்பரப்பு அன்றைய தோட்ட நிர்வாகிகளால் பாடசாலைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந் நிலையில் 1983ம் ஆண்டு தொடக்கம் பிரதேசத்தில் வசிக்கும் பண பலமும் ஆளும் அரசியல் செல்வாக்கும் மிக்க ஒருவரினால் பாடசாலைக்குச் சொந்தமான மேற்படி 2.5 ஏக்கர் காணியில் அத்துமீறி விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. கடந்த பல ஆண்டுகளாக மேற்படி நபரிடமிருந்து காணியை மீட்டெடுக்கப் பாடசாலை நிர்வாகம் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வந்ததோடு, பிரதேச மக்களும் அவ்வப்போது பல்வேறு விதப் போராட்டங்களிலும் ஈடுபட்டு வந்துள்ளனர். எனினும் மலையகத்தின் பிரபல தொழிற்சங்கத்திற்கு மிக நெருக்கமானவராகவும் பணபலம் படைத்தவராகவும் அந் நபர் விளங்குவதால் அவரிடமிருந்து காணியை மீட்டெடுப்பது மிகப் பெரிய சவாலாகவே இருந்து வந்துள்ளது. அதே போல் அவர் சார்ந்து நின்ற தொழிற்சங்கம் எப்போதும் அவருக்கு உறுதுணையாகவும் பாதுகாப்பு அரணகாவும் இருந்து வந்துள்ளது.

எனவே மேற்படி பாடசாலை காணியில் அத்து மீறி விவசாயம் செய்து வந்த நபர் மிகப் பெரிய அளவில் விவசாயத்தில் ஈடுபட்டு வருவதோடு வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் நோக்கில் சூழலுக்கு பொருத்தமற்ற அதிக நஞ்சுத்தன்மை வாய்ந்த மருந்து

## நிலத்தை மீட்க மக்கள் போராட்டம்!

வகைகளையும் உரவகைகளையும் பாவித்து வந்துள்ளார். இதனால் அப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் பல்வே அசவுகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்துள்ளதோடு பல்வேறு நோய்த் தொற்றுக்களுக்கும் ஆளாகியுள்ளனர். இது தொடர்பாகப் பாடசாலை நிர்வாகமும் பெற்றோரும் கல்விக் காரியாலயம், கல்வி அமைச்சு, விவசாயத் திணைக்களம், விவசாய அமைச்சு, மாகாண அமைச்சு, பிரதேச செயலாளர் என்போருடன் இவ் விடயம் தொடர்பாக கடிதங்கள் பல பரிமாறியுள்ளனரே தவிரக், காணியை அவரிடமிருந்து மீளப் பெற்றுக் கொடுப்பதற்குரிய ஆக்கமான எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இந் நிலையில் கடந்த 2010-11-23ம் திகதி மேற்படி நபர் தான் செய்து வந்த மரக்கறி (கரட்) பயிருக்கு தெளித்த மிக நச்சுத்தன்மை வாய்ந்த மருந்து காற்றுடன் கலந்ததனால், அவ் வேளை அப்பாடசாலையில் ஆண்டிறுதிப் பரீட்சை எழுதிக் கொண்டிருந்த மாணவர்கள் திடீரென வாந்தி பேதியுடன் மூச்சுத் திணறலுக்கும் உள்ளான நிலையில் அப் பாடசாலையைச் சேர்ந்த சுமார் 89 மாணவர்கள் நுவரெலியா வைத்தியசாலையில்



அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. இவ் அசம்பாவிதத்தை தொடர்ந்து பிரதேசம் முழுவதும் பதற்றத்திற்குள்ளானதோடு, அந் நபரிடமிருந்து பாடசாலைக் காணியை மீட்டெடுப்பதற்கான போராட்டங்கள் மீண்டும் சூடு பிடித்துள்ளன. 23ம் திகதிச் சம்பவத்திற்கு பிறகு தொடர்ச்சியாக மூன்று நாட்கள் பிரதேச மக்கள் வேலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர். இச் சம்பவத்தை தொடர்ந்து இவ் விடயம் தொடர்பாக ஊடகங்களிற் செய்திகள் வெளிவந்ததோடு மீண்டும் பல தரப்பினர்க்கும் இவ் விடயம் தொடர்பில் முறைப்பாடுகள் போயுள்ளன. இதைத் தொடர்ந்து மத்திய மாகாண முதலமைச்சரின் பணிப்பின் பெயரில் நுவரெலியாக மாவட்டச் செயலாளர் சம்பவ இடத்துக்கு விஜயம் செய்ததோடு மேற்படி காணியை மீளப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் பொதுமக்கள் முன்னிலையில் உறுதியளித்துச் சென்றார். தொடர்ந்து மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பலரும் சம்பவ இடத்திற்கு வந்து சென்றதோடு, காணியை மீளப் பெற நடவடிக்கை எடுப்பதாகவே கூறி சென்றுள்ளனர். ஆனால் இவ் வாக்குறுதிகள் அனைத்தும் கடந்த காலங்களைப் போன்று காற்றில் கரைந்து விடுமோ என மக்கள் அங்கலாய்பதையே பெரிதும் கேட்க முடிகிறது.

நிலைமை இவ்வாறிருக்க, 22ம் திகதிச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு எவ்வித நிவாரணமும் இதுவரை பெற்றுக் கொடுக்கப்படவில்லை. அத்தோடு இச் சம்பவம் தொடர்பாக இராகலை பொலிஸ் நிலையத்தில் 50ற்கும் மேற்பட்ட பெற்றோரும் பாடசாலை நிர்வாகமும் தனித் தனியாக முறைப்பாடுகளை செய்திருந்த போதும், இதுவரை சட்டரீதியான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாத இராகலைப் பொலிசார் இவ்விடயத்தில் மிகவும் பக்கச் சார்பாக நடந்து கொள்வதாகப் பொதுமக்கள் விசனப்படுகிறார்கள். இது தொடர்பில், நுவரெலியா பொலிஸ் அத்தியட்சகருக்கு நேரடியாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ள. எனினும் நுவரெலிய மாவட்ட பிரபல அரசியல்வாதியொருவரினதும் இராகலை பொலிசாரினதும் அனுசரணையோடு மேற்படி நபர் சட்ட நடவடிக்கைகளுக்கு முகம் கொடுப்பதை தவிர்த்து வருகிறார்.

இவ் அநீதிக்கு எதிராக மக்கள் மேன்மேலும் ஐக்கியப்பட்டுப் போராடுவதே மக்களுக்கான பாடசாலைக் காணியை மீட்டெடுக்க உள்ள ஒரே வழியாகும்.

## பிரதேச சபை உறுப்பினர் தோழர் ச. பன்னீர்செல்வம் கண்டனம்

மேற்படி நுவரெலியா ஹைபொரஸ்ட் இல. 03 தமிழ் வித்தியாலயத்திற்கு சொந்தமான காணியை அபகரித்துள்ள தனிநபரிடமிருந்து மீட்டுத் தருமாறு கோரி அவசர கடிதமொன்று ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இக் கடிதத்தில் வலப்பனை பிரதேச சபைத் தலைவர் உட்படப் பலர் ஒப்பமிட்டுள்ளதாக அப் பிரதேச சபை உறுப்பினரும், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மலையகப் பிரதேசச் செயலாளருமான தோழர் ச. பன்னீர்செல்வம் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இது பற்றிப் பன்னீர்செல்வம் கருத்துத் தெரிவிக்கையில் ஏழைத் தோட்டத் தொழிலாளர் பிள்ளைகளின் நலன் கருதி பாடசாலைக்கு வழங்கப்பட்ட நிலத்தை மீட்பதற்கு காணி அமைச்சு ஏன் முன்வரவில்லை என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். மேற்படி தனிநபரினால் நிலம் அபகரிக்கப்பட்டுள்ளதுடன் மாணவர்களின் உடல் நலமும் கேடாகியுள்ளதால் அவர் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

## சபரகமுவ மாகாண தமிழ் மொழிக் கல்வி நிர்வாகத்தின் நிலை தொடர்பில் மக்கள் விசனம்

சபரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் மலையக தமிழர்கள் அதிகளவில் வாழ்கின்றனர். தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களிலேயே இவர்களின் வாழ்வாதாரம் தங்கியுள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் பெற்றோர்களும் தங்களது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் மிகுந்த அக்கறைக் காட்டிவருகின்றமையை காணமுடிகின்றது. நூற்றி ஐம்பதிற்கு மேற்பட்ட பாடசாலைகள் பல்வேறு வகுப்பு மட்டங்களைக் கொண்டு இங்கு காணப்படுகின்றன. இந்நிலையில் இம்மாகாணத்தின் கல்வி மோசமான பாதிப்பிற்கும் சீரான வீழ்ச்சிக்கும் உள்ளாகி வருகின்றமை வேதனைக்குறிய விடயமாகும்.

கடந்த காலத்தில் இம்மாகாணத்தில் பிரதி கல்விப்பணிப்பாளர், உதவி கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகள் மாகாண மட்டத்திலும், வலயம் தோறும் பிரதிக் கல்விப்பணிப்பாளர் பதவிகள் தமிழ் மொழிக்காக ஏற்படுத்தப்பட்டன. அப்பதவியில் அமர்ந்த “மகான்”களின் புண்ணியத்தினால் கல்வித்துறை சீர்கெட்டதுடன், அவர்கள் தத்தமது பைகளை நிரப்பிக் கொண்டனர் என்பது ஊர் அறிந்த உண்மை. 2007 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட 3127 ஆசிரியர் நியமனத்தில் சபரகமுவ மாகாணத்தில் வழங்கப்பட்டபோது இந்நியமனத்தினை அரசியல் தலையீடு இன்றி மேற்கொள்வதற்கு சிவில் அமைப்புகள் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்து போதும் பலன் கிடைக்கவில்லை.

அண்மையில் நியமனங்களில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மோசடிகள் தொடர்பில் அப்போதைய மாகாண கல்வி பணிப்பாளரும் அவருக்கு பின் அப்பதவிக்கு வந்த பணிப்பாளரும் இரு வலய பிரதி கல்வி பணிப்பாளர்களும் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். முறைகேடான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தமை தொடர்பில் பிரதேச மக்களுக்கு பூரண உடன்பாடுண்டு. எனினும் தமிழ் மொழி பாடசாலைகளின் கல்விசெயற்பாடுகளுக்காக ஏற்படுத்தப்பட்ட தமிழ் மொழி நிர்வாக பிரிவுகள் ஆளனி பற்றாக்குறையினால் ஸ்தம்பிதமாகியுள்மை வருந்ததக்க விடயமாகும்.

எனவே சபரகமுவ மாகாணத்தின் தமிழ் கல்வி நிர்வாக பிரிவு செயற்பட வெற்றிடமாகியுள்ள பதவிகளுக்கு வழமைப்போல் அரசியல் செல்வாக்கினை தகைமையாக கொண்டு மாணவர்களினதும் ஒட்டுமொத்த சமூகத்தினதும் எதிர்காலத்தை பாழடைய செய்யாது பாரபட்சங்கள் அற்ற வகையில் கல்வி தகைமை, அனுபவம் என்பனவற்றை அடிப்படையாக கொண்டு தகுதியான நியமனங்களை வழங்க வேண்டும் என பிரதேச மக்கள் எதிர்பார்க்கின்றனர்.


**கேகாலை நிருபர்**

## கஹவத்தை பிரதேச தோட்டங்களில் செவ்வொழி நாடக குழுவினர் நடத்திய “இணைந்திடுவோம் இமை திறந்திடுவோம்” நாடகம்

மக்கள் சார்ந்த பிரச்சினைகளை மையப்படுத்தி வீதி நாடகங்களை தோட்டப்புரங்களில் நடத்திவிரும் செவ்வொழி நாடக குழுவினர் **“இணைந்திடுவோம் இமை திறந் திடுவோம்”** எனும் தலைப்பிலான நாடகத்தை எந்தானை தோட்டம் மடலகம பிரிவு மற்றும் சமரகந்த பிரிவு ஆகிய இடங்களில் நிகழ்த்தினர். மலையகம் வளர்ந்து விட்டது என்ற மாயையில் சிக்கி தவிக்கும் தற்காலத்தில் மலையகத்தின் மறுபக்கத்தினை படம்பிடித்துக் காட்டுவதாகவும் கலை, கலாச்சார, கல்வி, பண்பாட்டு, தொழிற்சங்க மற்றும் அரசியல் சீரழிவுகளில் இருந்து மீட்சிப்பெற மாற்று அரசியலை தெரிவு செய்யவும் அதில் இளைஞர்களுக்கான பாத்திரத்தை வழியுறுத்துவதாக இதன் கருப்பொருள் அமைந்திருந்தது.

பெரும் எண்ணிக்கையான மக்கள் கண்டுகழித்த இந்நாடகமானது அவர்களையும் உணர்வு பூர்வமாக ஒன்றிக்க வைத்தமை முக்கிய அம்சமாகும். பா.மகேந்திரனில் நெறியாள் கையில் உருவான இந்நாடகம் தொடர்ச்சியாக தோட்டப்புரங்களில் இடம்பெற இருப்பதாகவும் இந்நாடகம் உங்கள் ஊரில் இடம்பெற வேண்டுமாயின் கஹவத்தை தமிழ் பாடசாலை வீதியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கிய பேரவை சபரகமுவ கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு நாடக குழு ஒருங்கிணைப்பாளர் கு. ஹரிபிரசாத் கேட்டுக் கொள்கிறார். தொடர்புகளுக்கு ‘ரிபிரசாத் 071-2122637.





## வரவுசெலவுத் திட்டம்- ஒரு கண்ணோட்டம்

-சிறீ

30 ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்ததால் பாதுகாப்புச் செலவு குறைவடைந்து மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய ஒரு வரவு- செலவுத் திட்டம் அமையும் என அரசாங்க ஆதரவு கொண்டோர் சிலர் எதிர்பார்ப்புடன் இருந்தனர். ஆனால் வழமை போலவே உள்நாட்டுத் தனவந்தர்கள், அன்னிய முதலீட்டாளர்கள் என்போரைக் கவரும் வரவுசெலவுத் திட்டமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களை வாட்டி வதைக்கும் ஒரு வரவுசெலவுத் திட்டமே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் 209 பில்லியன் பாதுகா

அரசாங்கத்தின் மொத்த வருமானமே ரூபா 986.1 பில்லியனாகவும் (billion), மொத்தச் செலவு ரூபா 1419.9 பில்லியனாகவும் காட்டப்பட்ட இவ் வரவு செலவுத் திட்டத்தில் ரூபா. 434 பில்லியன் துண்டு விழும் தொகையாகவுள்ளது. இதனை ஈடு செய்யும் வகையில் பல்வேறு மறைமுக வரிகளை மக்கள் மீது சுமத்தி அந்நிய உள்நாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதென்ற போர்வையில் சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக வங்கியினதும் நிதிவழங்கும் ஏனைய மேலை நாடுக ளின் ஆலோசனை அழுத்தங்களுக்கு பணிந்துள்ளமை வெளிப்படையானதாகும். மக்களிடம் இருந்து எவ்வாறு பணத்தை உறிஞ்சலாம் என்பதே அவ் ஆலோசனைகளாகும்.

இன்று இலங்கையின் தலா வருமானம் 2375 அமெரிக்க டொலர்களாகவுள்ளது. இது 2016ம் ஆண்டளவில் 4000 அமெரிக்க டொலராக உயர்த்தப்படுமெனக் கூறப்பட்டுள்ளது.

நாட்டின் மொத்த வருமானத்தை மக்கள் தொகை எண்ணிக்கையால் பிரிக்கும் போது வரும் பெறுமானமே தலா வருமானம் எனப்படுகிறது. உதாரணத்திற்கு ஒருவருடைய வருமானம் ரூ 10,000/- என்றால் ஒன்பது பேருடைய வருமானம் 90,000/- ரூபா என்பதாகும். இது மட்டுமல்ல. நமது நாட்டில் கிட்டத்தட்ட அரைவாசிப்பேர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றரெனப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. தினமொன்றிற்கு ஒரு அமெரிக்க டொலர்களை - இப்போது அமெரிக்க டொலரின் பெறுமதி வீழ்ச்சியால்- ஒன்றேகால் டொலரை பெறுபவரே வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதாகக் கூறப்படுகிறது. வரவு செலவுத் திட்டத்தின் போது கிராமிய வறுமை நிலை 7.6 சதவீதமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தனியார்துறை முதலீட்டையும் அந்நிய முதலீட்டையும் ஊக்குவிக்கும் நடவடிக்கையை அரசு மேற்கொண்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனியார்-அந்நிய முதலீடுகள் 19-21 சதவீத மாகவுள்ளது. இதை அடுத்துவரும் ஆறு வருடங்களில் 26-28 சதவீதமாக உயர்த்துவதற்கு நடவடி க்கை மேற்கொள்ளப்படுகிறது. வங்கிகளுக்கும், நிதி நிறுவனங்களுக்கும் சேர்க்கப்பட்ட பெறுமதி வரி 20 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் மீதான வருமான வரி 35 சதவீதத்திலிருந்து 28 சதவீதமாக குறைக்கப்படவுள்ளது. கட்டுமானத் துறையினரின் வரு மானவரி 15 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகக் குறைக்கப்படவுள்ளது. எல்லா ஏற்றுமதிக் கம்பனிகள் மீதான வருமான வரி 25 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகக் குறைக்கப்படவுள்ளது.

திறந்த பொருளாதாரத்தை மேலும் அகலத் திறந்துவிடும் நடவடிக்கைகள் முன்மொழியப்பட்டுள்ளன. நாம் யாருக்கும் அடிபணியமாட்டோம் என்று வாய்ச் சவடால் விட்டாலும் நடை முறையில் நாட்டை உலகப் பொருளாதாரம் எனப்படும் அமெரிக்க மேற்குலகப் பொருளாதாரத் துடன் மேலும் இறுகப் பிணைக்கும் நடவடிக்கையே மேற்கொள்ளப்படுகிறது. இதுதான் மகிந்த சிந்தனையின் ஏகாதிபத்திய எதிர்ப்பின் லட்சணமாகும். பின்வரும் நடவடிக்கைகளை நாம் உற்று நோக்கினால் அவற்றின் உட்கிடக்கைகள் விளங்கும்.

இலங்கையர் வெளிநாடுகளில் முதலிடுவதையும், உள்நாட்டில் செயற்படும் கம்பனிகள் வெளிநாட் டுக் கடன் பெறுவதையும், வெளிநாட்டார் எமது நாட்டில் முதலிடுவதையும் ஊக்குவிக்கு முகமாக அந்நிய செலாவணிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவுள்ளன.

உல்லாசப் பயணத்துறையினர் இரத்தினக் கல் ஆபரணத் தொழிலில் ஈடுபடுவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளை வைத்திருப்பதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காக அந்நிய செலாவணிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி முதலீட்டாளர்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புவதன் மூலமும் நீண்ட காலத்தில் அந்நியச் செலவாணி ஒதுக்கங்களை உறுதிப்படுத்துவதற்கு உதவுவதன் மூலமும் சினேகபூர்வமான இரு பக்க, பல பக்க உறவுகளை உருவாக்குவதன் மூலமும் நாட்டின் பொருளாதாரத்தை உலகப் பொருளாதாரத்துடன் இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. மேற்கூறிய நடவடிக்கைகள் நமது நாட்டை மேற்குலகப் பொருளாதாரத்துடன் பின்னிப் பிணைய வைக்கவுள்ளன. இன்று தேங்காய் ஒன்றின் விலை ரூபா 45/- ஆகவுள்ளது. தெங்குச் செய்கை மட்டுமன்றி விவசாயத் துறையும் கவனிப்பாரற்று விடப்பட்டுள்ளது.

தேங்காய் விலை அதிகரிப்புக்கு முக்கிய காரணம் வடகிழக்கு யுத்தத்தின் போது லட்சக் கணக்கான தென்னை மரங்கள் நாசமாக்கப்பட்டமையே. வடக்கின் வசந்தம்- கிழக்கின் உதயம் எதுவுமே தெங்குச் செய்கைக்கு உத்வேகம் அளிக்கவி ல்லை. விவசாயிகளுக்கு மானியம் வழங்கவோ அல்லது அவர்களுக்கு இலகு கடன் திட்டமோ இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இடம்பெறவில்லை.

வீண்விரயங்களால் நட்டத்தில் இயங்கும் ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ், மிஹின் எயர் விமானச் சேவைகளுக்கு பத்து வருடங்கட்குச் சகல வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

அரச துறையில் 13 லட்சம் பேர் வேலை செய்கின்றனர். இவர்கள் மாதமொன்றிற்கு 9000/- ரூபா சம்பள அதிகரிப்பைக் கோரினர். எனினும் 5 சதவீதப் படியையும் 600/- ரூபா வாழ்க்கைச் செலவுப் படியையுமே அரசு வழங்க முன்வந்துள்ளது. இதன் மூலம் அரச ஊழியர் மாதமொன்றிற்கு ரூபா 1300/- அளவில் மட்டுமே பெறக் கூடியதாய் இருக்கும்.

2010 இன் முதற் காலாண்டில் நாட்டில் 81 லட்சம் ஊழியர் படை உள்ள நிலையில், அதிற் கிட்டத்தட்ட 30 லட்சம் பேர் வெளிநாடுகளில் வேலை செய்கின்றனர். சுமார் 38 லட்சம் பேர்- அதாவது ஊழியர் படையின் அரைவாசிப் பேர் தனியார் துறையிலும், சுயதொழிலிலும், வேலைய ற்றும் உள்ளனர். அவர்களுக்கு எந்தவித நிவாரணமும் வழங்கப்படவில்லை.

வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளர் 30 இலட்சம் பேர். நாட்டிற்கு வருடம் ஒன்றிற்கு 400 கோடி டொலர்களைக் கொண்டு வருகிறார்கள். இந்த அந்நியச் செலவாணியை அரசாங்கமே பயன்படுத்துகிறது. இதில் ஒரு பகுதியை தனது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் நோக் கில் வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான ஓய்வூதிய நிதியமொன்றை அரசு அமைக்கவுள்ளது. வருடமொன்றிற்கு ரூ.12000/- வீதம், குறைந்தது இரண்டு வருடங்களுக்கு இந் நிதியத்தில் பணத்தினை வைப்பிலிட்டால், ஆண்கள் 65 வயதுக்குப் பின்னரும், பெண்கள் 60 வயதினை அடைந்ததும் ஓய்வூதியத்தைப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர். வருடமொன்றிற்கு 3600 கோடி ரூபா இந்த நிதியத்திற்கு வந்து சேரும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதே போன்று, வேறொரு ஓய்வூதியத் திட்டமும் முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கு மக்களின் ஓய்வூதியம் என்று பெயர். இதற்கு இலக்கு வைக்கப்படுபவர்கள்- விவசாயிகள், கடற்றொழில், போக்குவரத்து, கட்டுமான நிர்மாணம், மற்றும் சுய தொழில்துறையில் பணியாற்றும் ஏறத்தாழ 30 லட்சம் ஊழியர் கள். இவர்கள் வருடமொன்றிற்கு ரூ. 5000/- வீதம் பத்து வருடத்திற்கு தொடர்ச்சியாக இப் பணத் தினை நிதியக் கணக்கில் வைப்பிலிடவேண்டும். இதிலிருந்து அரசுக்கு 1500 கோடி ரூபா கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. சுபீட்சமான எதிர்காலமென்று மக்களுக்கு ஆசை வார்த்தை காட்டி மக்களிடம் பணம் கறந்து அரசு தனது தேவைகளைப் பூர்த்தி செய்யும் நடவடிக்கை இதுவாகும். இன்று ஊழியர் சேமலாப நிதியத்தில் உள்ள பல கோடி ரூபாவை அரசு தன் இஷ்டம் போலப் பயன்படுத்தி வருவதை உதாரணமாகக் காண்கின்றோம். மகிந்த சிந்தனையின் 2011ம் ஆண்டிற்கான இவ் வரவு செலவுத் திட்டத்தின் பயன்களை அடுத்த வருட முற்பகுதியிலேயே காணக் கூடியதாய் இருக்கும். தனியார் துறையில் இருந்து இளைப்பாறியவர்கள் அவர்களின் சேமலாப நிதியை வங்கிகளில் போட்டு வட்டியைப் பயன்படுத்தி வருகின்றனர். இப்போது வட்டி வீதம் குறைக்கப்பட்டதால் அவர்கள் பெரும்பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். மூத்த பிரைஜகளுக்கு வட்டியில் 20 சதவீதம் போனஸ் வழங்கி நிவாரணம் புரிவதாகக் கூறிப் பின்னர் அதையும் நிறுத்தியுள்ளனர். இதனால் வைப்பிலிட்டவர்களுக்கு வட்டியைக் குறைத்துச் செல்வந்தர்களுக்கும் வங்கிகளுக்கும் அந்தப் பலன் கிடைக்கச் செய்யப்பட்டுள்ளது.

உழைக்கும் போதும் சுரண்டல், இளைப்பாறிய பின்னரும் சுரண்டல். முதலாளித்துவம் வளர்ச்சியடையும் போது நவீன சுரண்டல் நவீன வழிகளில் மேற் கொள்ளப்படுகின்றது.



## தேசியவாதத்தில் நிலவுடைமைச் சிந்தனை

தேசியவாதம் என்பது தேச அரசு என்பதன் உருவாக்கத்தையொட்டி உருவான அரசியல் போக்காககும். தேச அரசு என்பது ஐரோப்பாவில் முதலாளியத்தின் எழுச்சியை ஒட்டியும் முதலாளிய நலன்கள் சார்ந்தும் உருவானது. தேசம் எனப்படுவது நாம் இன்று அறிகிற விதமாக முதலாளியத்தின் முன்னர் இருந்ததில்லை. இனங்கள், மொழிகள், மதங்கள், சாதிகள் போன்ற பல வேறு அடையாளங்கள் இருந்து வந்தபோதும், இன்று தேசமாகக் கொள்ளப்படுகிற எதுவும் அதற்குரிய இன, மொழி அடையாளங்களை உடைய நாடுகளாக இருந்ததில்லை. பேரரசுகள் பல இனங்களையும் மொழிகளையும் தம்முள்ளே கொண்டிருந்தன. ஒரே மொழி பேசும் சமூகங்கள் வெவ்வேறு அரசுகளிடையே பிரிக்கப்பட்டு இருந்துள்ளன. இன்று மூன்றாமுலகம் என்று சொல்லப்படுகிற நாடுகளில் ஏறத்தாழ ஒவ்வொன்றும் கொலனிய, ஏகாதிபத்திய வல்லரசுகளால் நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளையுடையன. பெரிய நாடுகள் எனப்படுகிறவை முந்திய கொலனிய நிர்வாகம் ஒன்றின் தொடர்ச்சியாகவோ கொலனியத்தினதும் ஏகாதிபத்தியத்தினதும் தாக்கங்கட்குட்பட்டு எஞ்சிய பழைய பேரரசு ஒன்றின் தொடர்ச்சியாகவே இருக்கக் காணலாம்.

எவ்வாறு மூன்றாமுலக நாடுகளில் முதலாளியம் கொலனிய, ஏகாதிபத்தியக் குறுக்கீட்டால் உருவானதோ அவ்வாறே முதலாளியத்தின் துணைவிளைவான தேசியமும் அயற் குறுக்கீட்டின் விளைவாக உருவானதே. அந்நிய ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடுகளில் அந்நிய ஆதிக்கத்துக்கு எதிரான எழுச்சிக்கு அந்த நாடுகளில் உருவான புதிய முதலாளி வர்க்கங்கள் தலைமை தாங்கின. அந்த வர்க்கங்களின் நலன்களைத் தேசிய விடுதலை இலக்கம் அடையாளப்படுத்தியது. அந்த வர்க்கங்கள் தலைமை தாங்கி விடுதலையை வெல்ல இயலாத நிலைமைகளில், ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் சார்பாக விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேரடிக் கொலனி ஆட்சியின் கீழிருந்து விடுதலை பெற்ற பின்பு, நாடுகளின் உள்ளிருந்த தேசிய இனங்களதும் சிறுபான்மைச் சமூகங்களதும் அடையாளமும் உரிமைகளும் நலன்களும் அடையாளஞ் சார்ந்த விருத்தியும் பற்றிய கேள்விகள் எழுந்தன. தேசிய முதலாளியம் இவற்றைப் பெருமளவும் அடையாள மறுப்பு, இன ஒடுக்கல் போன்ற வழிகளிலேயே கையாண்டது. தொழிலாளி வர்க்கத் தலைமையிலான ஆட்சிகள் தேசிய இன அடையாளங்களை ஏற்று அங்கீகரிக்கும் அணுகுமுறையை மேற்கொண்டன. மூன்றாமுலகில் தேசிய இனப் பிரச்சினை தீர்ப்பதற்குக் கடினமாக உள்ளதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றிற் சில வெளிக் காரணங்களாகும். அந்நியக் குறுக்கீடு பல வடிவங்களில் தேசிய இனங்களுக்கிடையிலான நல்லுறவைப் பாதிக்கவும் வலிந்து பிரிவினையை இயலுமாக்கவும் செய்துள்ளதை நாம் அறிவோம்.

மூன்றாமுலக நாடுகளில் தேசிய இனப் பிரச்சினையின் வளர்ச்சிக்குக் காரணமாகவும் தீர்வுக்குத் தடையாகவும் உள்ள விடயங்களில் அவற்றின் தேசியவாதங்களின் வர்க்கத்தன்மைக்கும் அவற்றில் ஆதிக்கம் செலுத்துகிற வர்க்கச் சிந்தனைகட்கும் முக்கியமான ஒரு பங்குள்ளது.

ஒரு நாட்டின் முதலாளி வர்க்கமே தேசியத்தை முன்னெடுத்தது என்கிற போது, அந்த முதலாளி வர்க்கம் முன்னேறிய முதலாளிய உற்பத்தி உறவுகளைக் கொண்ட முதலாளிவர்க்கமாக இருந்ததா என்பதும் கவனத்துக்குரியது.

மூன்றாமுலகின் தேசிய முதலாளி வர்க்கம் மட்டுமல்லாது ஏகாதிபத்தியத்தின் நண்பனான தரகு முதலாளியமும் நிலவுடைமைச் சமூகத்தில் அல்லது நிலவுடைமை கூட முழுமையாக விருத்தியடையாத ஒரு சமூகத்தின் மேல்நிலையில் இருந்தோரை அல்லது அந்நிய ஆட்சியின் கீழ் மேல் நிலை பெற்றோரையே கொண்டிருந்தது. நாட்டின் பொருளாதாரத்தை முற்றாக முதலாளிய முறைக்குட் கொண்டுவருகிற தேவை கொலனித்துவத்துக்கோ ஏகாதிபத்தியத்திற்கோ இருக்கவில்லை. பெருமளவும் அவர்களது தேவைகட்கு ஏற்ற அளவிற்கே முதலாளிய உற்டத்தி உறவுகள் வளர்ந்தன. நிலவுடைமைச் சமூகத்துடனான அவர்களது முரண்பாடான உறவு அவர்களது ஆதிக்கம் நிலை பெற்ற பின்பு சமரசமான நிலைக்கு மாறிவிட்டது. அதன் பயனாக நிலவுடைமையாளர்கள் நடுவிலிருந்து ஒரு உள்நாட்டு அதிகாரவர்க்கமும் நிலவுடைமையுடன் (நேரடியான அல்லது மறைமுகமான) நட்புத் தொடர்புகளையுடைய ஒரு முதலாளிவர்க்கமும் உருவாகின. அது மட்டுமல்லாமல் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்த நிலவுடைமைச் சிந்தனையைக் கொலனித்தவ ஏகாதிபத்திய ஆதிக்கங்களின் கீழ் உருவான முதலாளி வர்க்கம் முற்றாக உதற வேண்டிய தேவையும் ஏற்படவில்லை.

எனவே சமூக உறவுகளில் மட்டுமன்றி, விவசாயம், மீன்பிடி போன்ற துறைகளில் இருந்த உற்பத்தி உறவுகளில் மட்டுமன்றி, முதலாளிய நிறுவனங்களிலும் நிலவுடைமைச் சிந்தனையின் ஆதிக்கம் தொடர்ந்தது. அது உலகமயமாக்கலின் கீழும் தொடர்ந்து வருகிறது. இலங்கையில் மிகவும் பின்தங்கிய முதலாளிய உறவுகளைக் கொண்ட பெருந்தோட்டத் துறையில் தொழிலாளர்கள் இன்னமும் பண்ணையடிமை மனநிலையிலிருந்து முற்றாக விடுபடாதுள்ளதையும் தோட்ட எசமானத்துவம் நிலப்பிரபுத்துவத்தன்மையுடன் நடந்து கொள்வதையும் மட்டுமன்றித் தொழிற்சங்கங்கட்கு உள்ளும் நிலவுடைமைச் சமூகத்திற்குரிய பண்புகளைக் காணலாம். முற்றிலும் முதலாளிய உற்பத்தி உறவுகள் உள்ள நிறுவனங்களின் கூட அதிகார மட்டத்திலும் உழைப்போர் நடுவிலும் நிலவுடைமைச் சமூகச் சிந்தனைகளின் தாக்கத்தை நாம் இன்னமும் காண முடியும்.

இலங்கையில் சிங்களப் பேரினவாதம் பழைய சிங்கள் மன்னர்களது மரபு வழி பற்றி அழுத்தந் தெரிவித்துப் பேசுவதும் தமிழ்த் தேசியவாதம் யாழ்ப்பாண இராச்சியம், சங்கிலி முதலான மன்னர்கள் போன்றோரிலிருந்து தமது தேசிய வரலாற்றைக் கட்டியெழுப்புவதும் நிலவுடைமைச் சிந்தனையுடன் உள்ள தொடர்பின் அடிப்படையிலானவையே. இவற்றை இந்தியாவின் இந்துத்துவாதிகள் புராண இதிகாசங்களிலிருந்து வரலாற்றைப் புனைவதுடன் ஒப்பிடலாம்.

இதன் கருத்து இலங்கையின் தேசியவாதிகள் நாட்டைப் பழைய நிலவுடைமை உற்பத்தி முறையை நோக்கி நகர்த்த விரும்புகிறார்கள் என்பதல்ல. அவர்கள் வேண்டுவது முதலாளியம். அதைத் தேசிய பொருளாதாரம் ஒன்றைக் கட்டியெழுப்புகிற நோக்கில் தேசிய முதலாளியமாக உருவாக்குவதில் அவர்கள் தோல்வியடைந்துள்ளனர். ஏகாதிபத்தியத்தை அதன் நககொலனிய வடிவில் எதிர்கொள்ள அவர்கட்கு இயலவில்லை. எனவே, பலவாறான சமரசங்கள் தேவைப்படுகின்றன. அவர்கள் முற்றாக ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்து கொண்டோராகி விட்டனர். எனினும் தங்களது தோல்வியும் ஏகாதிபத்தியத்துடன் செய்து வந்துள்ள சமரங்களும் நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதன் விளைவாக மக்கள் நடுவே எழக் கூடிய எதிர்ப்புணர்வைத் திசை திருப்பப் பேரினவாதம் பயன்படுகிறது. அவ்வாறே, பேரினவாதத்தின் விளைவாக உருவாக அதனிடமிருந்து ஊட்டம் பெறும் குறுந் தேசியவாதமும் தனது மேட்டுக்குடிகளின் நலன் கருதி ஏகாதிபத்திய எதிர்ப்பைத் தவிர்ப்பதுடன் மக்களின் பிரச்சினைகளை முற்றிலும் தேசியவாதக் கண்ணோட்டத்திலேயே அடையாளங் காட்டுகின்றன.

மேற்கூறியவாறு தேசிய இனப் பிரச்சினையில் இனப் பகைக் கோட்பாட்டை முன்னிலைப்படுத்துவதற்கு இடதுசாரி எதிர்ப்பு இரு தரப்புக்களுக்கும் பயன்படுகிறது. அதேபோலப் பண்பாடு, மதம், மொழித் தூய்மை, சாதியம் போன்ற பலவும், மக்கள் மத்தியில் உள்ள ஆதிக்கச் சிந்தனையின் ஒரு முக்கியமான பகுதியாகத் தொடருகிற நிலவுடைமைச் சிந்தனையின் மிச்சசொச்சங்களே. அவை சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ்த் தேசியங்களின் மீது ஆதிக்கம் செலுத்துமாறு கவனித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறான போக்கு தென்னாசியாவிற் பரவலாகக் காணக் கூடிய ஒன்றாகும். தேசிய இனங்களின் வளர்ச்சியும் அவற்றின் தேசிய அடையாளமும் நிலவுடைமை அடையாளங்களை உதற இயலாமைக்கு அவற்றின் தலைமைகளது வர்க்க நலன்கள் முக்கியமான காரணமாக அமைகின்றன. பழமைவாதத்துடனும் அதி நவீன முதலாளியச் சுரண்டல் முறையான ஏகாதிபத்திய உலகமயமாக்கலுடனும் தேசியவாதிகள் பேணுகிற முரணான உறவுக்கு நமது சூழலில் முதலாளியம் தனக்கு முந்திய நிலவுடைமைக் காலத்தின் சமூக உறவுகளிலிருந்தம் சிந்தனைகளிலிருந்தும் விடுபடாமை ஒரு காரணமாகவும் வசதியாகவும் உள்ளதெனலாம்.

- இமயவரம்பன

# உலகப் பொருளாதார நெருக்கடி: முடிவற்ற சூழல்

## நேற்று கிரேக்கம், இன்று அயர்லாந்து, நாளை?

அமெரிக்காவில் 2008 இல் லீமன் பிரதர்ஸ் முதலீட்டு வங்கியின் வீழ்ச்சியோடு தொடங்கிய அமெரிக்கப் பொருளாதார நெருக்கடி மிகக் குறுகிய காலத்தில் உலகப் பொருளாதார நெருக்கடியாக மாற்றமடைந்தது. முதலாளித்துவமும் பொருளியல் வல்லுனர்களும் இது தற்காலிக நெருக்கடிதான் என்று தொடர்ந்து சத்தியம் செய்து வந்தாலும் இது முடிவற்ற சுழலின் தொடக்கம் என்பதை உலக மக்கள் உணர நீண்டகாலம் எடுக்கவில்லை. இந்தப் பொருளாதார நெருக்கடியின் அடுத்த கட்டத்தை நாம் நெருங்கியிருக்கிறோம் என்பதை ஜரோப்பாவின் "பொருளாதாரப் புலி"யான அயஉலாந்தின் நிலை தெளிவுறுத்துகிறது. அயஉலாந்து 1990களின் இறுதிப் பகுதியில் அடைந்த உயர்வான பொருளாதார வளஉச்சி அதற்கு "கெல்ட்டிக் புலி" (Celtic Tiger) என்ற அடைமொழியைக் கொடுத்தது. அயர்லாந்தைக் காப்பாற்ற ஜரோப்பிய ஒன்றியம் பிணையெடுப்பு ஒன்றை மேற்கொண்டுள்ளது. ஏற்கனவே 4000 யூரோ இழப்பைச் சந்தித்திருக்கும் அயர்லாந்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இந்தப் பிணையெடுப்பு மேலதிகமாக 4000 யூரோ இழப்பை ஏற்படுத்தும்.




ஜரோப்பிய ஒன்றியம் செய்துள்ளது அயர்லாந்தின் பிணையெடுப்பு அல்ல. மாறாக, தொழிலாள வர்க்கத்தைப் பலியிட்டு, வங்கிகளும் பிற நிதித்துறை நிறுவனங்களும் பட்டிருக்கக் கூடிய அனைத்து அயர்லாந்துக் கடன்களும் நிதிச் சொத்துக்களும் முழுதாகச் செலுத்தப்படுவதை உறுதி செய்வதற்கு அரசின் அனைத்து வளங்களும் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற சர்வதேச நிதியத் துறைச் சந்தைகளின் கட்டளைகளுக்கு அயர்லாந்து அரசாங்கம் ஒப்புக் கொண்டிருப்பதேயாகும். இந்தப் பிணையெடுப்பு அயர்லாந்து மக்களின் பலத்த

மக்கள் போராட்டங்களில் தொடஉச்சியாக ஈடுபட்டிருந்தனர். எல்லாவற்றையும் மீறி அயஉலாந்தைக் "காப்பாற்றுவது" என்ற போர்வையில் ஜரோப்பிய ஒன்றியம் இந்தப் பிணையெடுப்பைத் திணித்திருக்கிறது. அயர்லாந்தே வேண்டாத பிணையெடுப்பை ஜரோப்பிய ஒன்றியம் செய்வதன் நோக்கம் என்ன? பொருளாதார நெருக்கடி காரணமாக அயர்லாந்துக்கு கடன் வழங்கிய வங்கிகளும் நிதி நிறுவனங்களும் பெரும் சரிவை எதிர்நோக்கியுள்ளன. அவற்றைக் காப்பாற்றுவது மிகவும் முக்கியமானது. அதற்கு அடுத்த பலியாடு அயர்லாந்து. நேற்றைய பலியாடு கிரேக்கம். இந்த இடத்தில் அமெரிக்காவில் வங்கிகள் திவாலாகி மக்கள் தெருவுக்கு வந்தபோது, மக்களுக்கு எந்தவித நிவாரணமும் வழங்காது சரியும் வங்கிகளைக் காப்பாற்ற அமெரிக்க அரசு இதேபோன்றதொரு பிணையெடுப்பைச் செய்ததை நினைவுறுத்தல் பொருத்தம்.

பிரச்சனை இத்தோடு முடிந்துவிடவில்லை. அயர்லாந்தின் பிணையெடுப்பை ஒட்டி, ஜரோப்பிய மண்டலத்தின் நிதி நெருக்கடி போர்த்துக்கலை உலுக்கியுள்ளது. அத்துடன் இத்தாலி, பெல்ஜியம் ஸ்பெயின் ஆகியவற்றின் நாளாந்த நிதிச் செயற்பாடுகளையும் பாதிக்கத் தொடங்கியுள்ளது. அடுத்தது எது என்ற கேள்வியே எல்லோர் மனங்களிலும் இருக்கிறது. இதே வேளை, இங்கிலாந்தில் அரசங்கத்தின் கல்விச் செலவுக் குறைப்புக்களை எதிர்த்து பல்கலைக்கழக மாணவர்களும் பள்ளி மாணவர்களும் நாடு முழுவதும் ஆயிரக்கணக்கில் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். நிலைமை அங்கும் மோசமடைகிறது. பிரான்சில் ஒக்டோபர் மாதத்தில் வெடித்த துறைமுக, எண்ணெயத் துறை வேலைநிறுத்தமானது உயர்நிலைப் பள்ளி மாணவர்களது ஆர்ப்பாட்டங்களின் பரவலான ஆதரவுடன் நடாத்தப்பட்டது. ஜரோப்பா இன்று கொதிநிலையில் உள்ளது. நிச்சயமின்மையே நிச்சயமாக ஒன்றாக இருக்கிறது.

ஜரோப்பிய நாடுகளின் பொருளாதாரங்களோ இன்னும் கடுமையான வீழ்ச்சியைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றன. மக்களது வாங்கும் சக்திக் குறைவினால் தோன்றிய உற்பத்தித் தேக்க நெருக்கடியைச் சமாளிப்பதற்காக வாங்கும் சக்தியைச் செயற்கையாக அதிகரிக்கும் விதத்தில் வங்கிகளின் கடன் தருவதற்கான வட்டி விகிதத்தைக் குறைத்துப் பணப் புழக்கத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகளைப் பல ஜரோப்பிய நாடுகளின் அரசுகள் மேற்கொண்டன. அதன் விளைவாகப் பணவீக்கம் அதிகரித்து, அரசுகள் மிகக்கடுமையான பற்றாக்குறை நிதிநிலை அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. அதாவது முதலாளித்துவச் சந்தை நெருக்கடி, நெருக்கடி நிலையிலும் அதிகபட்ச லாபம் ஈட்ட விரும்பிச் சூதாட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்ட நிதி நிறுவனங்களின் மீள முடியாத நெருக்கடியாக மாறி அதனைச் சமாளிக்க நடவடிக்கை எடுத்த முதலாளித்துவ அரசுகளின் பொருளாதார ரீதியிலான செல்லுபடித்தன்மையையே கேள்விக்குரியதாக்கும் அதிதீவிர நெருக்கடியாகத் தற்போது மாறியுள்ளது. இதன் விளைவே அயர்லாந்தின் நெருக்கடியும் பிணையெடுப்பும். இது ஊக வணிகத்தின் கோரப்பிடியில் இருக்கும் ஜரோப்பிய முதலாளித்துவப் பொருளாதாரத்தை மிகமிகத் தற்காலிகமாகக் காப்பதற்கான ஏற்பாடன்றி மக்கள் நல நோக்கிலான நடவடிக்கை அல்ல.

வளர்ச்சியை உறுதி செய்து அதிலும் வலுவானதாக இருக்கும் அமெரிக்கப் பொருளாதாரத்தை எதிர் கொள்வது என்ற நோக்கிற்காக உருவாக்கப்படவில்லை. அமெரிக்கப் பொருளாதாரத்தை எதிர்கொள்வதற்காக என்ற பெயரில் ஏற்படுத்தப்பட்டாலும் ஒன்றை ஒன்று ஏப்பமிடுதல் என்ற முதலாளித்துவ போட்டியே முக்கியத்துவம் பெறுகிறது. இதனால் தான், ஜரோப்பிய ஒன்றியத்தின் சிறிய அங்கத்துவ நாடுகளான கிரேக்கம், அயர்லாந்து (இனி பெல்ஜியம்) போன்றவை

பிரான்ஸ் ஆகியவற்றிடையே இதைத் தீர்ப்பதற்கான ஒருமித்த கருத்துக் கிடையாது. இரண்டு நாடுகளும் தங்கள் தங்கள்

போடுகின்றன. இன்றைய முதலாளித்துவம் பொய்யான நம்பிக்கைகளை உருவாக்கிப் பராமரிப்பதை அடிப்படையாகக் கொண்டே இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த நம்பிக்கையை எந்த அடிப்படையும் இல்லாது பராமரித்துப் பேணிக்

அவசியம் என்பதாகும். இந்தப் பொய்யான நம்பிக்கைகள் முடிவுக்கு வருவது உறுதி என்பதை நடக்கும் நிகழ்வுகள் உறுதிப்படுத்துகின்றன. கிரேக்க நாட்டின் பொருளாதாரத்தின் மீட்சிக்கு என்ற பெயரில் 45 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளதன் மூலம் ஜரோப்பிய யூனியன் இதைத்தான் செய்தது. ஆனால் கிரேக்கப் பொருளாதாரம் மீள்வதற்கான எந்த அறிகுறியும் இல்லை.

அயர்லாந்துக்கு வழங்கப்பட்டுள்ள பிணையெடுப்பின் விளைவாக அயர்லாந்து தான் வாங்கும் கடனுக்கு

மற்ற ஆதாரங்களில் இருந்து வங்கிகளுக்குக் கொடுக்க வேண்டும். 2014க்குள் இக் கடனுக்கான வட்டிப் பணம் ஆண்டிற்கு 2.5 பில்லியன் யூரோவிலிருந்து இருந்து 6 பில்லியன் யூரோவாக அதிகரித்துவிடும். இதில் பலியாகப் போவது

உழைப்பாளஉகள் அயர்லாந்தின் தலைநகர் டப்ளினில் பிணையெடுப்பிற்கு எதிராக நடத்திய ஆர்ப்பாட்டம் குறிப்பிடத்தக்கது. இப் போராட்டங்கள் ஏனைய நாட்டு உழைக்கும் மக்களுக்கு உத்வேகத்தையும் எதிர்காலம் பற்றிய அபாய அறிவிப்பையும் அளித்திருக்கிறது. மக்கள் ஓரணியில் திரண்டு போராடவேண்டிய தேவையையே இது உணர்த்துகிறது.

## உலக அரங்கின் நாட்குறிப்பு




### கூத்தாண்டவரே....கதி மோட்சம்



அமெரிக்காவிலிருந்து வெளிவரும் நியூஸ்வீக் சஞ்சிகை, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் இந்திய விஜயத்தின் பின் வெளியிட்ட இதழின் அட்டைப் படத்தில் ஒபாமா நடராஜர் உருவில் இருப்பது போன்றதொரு அட்டைப்படத்தைப் பிரசுரித்திருந்தது. இதற்கு இந்தியாவில் இருந்தும் பிறநாடுகளில் உள்ள இந்துக்களிடமிருந்தும் கண்டனம் எழுந்தது. அகில இலங்கை இந்து மாமன்றம் இது குறித்து வெளியிட்ட அறிக்கையில் சிவபெருமானின் நடராஜர் வடிவம் எதைக்குறிக்கிறது என்று விளக்கப்பட்டிருந்தது. "உலகம் பதற்றத்திலிருந்து விடுபடவும் பக்தர்களின் துன்பங்கள் நீங்கவும் சிவபெருமானை அவரின் நடன வடிவமான நடராஜப் பெருமானாக இந்துக்களாகிய நாம் வழிபடுகிறோம். நடராஜப்பெருமானின் தாண்டவமானது தீமைகளை இது அழிக்கிறது. அறியாமையை அகற்றுகிறது. உலகின் இருளை அகற்றுகிறது. உலகைப் படைத்து, காத்து, அழிப்பவரென பல்வேறு அம்சங்களில் நாம் நடராஜப்பெருமானை வணங்குகிறோம்." இதை வாசிக்கும் போது அமெரிக்காவும் ஒபாமாவும் உலகெங்கும் செய்வதற்கும் நடராஜப்பெருமான் செய்வதாக சொல்லப்படுவதற்கும் வித்தியாசங்கள் இல்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. இன்றைய உலகின் மிக அதிகாரம் மிக்க பதவியை அலங்கரிப்பவரை நடராஜப்பெருமானாக சித்தரித்தது குறித்து இந்துக்கள் பெருமைப்படவல்லவா வேண்டும். எல்லாவற்றுக்கும் அமெரிக்காவே கதி மோட்சம் இருக்கும் போது ஒபாமாவை இவ்வாறு சித்தரித்தது தவறாகுமா? இதற்கான சரியான பதிலை மன்மோகன் சிங்கோ, பாரதிய ஜனதா கட்சியோ அல்லது நாடுகடந்த தமிழீழத்தை நடாத்துகிறவர்களாளோ தான் தரமுடியும். நிற்க......

விக்கிலீக்ஸ் வெளியிடுகின்ற உலகெங்கிலுமான அமெரிக்க தூதரகங்களில் இருந்து கசிந்த இரண்டரை இலட்சத்திற்கும் மேற்பட்ட இரகசிய ஆவணங்கள் அமெரிக்காவின் உண்மை முகத்தையும் அவர்களது ஜனநாயக முகமூடியையும் தோலுரித்துக் காட்டுகின்றன. உலக நாடுகளில் அமெரிக்கா செய்துள்ள நாசகார வேலைகள், கொலைகள் என எல்லாவற்றையும் இந்த ஆவணங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. விக்கிலீக்ஸ் அமெரிக்க வெளியுறவுத் துறை செயலரான ஹிலாரி கிளின்டன் பிற நாட்டு அரசாங்கங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பைச் சேர்ந்த அதிகாரிகளின் கடன் அட்டை, விமானப் பயண சலுகைக் கணக்கு எண்கள் தொடங்கி இணைய கடவுச் சொற்கள், வேலை கால அட்டவணைகள் மற்றும் இன்னும் மரபணு மாதிரிகள் வரையான தகவல்களும் உட்பட்ட தனிநபர் விவரங்களை சேகரிப்பதற்கு அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட ஆவணமொன்றையும் வெளியிட்டிருக்கிறது. இந்த ஆவணங்கள் தொடர்பில் மறுப்பெதனையும் தெரிவிக்கவில்லை. மாறாக விக்கிலீக்ஸ் வெளியிடுகின்ற ஆவணங்கள் பற்றிக் கருத்துத்தெரிவித்த அமெரிக்க வெளியுறவுத் துறை செயலர் ஹிலாரி கிளின்டன் "இவை அமெரிக்க இராஜதந்திர அலுவலர்கள் நாம் அவர்களிடம் இருந்து எதிர்பார்ப்பதைத் தான் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை காட்டுவதாக" சொல்லியிருக்கிறார்.

விக்கிலீக்ஸினால் கசியவிடப்பட்டுள்ள ஒரு ஆவணமானத ஷோண்டுராஸில் ஜனாதிபதி மானுவேல் செலாயா ஆட்சி கவிழ்க்கப்பட்டதில் டகுசிகல்பாவில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் முக்கியமான பங்கு இருந்ததையும் இந்த கவிழ்ப்புக்கான அமெரிக்க ஆதரவு மற்றும் மறைப்பு வேலையையும் அத்துடன் அதனைத் தொடர்ந்து நடந்த அடக்குமுறையையும் அதற்கான அமெரிக்க ஆசீர்வாதத்தையும் ஆவணப்படுத்துகிறது. இவை எல்லாம் மீண்டும் மீண்டும் ஒரே செய்தியைத்தான் சொல்லிக்கொண்டிக்கிறது. அமெரிக்காவோ வேறு எந்த நாடோ எடுக்கின்ற முடிவுகளும் செய்கின்ற செயல்களும் அவர்களின் சுயநலன் சார்ந்தவையே அன்றி வேறெதுவுமல்ல. இதை மக்கள் நலன்களை முன்னிறுத்திச் செயற்படுகின்ற அனைவரும் கவனத்தில் கொள்ளவேண்டும். அந்நியத்தயவில் தங்கியிருப்பது எவ்வளவு அபத்தமானது என்பதை விக்கிலீக்ஸினால் கசியவிடப்பட்டுள்ள ஆவணங்கள் உறைக்கச் சொல்கின்றன.

இதேவேளை 'பேச்சுச்சுதந்திரம்', 'ஊடகச்சுதந்திரம்', 'ஜனநாயகம்' என்றெல்லாம் வாய்கிழியப் பேசுகிற அமெரிக்கா, உலகெங்கும் ஜனநாயகத்தைப் பரப்புவதையும் பேச்சுச் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்காகவே இறைவனால் படைக்கப்பட்டதாக சொல்லுகின்ற அமெரிக்கா விக்கிலீக்ஸ் தொடர்பில் என்ன செய்கிறது. வெள்ளை மாளிகை செய்தித்துறை செயலாளர் ரோபர்ட் கிப்ஸ் விக்கிலீக்ஸ் குற்றம் புரிந்துள்ளது என்று எந்த விசாரணையும் இன்றி அப்பட்டமாக அறிவிக்கும் வகையில், "விக்கிலீக்ஸும் இது போல் மக்களுக்கு தகவல்கள் கொடுப்போர் அனைவரும் குற்றவாளிகள்" என்று கூறியுள்ளார். விக்கிலீக்ஸை பயங்கரவாத அமைப்பாக அறிவிக்க வேண்டும் என்றும் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக விளங்குகிறது என்றும் கோஷங்கள் திட்டமிட்டு எழுப்பப்படுகின்றன. விக்கிலீக்ஸ் உலகெங்கும் உள்ள அமெரிக்க மக்களின் உயிர்களுக்கு ஆபத்தை விளைவித்துள்ளது என்ற பிரச்சாரம் மூலம் அமெரிக்கத் தேசியவாதம் விக்கிலீக்ஸுக்கு எதிராக உசுப்பிவிடப்பட்டுள்ளது. பிரான்ஸ் அரசு விக்கிலீக்ஸ் இணையத்தளத்தைத் தடைசெய்துள்ளது. பிரான்சினது முன்னுதாரணத்தைப் பின்பற்றுமாறு அமெரிக்கா பிற நாடுகளையும் வற்புறுத்தி வருகின்றது. அமெரிக்கா பேசுகின்ற 'பேச்சுச்சுதந்திரம்', 'மனித உரிமைகள்', 'ஜனநாயகம்' சந்தி சிரிக்கிறது. பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை.

விக்கிலீக்ஸ் வெளியிடுகின்ற ஆவணங்களை வாசிக்கும் போது நியூஸ்வீக் சஞ்சிகை வெளியிட்ட அட்டைப்படத்தையும் கூத்தாண்டவரையும் ஏனோ நினைக்காமல் இருக்க முடிவதில்லை.

# வழமைக்கு மாறான விமர்சனத் தன்மையை க. கைலாசபதி அறிமுகப்படுத்தினார்

**பேராசிரியர் கேசவன் வேலுதாட் (தில்லி பல்கலைக்கழகம். இந்தியா) (Frontline 05 நவம்பர் 2010 சஞ்சிகையில் வெளிவந்த நூல் விமர்சனக் கட்டுரையின் மொழிபெயர்ப்பு)**

சங்க இலக்கியத்தை ஆய்வு செய்வதில் வழமைக்கு மாறான விமர்சனத் தன்மை கொண்ட மனப்பாங்கினைக் க. கைலாசபதி அறிமுகப்படுத்தினார்.

சென்ற நூற்றாண்டின் தொடக்கமளவிலே தான் சங்க இலக்கியமெனப் பொதுவாக வழங்கும் தமிழ் இலக்கிய நூல் தொகை மறைந்து போகும் நிலையிலிருந்து வெளியுலகுக்குக் கொண்டு வரப்பட்டது. இதன் விளைவாக, அதுவரை, சிறப்பாகத் தமிழ்நாட்டில், ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த தமிழ் இலக்கியம் பற்றிய கோட்பாடுகள் தலைகீழாக்கப்பட்டன எனலாம். இலங்கையிலோ பழைய முறைப்படி சைவ இலக்கியம் தொடர்ந்தும் பற்றுடன் பேணப்பட்டு வந்தது. சங்க இலக்கியம் வெளியுலகிற்குக் கொண்டு வரப்பட்டதும் தென்னிந்தியாவின் வரலாற்றையும் பண்பாட்டையும் விளக்கிக் கொள்வதில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கியது. இது உண்மையான ஒரு புரட்சியே. செம்மொழிகள் எனக் கருதப்படும் சமஸ்கிருதம், கிரேக்கம், லத்தீன் ஆகிய மொழிகளுடன் தமிழுக்கும் இடமளிக்கப்பட வேண்டும் என்று இப் புரட்சி கோரியது.

இம்முக்கிய நிகழ்ச்சியின் விளைவுகளுள் ஒன்று தென்னிந்தியாவின் தொல்கால வரலாற்றை கூச்சமின்றிப் புகழ்பாட வைத்தமையாகும். தேசியவாத எழுத்தாளர் 'செம்மொழிசார்' காலத்தில் அடையாளங் காணும் ஒவ்வொரு கூறும் இதில் சேர்க்கப்பட்டது. இப் போக்கினால் வரலாறு என்பது இறந்த காலத்தை பற்றியதாகக் கருதப்படுவது குறைந்து, நிகழ்காலத்தைப் பற்றியதாக கருதப்படுவது கூடியது. வரலாற்றுச் சான்று என்பது தொல்லை கொடுக்கும் ஒன்றாக, ஒரு தடங்கலாக மாறியது. நூல்களை அவற்றுக்குரிய பின்னணியில் வைத்து விளக்குவது கேள்விப்படாத ஒன்றாகியது. இங்கொரு வரலாற்றாசிரியர் சிறிதளவாவது இறுக்கமான ஆய்வுமுறையைக் கைக்கொண்டால், அல்லது அங்கொரு இலக்கிய விமர்சகர் ஒப்பிலக்கியம் பற்றிச் சிறிதளவாவது உணர்ந்து கொள்ளும் பண்பைக் காட்டினால் அவர்கள் துரோகிகள் என்று எண்ணப்பட்டனர். அது மட்டுமன்றி, அவர்களைப் பற்றித் தெரிவிக்கப்பட்ட விமர்சனமும் கல்விசார் கண்டனம் என்று கூறுவதற்கில்லை.

இத்தகைய, கண்மூடித்தனமாகத் தன்நாட்டுப் புகழ் பாடும் பண்பை அண்மிக்கும் நிலை காணப்பட்ட பின்புலத்திலே தான் கனகசபாபதி கைலாசபதி ஆற்றிய பணியை வைத்து மதிப்பிட வேண்டும். சங்க இலக்கியம் வெளியுலகுக்குக் கொண்டு வரப்பட்டதால் ஏற்பட்ட புரட்சியை ஒத்ததாகத் தொல்கால இலக்கியத்தையும் அதன் அடிப்படையில் ஆராயப்பட்ட சமூகத்தையும் பற்றிய ஆய்வில் கைலாசபதி தொடக்கி வைத்த வழமைக்கு மாறான. விமர்சன ரீதியான மனப்பாங்கு அமைந்தது.

கைலாசபதியும் அவரைப் போன்று ஆதித் தென்னிந்திய வரலாற்றை ஆய்வு செய்யப் பெரிதும் தொண்டாற்றிய அறிஞர்களாகிய கார்த்திகேசு சிவத்தம்பி, சுதர்சன் செனவிரத்ன, (இந்நூலின் பதிப்பாசிரியர்) கா. இந்திரபாலா போன்றோரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பது ஒருவேளை இதனைப் புரிந்து கொள்ள உதவும் சிறப்பம்சமாக அமையலாம். ஏனெனில் இவர்கள் அங்கு சங்க இலக்கியத்தை வழிபாடுக்குரிய ஒன்றாகக் கருதாத மரபு ஒன்றின் வழிவந்தவர்கள்.

கைலாசபதியின் ஆய்வு ஒரு வகையில் வழமைக்கு மாறானதாகும். அவருடைய நூலாகிய Tamil Heroic Poetry வெளியிடப்பட்ட போது அதில் அடங்கிய பொருள் தமிழகத்தின் பெரும் புகழை எடுத்துரைப்பதில் வல்லோராய் இருந்தவர்களுக்குத் திகைப்பை ஊட்டியது.

'சங்கச் செய்யுள் என்ற தலைப்பு ஒரு தவறான சொல் வழக்கு' என்ற வார்த்தைகளுடன் அவரது நூல் தொடங்கியமை ஒரு வகையில் திகைப்பூட்டும் ஒரு கூற்றாகத் தோன்றியது. அதைத் தொடர்ந்து அவர் கூறியது என்னவெனில், வாய் மொழி இலக்கியத்தை ஆய்வு செய்ய உதவும் நுட்பங்களைப் பயன்படுத்தி வீரயுகக் கவிதை (Heroic Poetry) என வர்ணிக்கப்படும் செய்யுளுக்குரிய வரம்புகளுக்குள் வைத்து ஆதித் தமிழ் இலக்கியத்தை ஆய்வு செய்வது பொருத்தமானதாக அமையும் என்பதாகும். எச்.எம். சட்விக், என்.கே. சட்விக் ஆகியோர் எழுதிய The Growth of Literature (இலக்கிய வளர்ச்சி) என்ற பாரிய படைப்புக் காட்டிய நெறியைப் பின்பற்றியதோடு, தியூட்டோனிய, கிரேக்க, ஐஸ்லாந்திய, ஸ்லாவோனியா, சமஸ்கிருத, சுமேரிய மற்றும் ஆபிரிக்க வாய்மொழி இலக்கியம் பற்றிய ஆய்வுகளின் பெறுபேறுகளையும் பின்பற்றித் தொல்காலத் தமிழ் கவிதையானது அடிப்படையில் வாய்மொழிக் கவிதையின் பண்புகளைக் கொண்டது எனக் கைலாசபதி விளக்கிக் காட்டினார். அத்துடன், ஹோமருடைய கிரேக்கக் காவியங்களை ஆய்வு செய்து மில்மன் பரி வெளியிட்டவற்றையும் கைலாசபதி தனது ஆய்விற் பயன்படுத்தினார். வீர யுகக் கவிதையை ஆய்வு செய்ய உதவும் ஒரு 'சர்வதேசக் கோட்பாடு' என்ற நிலையை மில்மன் பரியின் ஆய்வுப் பெறுபேறு பெற்றிருந்தது.

தொல்காலப் பாணர்களையும், பாணருக்குரிய மரபுகளையும், சமூகத்தில் அவர்கள் தொழிற்பாடுகளையும் அவர்கள் படைத்த செய்யுள்களின் காலத்து உள்ளுணர்வையும் விளக்கிக் கொள்ளச் சட்விக் தம்பதிகள் செய்த ஆய்வும் மில்மன் பரியின் ஆய்வும் சங்கமித்துக் கைலாசபதிக்கு உதவின. தென்னிந்தியாவில் தமிழ்ப் பெருமையைக் கூறி நின்றோருக்குக் கைலாசபதியின் ஆய்வு முடிவுகளை ஏற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. கைலாசபதியின் நூல் பல்லாண்டுகளாகத் தென்னிந்தியாவில் பெரும்பாலும் இருட்டடிப்புக்கு இலக்காகியதில் வியப்பில்லை. அன்னார் 49 வயதாகிய பருவத்தில் அறிஞர் உலகம் அவரை இழந்தது.

இங்கு விமர்சனத்திற்கு எடுக்கப்படும் நூலான Early Historic Tamil Nadu, பேராசிரியர் கைலாசபதி மறைந்து 25 ஆண்டுகள் நிறைவு பெற்றபோது, அவரை நினைவு கூர வெளியிடப்பட்ட ஒரு கட்டுரைத் தொகுப்பாகும். கைலாசபதியுடன் கூடிப் பணியாற்றிய பேராசிரியர் கார்த்திகேசு இந்திரபாலா ஒன்று திரட்டிய கட்டுரைகளைக் கொண்ட இந் நூலில் ஐந்து பிரபல அறிஞர்களுடைய கட்டுரைகளுடன், கைலாசபதியின் வாழ்க்கை பற்றிய ஒரு சிறு குறிப்பும், கைலாசபதியின் சிறந்த படைப்பாகிய Tamil Heroic Poetry என்ற நூலில் இருந்து (சில பகுதிகள் நீக்கப்பட்டுப்) பெறப்பட்ட ஓர் அத்தியாயமும் இடம்பெறுகின்றன. அத்துடன், இக்காலத்தில் தென்னிந்திய வரலாற்றை எழுதியோர் பற்றிய நல்லதொரு ('இன்னார் இன்னார்' என்று கூறக் கூடிய பெயர்களைக் கொண்ட) நூற்பட்டியல் ஒன்றும் இடம்பெற்றுள்ளது. கைலாசபதிக்கு அஞ்சலி செலுத்தி அவரை நினைவு கூர வரிசையில் நிற்கும் நூலாசிரியர்களின் பெயர்களைக் கொண்ட இப் பட்டியலிற் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய பல பெயர்கள் காணப்படுகின்றன. கைலாசபதியின் வாழ்க்கை பற்றிப் பல தகவல்களைத் தந்து, மிகவும் தனிப்பட்ட தொடர்பை வெளிப்படுத்தும் கட்டுரை ஒன்றுடன் இந் நூல் தொடங்குகிறது.

இதைத் தொடர்ந்து பதிப்பாசிரியர் எழுதிய அறிமுக உரை இடம் பெறுகிறது. தென்னிந்திய வரலாற்றின் தொல்காலம் பற்றித் தற்பொழுது அறியப்பட்டுள்ளவற்றைச் சுருக்கமாக எடுத்துக் கூறும் இந்த அறிமுகவுரை இவ் வரலாறு பற்றிக் கிடைக்கும் முக்கியமான படைப்புக்களை வைத்து எழுதப் பட்டுள்ளது. புகழ் பூத்த தொல்காலத் தமிழக வரலாறாக வழமையாக எழுதப்பட்ட வரலாற்றைத் திருத்திக் கூறும் வரலாறாக இது இப்பொழுது கிடைத்துள்ளது. இச் சிறந்த மேலோட்டப் பார்வையைத் தொடர்ந்து, கைலாசபதியின் Tamil Heroic Poetry நூலின் முதல் அத்தியாயத்துடன் கட்டுரைத் தொகுதி தொடங்குகிறது. இந்த அத்தியாயம், முன் கூறியவாறு, இந் நூலுக்காகச் சில பாகங்கள் நீக்கப்பட்ட கட்டுரையாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆதித் தமிழ் இலக்கியம் பற்றிக் கைலாசபதி எழுதியவற்றிலிருந்து ஒரு பாகம் இந் நூலில் சேர்க்கப்பட்டமை பாராட்டுக்குரியதாக இருந்த போதிலும், சேர்க்கப்பட்ட இப் பாகம் பற்றிய இரண்டொரு வினாக்களை எழுப்ப முடியும். இப் பாகம் ஆதித் தமிழர் தம் இலக்கியத்தைப் பற்றிய மேலாய்வு மட்டுமே. கைலாசபதி ஒரு புதிய வழியிற் சென்று தெரிவித்த முடிவுகளைக் காட்டுகிற ஒரு பாகம் என்று இதனைக் கொள்ள முடியாது. இப் பெரிய முன்னோடி ஆய்வாளர் உண்மையில் சாதித்தது என்ன என்பதைச் சுவைத்து உணர அவர் நூலின் வேறெந்த அத்தியாயத்தையும் சேர்த்திருக்கலாம். சிறப்பாக, மூன்றாம் அத்தியாயம் (Bards and Bardic Tradition- பாணரும் பாணர் மரபுகளும்) அல்லது நாலாம் அத்தியாயம் (Technique of Oral Verse Making- வாய் மொழிக் கவிதையாக்க நுட்பங்கள்) அல்லது ஆறாம் அத்தியாயம் (The World of Heroes- வீரர் உலகம்) கூடப் பொருத்தமானதாய் இருந்திருக்கும். மேலும், சேர்க்கப்பட்ட அத்தியாயத்திலிருந்து தொல்காப்பியம் பற்றி எழுதிய குறிப்பையும் புறப் பொருள் வெண்பாமாலை பற்றிய குறிப்பையும் நீக்கியதை நியாயப்படுத்த முடியாது.

அடுத்துத், தமிழர் என்ற இன அடையாளம் எழுச்சி பெற்றமை தொடர்பான பிரச்சினை பற்றிக் கா. இந்திரபாலா எழுதியுள்ளார். ஓர் இனக் குழுவாகவோ, அரசியல் சார்ந்த குழுவாகவோ சமயஞ் சார்ந்த குழுவாகவோ அல்லாது, அவற்றிலிருந்து வேறுபட்ட தன்மை கொண்ட குழுவாகத் தமிழர் என்று அடையாளங் காணப்பட ஒரு குழு அக் காலத்தில் இருந்தது என்பது அவருடைய வாதமாகும். தமிழர் என்போர் 'பிறர்' எனக் குறிப்பிடத்தக்கவர்களில் இருந்து. அதாவது, 'மொழி பெயர் தேசம்' (பிற மொழி பேசப்படும் இடங்கள்) எனப்படும் இடத்தில் வாழ்வோரில் இருந்து வேறுபடும் குழுவினர், தமிழ் மொழி பேசும் ஓர் இனக்குழுவினர் என்று அடையாளங் காணக் கூடிய, இனக் குழு ஒன்று பற்றிய குறிப்பு எதுவும் கிடைக்காத போதிலும் தெளிவாக அடையாளங் காணக் கூடிய தமிழ் பேசுவோர் வாழும் நிலப் பகுதி ஒன்று. 'தமிழ் கூறு நல்லுலகம்' எனப்படும் இடம், ஆதி வரலாற்று மூலங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள 'உலகம்' ஐயத்துக்கு இடமன்றிப் பல்வேறு இனக்குழுக்கள், அரசியல் அமைப்புக்கள் மற்றும் பல்வகைச் சமயங்களைச் சேர்ந்தோர் வாழும் இடமாக இருந்தது. எனினும், அவை அனைத்தையும் ஒன்று கூட்டும் வகையில் தமிழர் என்ற ஒரு தனி அடையாளம் உருவாகுவதை இவ் வேறுபாடுகள் தடுத்து நிறுத்தவில்லை. இவ் வேறுபாடுகளை மேவிப் பழங்குடி, குலம் ஆகியவற்றின் எல்லைகளைக் கடந்து, ஆதி வரலாற்றுக் காலத்தில் தமிழ் மொழியை இனக்குழுவின் அடையாளக் குறியாகக் கொண்டு ஒரு பெரிய குழு எழுச்சி பெறத் தொடங்கியது. இக் காலப் பகுதியை முக்கிய மாற்றங்கள் ஏற்பட்ட ஒரு காலமாகக் கருதுவதற்கு இது இன்னொரு காரணமாகும்.



இந்நூலின இறுதியில் நான்கு பிற்சேர்க்கைகள் உள்ளன. அவையாவன: பட்டினப்பாலையினதும் புறநானூற்றுச் செய்யுள் ஒன்றினதும் ஆங்கில மொழி பெயர்ப்பு, மூன்று தமிழ்-பிராமிக் கல்வெட்டுக்களின் படங்களும் மொழி பெயர்ப்பும், தமிழ்ச் சங்கங்கள் பற்றி (இறையனார் அகப் பொருளுரையில்) உள்ள கதை- பி.டி. ஸ்ரீனிவாச ஐயங்கார் மொழிப் பெயர்ப்பு, மற்றும் வானவரம்பன்/தேவாநம்பிய என்ற விருதுகள் பற்றிய ஒரு குறிப்பு. இவை அனைத்தும் இந் நூற் பொருளுடன் தொடர்புடையவை. தமிழப் பாடல்களில் உள்ள வானவரம்பன் என்ற விருதை அசோகனுடைய தேவநம்பிய என்ற விருதுடன் சமன்படுத்துவதற்காக காட்டப்பட்டுள்ள வாதத்தை முழுமையாக ஏற்றுக் கொள்வதில் கஸ்ரம் இருக்கலாம். அண்மைக் காலத்தில் இந் நூற் பொருள் தொடர்பாக எழுதப்பட்டவற்றுள் தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள்/கட்டுரைகள் ஆகியவற்றின் பட்டியல் ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது. கைலாசபதி எழுதியவை பற்றிய நூற் பட்டியல் ஒன்று சேர்க்கப்பட்டிருந்ததால் மிகவும் பொருத்தமாகவும் பயனுள்ளதாகவும் இருந்திருக்கும்.

தொல்காலத் தமிழ் வரலாற்றினதும் சமூகத்தினதும் தன்மை பற்றிப் பெருமளவு மீளாய்வு செய்யக் காரணமாயிருந்த முன்னோடி ஒருவருக்குப் பொருத்தமான முறையில் நினைவஞ்சலி செலுத்துவதில் இந் நூலின் பதிப்பாசிரியர் சிறந்த பணியாற்றியுள்ளார்.

..........................................

விமர்சிக்கப்பட்ட நூல்

Early Historic Tamil Nadu c300 BCE- 300CE: Essays Commemorating Prof K. Kailasapathy on the Twenty - Fifth Anniversary of his Death, Edited by K. Indrapala. Kumaran Book House, Colombo- Chennai.

# தேசிய கலை இலக்கியப் பேரவை 37 வருட நிறைவின் நினைவாக!

2010 டிசம்பர் மாதத்துடன் தேசிய கலை இலக்கியப் பேரவை தனது முப்பத்தியெட்டாவது வயதினுள் காலடி எடுத்து வைக்கின்றது. 1973ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சமூக மாற்றத்திற்கான கலை இலக்கியப் பணியிலான பண்பாட்டுத் தளத்தில் முன்னெடுக்கும் அடிப்படையிலேயே தேசிய கலை இலக்கியப் பேரவை தோற்றுவிக்கப்பட்டது. புதிய ஜனநாயகம். புதிய வாழ்வு. புதிய பண்பாடு என்பனவற்றை அடியாதாரமாகக் கொண்ட சமூக மாற்றத்திற்கான பயணத்தின் மக்கள் கலை இலக்கிய தாகம் கொண்ட அனைவரையும் ஒன்றிணைத்து பரந்து பட்ட தளத்தில் செயற்படுவதையே தேசிய கலை இலக்கியப் பேரவை முன்னெடுத்து வந்துள்ளது. அதன் வழியில் தாயகம் சஞ்சிகையை 1974ம் ஆண்டு முதல் பல்வேறு நெருக்கடிகள் மத்தியிலும் வெளியிட்டு வந்திருக்கிறது.

இவ்வாறு சமூக அடிப்படையும் மக்கள் சார்பு நிலைப்பாடும் கொண்ட கலை இலக்கியக் கொள்கையை முன்னெடுப்பதில் ஆரம்ப ஆலோசனை வழிகாட்டல் வழங்கியவர்களின் பெயர் வரிசை நீண்டதாகும். அவர்களில் முக்கியமானவர்கள் மறைந்தும் மறையாது நமது நெஞ்சங்களில் வாழ்ந்து இன்று முன்னுதாரண வழிகாட்டிகளாக இருந்து வருகிறார்கள். இத்தகையோரின் முதன்மையானவர்களாக பேராசிரியர் கைலாசபதி, தோழர் கே.ஏ. சுப்பிரமணியம், மூத்த கவிஞர் முருகையன் ஆகிய மூவரும் குறிப்பிட வேண்டியவர்கள். இவர்களுடன் இணைந்து மக்கள் கலை இலக்கியப் பயணத்தில் வழிநடந்த பலர் இன்று எம் மத்தியில் இருந்து மறைந்து விட்டார்கள். அவர்கள் அனைவரையும் நாம் இவ்வேளை மிகுந்த மரியாதையுடன் நினைவு கூருகின்றோம்.

நமது கடந்து வந்த கலை இலக்கியப் பயணம் கடினமான பல சவால்களைத் தாண்டி வந்துள்ளது. அவை ஒவ்வொன்றையும் கடந்து வருவதில் நமது செயற்பாட்டாளர்களும் படைப்பாளிகளும் கலைஞர்களும் விட்டுக் கொடுப்புகள், சமரசங்கள், சோரம் போதல்கள் இன்றி செயல்பட்டு வந்திருக்கிறார்கள்.

இன்றைய ஏகாதிபத்திய உலகமயமாதல் சூழலில் நமது நாட்டின் பண்பாட்டுத்தளம் சகல முனைகளிலும் திட்டமிட்டே சீரழிவுகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றது. இவற்றின் மத்தியில் மக்கள் கலை இலக்கியத் தளத்தை வலுப்படுத்தி முன்னெடுக்க வேண்டியது நமது கடமையாகும். இதனை தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஊடாக முன்னெடுப்பதற்கு அனைத்து நேர்மையான படைப்பாளிகளும் கலைஞர்களும் சமூக அக்கறை மிகுந்த செயற்பாட்டாளர்கள் உறுதி கொள்வது அவசியமாகும்.

**தேசிய கலை இலக்கிய பேரவையின்**

37வது ஆண்டு நிறைவும்

பேராசிரியர். க. கைலாசபதியின்

28வது ஆண்டு நினைவுச் சொற்பொழிவு

பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம்

"இலங்கையில் தமிழ் மொழியின் தொன்மை"

19.12.2010 (ஞாயிற்றுக்கிழமை)

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

நவம்பர் - டிசம்பர் 2010

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org

## கல்விக் கட்டணத்தை கூட்டாதே!



பிரித்தானிய அரசு கல்விக் கட்டணத்தை உயர்த்தியமைக்கு எதிராக லண்டனில் லட்சக்கணக்கான மாணவர்கள் கோபாவேசத்துடன் ஆர்ப்பட்டம்







காணாமல் போதலுக்கு எதிரான லண்டன் சர்வதேச மாநாடு: பு.ஜ.மா.லெ.கட்சியின் சர்வதேச அமைப்பாளர் தோழர் இ.தம்பையா கலந்து கொண்டார்




மேலே கொழும்பில் **தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தின் 21வது நினைவு தினக் கூட்டம்** கீழே யாழ்ப்பாணத்தில்




தேசிய கலை இலக்கிலயப் பேரவையின் 37வது ஆண்டு நிறைவும் பேராசிரியர் க.கைலாசபதியின் 28வது ஆண்டு நினைவும் கொழும்பில் நடைபெற்றது அதில் தலைமை உரையினை பேராசிரியர் சி.தில்லைநாதனும் தொடக்கவுரையை கலாநிதி சி.சிவசேகரமும் நினைவுப் பேருரையை பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் (இலங்கையில் தமிழ்மொழியின் தொன்மை) என்ற தலைப்பில் உரையாற்றினர். சோ.தேவராஜா தேசிய கலை இலக்கியப் பேரவையின் 37வது ஆண்டு நிறைவுரையும் ஆற்றப்பட்டதனையும் கலந்து கொண்ட வர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம் .




வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.